


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாண முக்தி

சிறுகதைத்தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாண முக்தி

சிறுகதைத்தொகுப்பு

**ஈழவாணி**

20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு,
சூளைமேடு, சென்னை - 94
தமிழ்நாடு இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nirvaana Mukthi

By
**Eezhavaani ©**
**eezhavani@gmail.com**
**91 + 96001 31346**

**First Edition**
December 2012

Mithra : 221
ISBN : 978 - 93 - 81322 - 09 - 3

Publication Editor
**Espo**

Pages : 96
Price : ₹. 100/- 300/-

Printed & Published by
**Mithra Arts & Creations Pvt Ltd.,**
20/2, Zackria Colony, 1st Street,
Choolaimedu, Chennai - 600 094.
Ph : +91 44 2372 3182 / 2473 5314
Email : mithrabooks@gmail.com
www.mithra.co.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப் பாவாமாய்

ஊனமாய் ஒடுங்கி

வாழ்நிலை தளர்ந்து

தணியாத் தாகத்தில்

தவித்திழைத்து நிற்கும்

என்

ஈழத்துப் பெண்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

எஸ். பொ.

இரா. முத்து

உத்தம சோழன்

சான் சாகித்தியன்

கல்கி

கிழக்குவாசல் உதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழவாணி

ஈழவாணி இலங்கையில் வவுனியாவில் பிறந்தவர். செந்தணல் என்ற பத்திரிகையை நடத்தி ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார். தற்பொழுது பூவரசி அரையாண்டு இதழை நடத்தி ஆசிரியராக இருக்கிறார். குறும்படங்கள், ஆவணப்படங்களை இயக்கிக் கொண்டிருக்கிறார்.

**இவருடைய நூல்கள் :**

சிதறல் (கவிதைகள் - 2004)

தலைப்பு இழந்தவை (கவிதைகள் - 2010)

ஒரு மழைநாளும் நிசிதாண்டிய ராத்திரியும்
(கவிதைகள் - 2011)

நிறங்கள் (சிறுகதைத்தொகுப்பு 2004)

ஒரு மல்லிகை சிவப்பாகிறது (குறுநாவல் 2006)

ஈழத்து நாட்டார் பாடல்கள் (2007, ம.ப. 2011)

www.poovarashi.com

eezhavani@gmail.com

elaavani@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னீடு

குளிர்விட்டுப் போனதான ஒரு பாவனையிலே ஈழமண்ணின் நிகழ்வுகள் நகரும் இந்த வேளையிலே, ஈழவாணியின் 'நிர்வாண முக்தி' என்னும் சிறுகதைத் தொகுதி என் 'முன்னீடு'க்காகக் காத்திருக்கின்றது. லட்சக்கணக்கான தமிழர்களுடைய உதிரம் சிந்தப் பட்டு, நவீன புறநானூறு எழுதப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரதேசத் தினை, மானிடமே வெட்கித் தலைகுனியும் வகையில் தமிழ்ப் பிணங்களை அடுக்கி, சிங்கள இனவெறி ஊழித் தாண்டவமாடி மகாமாசனமாக மாற்றிய பிரதேசத்தினை, சிங்களருக்கான உல்லாசச் சுற்றுலா ஸ்தலமாக மாற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்குச் சமாந்தரமாகக் கொழும்பில், தமிழ்ப் புத்துஜீவிகள் கூடிப் போர் இலக்கியத்திற்கான அறிவார்ந்த உரையாடல் நடத்தியதின் ஆவணமாக, அறுநூறு பக்கங்களிலே விரியும் 'ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்' தொகுக்கப்பட் டுள்ளது. இவை என் மனசில் சோகத்தைக் கவிக்கின்றன. 'முடிந்த கதை' என்கிற யோகர் சுவாமியின் கௌளி சாத்திரத்துள் சரணாகதி. அபக்குவத்தின் அச்சு அசலான கையறு நிலை!

ஈழத்தின் இலக்கிய விமர்சனத்தில் கோலோச்சும் புத்தி ஜீவிதத்தின் உயிர்ப்பினையும் மேலாதிக்கத்தையும் நான் என்றும் ஐமிச்சப்பட்டது கிடையாது. ஆனாலும் என் ஆட்சேபனைகளைப் பதிவு செய்யவும் நான் ஒஞ்சியதில்லை. ஈழத்துப் போர் இலக்கியம் சார்ந்து, அதன் வாஸ்தவமான தனித்துவக் கூறுகளைப் பற்றி உரையாடுவதற்கான அற்ப ஜனநாயகச் சாயலாவது இலங்கையில் நிலவுகின்றனதா? பிரதம நீதிபதியையே தூக்கியெறியக்கூடிய அதிஅதிகாரத்தை அரசியல் தலைமைத்துவம் தனதாக்கிக் கொண்டுள்ள நிலையில் என் சந்தேகங்கள் நீளுதல் நியாயமானது. இதன் காரணமாகப் போலும், ஈழத்துப் போர் இலக்கியத்திற்கு ஒரு வரலாற்றுக் கோலத்தைப் பாய்ச்சுவதற்காக 'நண்டெழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம் நமக்கு' என்கிற வெண்பா போட்டியுடன் துவங்கியதான ஒரு மாயையும் காமிக்கப்படுகிறது. மொழியுரிமை கோரி நடத்தப் பட்ட அரசியல் கிளர்ச்சிகள் (Political agitation) போர் அல்ல. 'தளர்பதி'கள் ஒலிபெருக்கிக் கருவிகளை வைத்து 'துப்பாக்கிக் குண்டு விளையாட்டுக் குண்டு' 'தூக்கு மேடை பஞ்சு மெத்தை' என்று பேட்டுக்கூவல் எழுப்பியமை போர்ப்பிரகடனங்களா? தார்ச் சட்டியையும் பொச்சு மட்டையையும் ஆயுதமாகக் கொண்டு 'ஸ்ரீ' எழுத்தினை அழித்தமை புறநானுற்று வீர காவியமா? இந்த எதிர்ப்பு இயக்கத்தின் எதிர்வினையாகச் சிங்களப் பகுதியிலே நடத்தப்பட்ட 'தார் பூசும் போரி'ன் முரண் நகையை அவதானித்த என் நண்பன் மஹாகவி 'தார் பூசிச்சாமோ தமிழ்' என்ற ஈற்றடி கொடுத்து வெண்பா போட்டியைத் தொடர்ந்தார் என்பது வரலாறு. இவற்றிலிருந்து போர் பற்றிய நேர்த்தியான புரிதல் இன்றி, போர் இலக்கியம் பற்றிப் புத்திஜீவிதப் பிரகடனஞ் செய்தலும் அறிவின் செமிபாடு அடையாத குணங்குறியாகவே எனக்குத் தோன்றுகின்றது.

இறைமையிலே மாற்றத்தினை ஏற்படுத்துதல் வேண்டும் என்கிற ஒரு நோக்கத்துடன் ஆயுதம் ஏந்தி முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் செயற்பாடே போர். இறையாண்மையில் மாற்றம் ஏற்படுதல் வேண்டும் என்கிற எண்ணம் 1972ஆம் ஆண்டில் புதிய யாப்பின் திணித்தலுக்கு முன்னர் தமிழர்களுக்கு ஏற்படவே இல்லை. 'சமஷ்டி' என்கிற கோரிக்கை மூலம் இலங்கையர் என்கிற தேசியத்தைத் தமிழர் ஏற்றுக் கொண்டார்கள் என்பது மெய்ப்பிக்கப்படும். புதிய யாப்பும், மீண்டும் மீண்டும் தமிழர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட வலோற்கார வன்முறைகளின் எதிர்வினையாகவே தமிழர் தேசியம் தோன்றியது. 1983இல் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இன ஒழிப்புப் பயங்கரவாதமே Tamil Diasporaவின் ஜனனத்தையும், ஈழர் ஒரு தனித்துவ இனம் என்கிற ஒரு சர்வதேச சமிக்ஞையையும் தோற்று வித்தது. இறையாண்மை குறித்த போரும் எழலாயிற்று. எனவேதான், போர் இலக்கியம் உட்படப் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தையும் சேர்த்து அடிக்குப் பிந்திய ஈழர் இலக்கியம் என நீண்டகாலமாகவே நான் குறிப்பிடுகின்றேன்.

இன்னும் ஒன்று. புலம்பெயர்ந்த எழுத்தாளர் போரியல் இலக்கியத்திற்கு முழுமையான பங்களிப்புச் செய்யவில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலாக்கணம் வைப்பதிலும் அர்த்தமில்லை. ஏனெனில் அவர்களுடைய இலக்கிய முயற்சிகளும், முக்கல்களும் தனிக்கூறில் அடங்கும். அதனை விடுத்து 'கொரில்லா' 'ம்' போன்றவை போராட்டத்தின் வேறுபட்ட விமர்சனம் என்று புத்திஜீவிதச் சாயம் பூசுதல் சவலைத்தனமானது. இவை போர்விமர்சன இலக்கியமுமல்ல. தமிழ் இன விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தி, பிராமணச் சிந்தனையாளர்களைப் பிரீதி செய்து புகழ் சம்பாதிக்கும் வித்துவ மல்யுத்த முயற்சிகள் எனவுங்கொள்ளலாம். இத்தகைய இலக்கிய ஆக்கங்கள் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் மத்தியிலும் தோன்றியுள்ளது. இதனாலேதான் முஸ்லிம்களுடைய இலக்கியப் படைப்புகள் தனிவகை என்று மகிந்த சிந்தனையே ஏற்றுள்ளது! இவை எதிர் இலக்கியம் என்கிற வகையைச் சேர்ந்தன. 'மணிமேகலை'ப் பிரசுரங்களின் மூலம் புத்தகங்கள் வெளியிட்டு, எழுத்தாளர் முகவரி தேடும் எலியோட்டத்திலே ஈடுபட்டிருக்கும் 'நபுஞ்சக'ங்களின் எழுத்துக்களை இலக்கியப் படைப்புகள் எனக் கொள்ளுதல் வேண்டுமா என்கிற பிரச்சினையையும் கொழும்பு வாழ் புத்திஜீவித விமர்சகர்களின் தீர்வுக்கு விட்டு விடுதல் சௌகரியமானது. யுத்தகளத்தின் செயற்பாடுகளை அறியாது, யுத்தகளத்தில் நிகழும் அநர்த்தங்களின் வலிகளைப் புரிந்துகொள்ளாது வாழும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களைப் போர் இலக்கியம் படைத்தல் வேண்டும் என எதிர்பார்த்தலும் அப்பாவித்தனமானது.

இத்தகைய சிந்தனை ஓட்டத்தில் எழும் இன்னொரு வில்லங்கம் போர் இலக்கியம் சார்ந்த தொன்மை. புறநானூறுச் செய்யுள்கள் பலவும் போர் இலக்கியஞ் சார்ந்தனவே. அப்போர்கள் இறையாண்மையை நாட்டுவதற்கான போர்களே. 'களிறு எறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே' என்று ஒரு பெண்பாற்புலவர் பாடியதும் நினைவுக்கு வருகிறது. ஔவையார் எதிரிமன்னனின் போராயுதங்களின் பழுதுபடாத நேர்த்தியைப் பற்றியப் பாடிய வஞ்சப் புகழ்ச்சியும் போர் இலக்கியமே. ஆனால் போரினால் ஏற்பட்ட இழப்புகள், மரணங்கள், அவலங்கள், இடப்பெயர்வுகள், துன்பங்கள், மண் இழப்பு, மான இழப்பு ஆகிய சோகங்களைப் பதிவு செய்தல் மட்டுமே போர் இலக்கியமா? இதற்கு இலக்கியப் படைப்பாளியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய பதிலைத் தரும் வகையில் சில கதைகளையேனும் எழுதி, ஈழவாணி நமது வாசிப்புக்குத் தந்துள்ளார். இந்நூலின் முகப்புக் கதையை வாசித்த பொழுது, என் சிந்தனை 'புதுமைப்பித்தன்' இலக்கியப் பங்களிப்பின்மீது தவளைப் பாய்ச்சல் செய்தது. தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்கு உருவமும், உயிர்ப்பும், வீறும், வீச்சும் அருளினான் புதுமைப்பித்தன். பாரதி கவிதைக்கு, இவன் சிறுகதைக் கலைக்கு. இருப்பினும், தமிழிலே கிடைத்துள்ள போர் இலக்கியத்தின் கவிதைக் காமத்தால், வசமிழந்த புதுமைப்பித்தன் கவிதைகளும் உளறினான்.

*'வட்டமுலை மின்னார்*
*வசமிழந்த காமத்தால்*
*நீலமணி மாடத்து*
*நெடியதொரு சாளரத்தைத்*
*தொட்டுத் தடவிவந்து*
*தோயும் நிலாப் பிழம்பை*
*எட்டி எடுத்து*
*இடைச் சுற்றிச் சேலையென*
*ஒலகி நடப்பதாய்*
*உவமை சொல'*

எனத் தனது கவிதை ஒன்றிலே நிசந்தானோ, சொப்பனமோ என மருளுதல் எத்தகைய ஓர் இலக்கிய நெகிழ்ச்சி! இன்றும் தமிழின் போர் இலக்கியமாக எடுத்தடி மடக்காக கூறப்படும் கலிங்கத்துப் பரணியில், கடைதிறப்பிலே வரும் ஒரு பாடல்தான் புதுமைப்பித் தனுக்கு அருட்டுணர்வாய் இருந்தது என ஊகிப்பதற்கு கலாநிதிப் பட்டம் பெற்ற பாரிய இலக்கிய அறிவு தேவையில்லை.

*'கலவிக் களியின் மயக்கத்தாற் கலைபோ யகலக் கலைமதியின்*
*நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர் நீள்பொற் கபாடந்திறமினோர்'*

இந்த இலக்கிய ரசனைச் சஞ்சாரத்தின் ஊக்கி முகப்புக் கதையான 'நிர்வாண முக்தி'யே. போரின் விளைவாகச் சிதைந்து போன உடலுடன் மூத்திர வாடையிலிருந்து தன்னியல்பாக விமுக்தி பெறமுடியாத நிலையில் தவிக்கும் சீலன், தன் அங்கவீனத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் அயோக்கியத்தனத்தைத் தட்டிக் கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத நிலையிலும், தன் உடல் இச்சைகளுக்கு முக்தியளிக்க ஒரு பெண்ணுடன் வைத்திருக்கும் உறவு எவ்விடத்திலும் வாசகரின் காமவக்கிரங்களுக்கு தீனிபோடாத நுட்பத்துடன் சித்திரிக்கின்றது. போரில் ஈடுபட்டோருடைய முரண்பாடுகளிலே பக்கச் சார்பு கொள்ளாது, அடிப்படையான ஒரு மானிட நெகிழ்ச்சியை இக்கதை வெளிப்படுத்துகின்றது.

இந்தக் கதை மனித உறவுகளைச் சுற்றிச்சுழலும்பொழுது, 'மஞ்சுவும் ரயிலில் கிழிந்த சேலையும்' போர் அநர்த்தங்களின் பின் ஏற்பட்டுள்ள சமுதாயச் சீர்கேடுகளின் ஊடாகப் பயணிக்கச் செய்கின்றது. ஈழமண் பல தலைமுறைகளாகப் போற்றிய பெண்மையின் மாண்புகள் சீர்குலைக்கப்படும் பேரினவாத வன் முறைகள் பற்றிக் கற்றை கற்றையாகச் செய்திகள் ஸ்ரீலங்காவி லிருந்து வந்த வண்ணம் இருக்கின்றன. அந்தச் சீரழிவினை ஓர் ரயில் பயணத்தின் ஊடாக நமக்குக் காட்சிப்படுத்துகிறது இக்கதை. இந்தத் தொகுதியிலுள்ள கதைகள் என்னை அழைத்துச் சென்ற வன்னியிலுள்ள பல கிராமங்களை நான் அறியேன். என் நண்பர் நிலக்கிளி பாலமனோகரன் எழுதிய இரண்டு நாவல்களை வன்னி யின் தமிழ் நாவல்களாக மித்ர மூலம் பிரசித்தப்படுத்தினேன். அவர் சித்திரித்த மண் எனக்கு அந்நியோன்யமாக இருந்தது. ஆனால், ஈழவாணி காட்டும் வன்னி மண் ஈழப்போரின் கோலங் களினால் உருவாகியது என்பதை உணரலானேன். ஏனெனில், 1981ஆம் ஆண்டிலேயே நான் பரதேசியானவன்!

ஈழவாணி 'பூவரசி' என்கிற அரையாண்டுச் சஞ்சிகை நடத்தும் ஓர் இதழாசிரியராகவே தன்னை எனக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார். வன்னியிலுள்ள 'பூவசரங்குளத்'தினைத் தன் சொந்த மண்ணாகச் சம்பாவனை செய்வதினால் 'பூவரசி' என்கிற பெயர் சூட்டியிருப்பதாக விளக்கினார். அத்தகைய மண்ணைத் தமது சொந்த மண்ணாகச் சுவீகரித்துக் கொண்டமையினால், போரினால் உருவாகிய புதிய வன்னியினூடாக பயணிக்கும் ஓர் அநுபவம் இந்நூலினாற் சித்திக்கின்றது. பின்னர் நான் இலக்கிய ஒன்றுகூடல் கள் சிலவற்றினை ஒழுங்குபடுத்திய பொழுது, ஈழத்து இலக்கிய முன்னெடுப்புகளை தனது மூச்சாகக் கொண்டு இயங்குபவர் என இனங்கண்டு மகிழ்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மண்ணிலே வாழ்ந்து வளர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பட்டம் பெறுதல் மெச்சத்தக்கது. அத்துடன் பத்திரிகைத்துறையிலே ஈடுபட்டுத் தன்னுடைய கலை-இலக்கியப் பயணத்தினைத் தொடருதல் வேண்டும் என அவர் வாழ்தல் உவகைக்குரியது. குறுகிய காலத்திற்குள் மூன்று கவிதைத் தொகுதிகளையும், இத்துடன் இரண்டு கதைத் தொகை களையும் தமிழ் வாசிப்புக்குத் தந்துள்ளார். தமிழ்நாட்டிலே வாழும் இன்றைய சூழலில், அகதியாகச் சோம்பாமல் ஓம்பாமல், கலைப் பயணம் மேற்கொள்வதற்கான தகைமையை அகலிக்கும் வகையில் ஊடகத்துறையில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். 'புலம்பெயர்ந்த புலம்பல்கள்' என்கிற ஆவணப்படத்தினையும், 'அம்மா வருவா' என்கிற ஒரு குறும்படத்தையும் தந்துள்ளார்.

மண்ணின் மைந்தர்களுடைய நாட்டார் இலக்கியமே புதிய எழுத்துக்களுக்குக் கட்டுமானமாக அமைதல் வேண்டும் என்கிற நம்பிக்கையுடன் 'ஈழத்து நாட்டார் பாடல்'களைத் தொகுத்துச் சென்னையில் வெளியிட்டுள்ளார். அது இரண்டாம் பதிப்பும் கண்டு வெற்றி சம்பாதித்துள்ளது. இது சார்ந்து பேசும் பொழுது வன்னிமண்ணின் சுதந்திர வெறியன் பண்டார வன்னியனை நாயக பாத்திரமாகக் கொண்டு வீரம் செறிந்த மறவர்கூட்டம் வாழ்ந்த மண்ணை மேடையிலே காட்சிப்படுத்திய என் இலக்கிய சகாவான முல்லைமணியை, வாணி தமது இலக்கியத் தொட்டப்புவாகக் கொண்டமை அவர் பேறே. இத்தொகுதியுடன் என்னை இணைத்துக் கொள்வதினால், வன்னிமண் ஈழத்தின் மறவர் நிலமாக மட்டுமின்றி, ஈழரின் கலை - இலக்கிய விளைநிலமாகவும் திகழும் என்கிற நம்பிக்கையைத் தருகின்றது என்கிற திருப்தி என்வசம். அவருடைய படைப்பாற்றல் மேன்மேலும் வளர வாழ்த்துதும்.

**எஸ்.பொ**

2A Hakea Place
Epping 2121
Australia
☎: 612 - 98685090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

"என்கதைகளை உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றால் நம்முடைய காலத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றே அர்த்தம். என் கதைகளில் எந்தத் தவறும் இல்லை. என் கதைகளில் தவறு என்று சொல்லப்படுவன எல்லாம் உண்மையில் அழுகிப்போன இந்த சமூக அமைப்பைத்தான் குறிக்கிறது. என் இலக்கியத்தை எதிர்ப்பதைக் காட்டிலும், இப்படிப்பட்ட இலக்கியங்கள் உருவாவதற்கு ஏதுவாக இருக்கும் சூழ்நிலையை மாற்ற முயற்சி செய்யுங்கள். இது தான் சிறந்த வழி.

இப்படிக் கூறியிருப்பவர் அரசாங்கத்தாலும் சமூக அமைப்பு களாலும் இறந்தவர்களைக் கொச்சைப்படுத்தி அவர்களின் அந்தரங்கங்களைத் திருடியவன் என்றும், ஆபாச இலக்கியம் படைத்த வன் என்றும் குற்றம் சாட்டியவர்களாலேயே பிற்காலத்தில் மிகப் பெரிய எழுத்தாளன் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதத் ஹசன் மண்ட்டோ.

இவர் கூறிய இக்கூற்று எனக்கு நிச்சயமாக நியாயப்படுகிறது. பொதுவாகவே பலரிடம், குறிப்பாகத் தமிழ்நாட்டு எழுத்தாளர்களிடம் ஒரு கருத்து இருக்கிறது. ஈழம் சார்ந்த படைப்புகள் என்றாலே வெறும் புலம்பல்களும், யுத்தத்தின் ஓலங்களுமாகவே இடம்பெறுவதாய். யுத்தம் ஓய்ந்து இத்தனை வருஷங்கள் சென்ற பின்னும் அதையே திரும்பத் திரும்ப பேசுகிறார்கள் என்று. ஆனால் இதையே ஈழத்துப் படைப்புகள் சுடச்சுடத் தீபாவளிப் பலகாரமாய்ச் சுட்டும் போடுகிறார்கள், சந்தைக்காக. இப்படி இன்று கொண்டாடப்படும் மிகப்பெரிய கவிஞர் ஒருவர் என் காதுபடவே பேசக்கேட்டிருக் கிறேன். ஒரு படைப்பாளிக்கான நேர்மையான மனப்பாண்மை இல் லாதவர்களெல்லாம் இப்படிப் பேசத் தகுதியானவர்களா?

அது நிற்க, முப்பது ஆண்டுகளாகப் போர் நடந்து அழிவுகளைச் சந்தித்து உறவுகளை உடமைகளை இழந்து, சுடுகாடான பூமியில் பிய்ந்து தொங்கும் சதைத்துண்டங்களோடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினம் ஒரு பிணத்தையாவது வழியனுப்பும் வாழ்க்கையோடும் வாழும் மனிதர்கள், இரண்டாண்டுகளில் இதை மறந்து எதைப்பாட வேண்டும்? இரண்டு, மூன்று ஆண்டுகள் அழிவுகளையும் காயங்களையும் தொடர்நிலைக் கொடுரங்களையும் நிகர்த்து விடுமா?

என்னைப் பொறுத்தவரை மண்ட்டோ கூறியது போல், சமூக அவலங்கள், சமூகத்து மக்கள் புலம்பல் நிலையில் இருக்கும் வரை, உரிமைகளும், உணர்வுகளும் சுய விடுதலை பெறும் வரை, இந்த உரிமைப் புலம்பல்கள் இன்னும் பத்து ஆண்டுகள் சென்றாலும் ஓயப்போவதில்லை. இப்படியிருக்க இலக்கியத்திலும் எப்படிப் பாடுபொருள் மாறும்?

பொதுவாகவே என்னுடைய நூலுக்காக முன்னுரையை எழுதி அதை விளக்கிக் கொள்வதில் எனக்கு இப்பொழுது அவ்வளவாக விருப்பமில்லை. சிறுகதையாக இருக்கட்டும், கவிதையாக இருக்கட்டும் ஏதோ ஒரு தருணத்தில், ஏதோ ஒரு உணர்ச்சியின் உந்துதல் பொழுதில் எழுதியிருப்போம். சிறுகதைகளும் பெரும்பாலும் பாதித்த சம்பவங்களை அங்கேயும் இங்கேயுமாகக் கொஞ்சம் தொட்டு, சமூக அங்கங்களினூடு படைக்கப்படுகின்றன. என்னைப் பொறுத்தவரை படைப்புகளை யாருக்கும் போதனை செய்வதற்காகவே அல்லது சமூகத்தைத் திருத்தப்போகிறேன் என்பதற்காகவே எழுதுவதில்லை. அந்தந்தக் காலங்களைப் பதிவு செய்தல், இவை இப்படி நடக்கின்றன என்று சொல்ல வேண்டியது அவசியமும் கடமையும் கூட. மீதி அழகியல், சுய வெளிப்பாடுகள் என்பதும் தவிர்க்க முடியாதவையாகவே இந்த இவர்கள் சொல்லும் புலம்பல்களாய் வெளிப்படுகின்றன.

இதில் இடம்பெறுகின்ற கதைகள் அத்தனையையும் நான் புலம்பல்களாகவே ரசிக்கின்றேன்.

நிர்வாணம் என்பதை பரிபூரணமடைந்து, அனைத்தையும் துறப்பதாகவே எண்ணுகிறேன். ஒரு மனிதனை நிர்வாணமாக, அனைத்து அசிங்கங்களுடனும் குறைகளுடனும் குற்றங்களுடனும் நேசிக்க முடிந்தால் அதுவே உன்னதமான அன்பாகிறது. நிர்வாண,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக என்னை நேசிப்பாயா? என்று யாரால் துணிந்து கேட்க முடியும் காரணம் மற்றவர்களின் குறைகளையும், குற்றங்களையும் மட்டுமே சுட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்களே அன்றி ஆத்மார்த்தமான நேசிப்புக்கள் அருகிவிட்டன என்று தான் கூற முடியும். நிர்வாண மாய் ஒருவன் நேசிக்கப்படுவானாகில் அதுவே அவனுக்குக் கிடைக்கின்ற பரிபூரணமான முக்தியாகவே நான் கருதுகிறேன். இந்த நிர்வாணமுக்தி என்ற தலைப்பை இட்டதில் எனக்கு எவ்வித மான குற்ற, கூச்ச உணர்வே இல்லை ஏனெனில் இதை ஆபாசமாக கருதவில்லை. ஆர்த்மார்த்தமாகவே எண்ணுகிறேன்.

இத்தொகுப்பில் “பாட்டி வீட்ட போறாள்” என்ற கதை எனக்கு மிகவும் பிடித்தமான கதை மட்டுமல்ல, அந்தப் பாட்டியும் கூட.

இந்தப் புத்தகத்தை மிக அருமையாகச் செய்ய வேண்டுமென மிக அக்கறையோடு எஸ்.பொ. அவர்கள் பதித்திருக்கிறார். அவர் இந்த நூலுக்கு முன்னீடு தருவதற்காக நேரம் ஒதுக்குவதற்காகப் பட்ட சிரமங்களும் அதிகம். எஸ்.பொ. வின் கையினால் இந்த நூலை கொணர்வதில் நான் பெருமையும் புளகாங்கிதமும் கொள்கிறேன். ஈழத்தின் மிகப்பெரிய சரித்திரப் புகழ் பெறுகின்ற எழுத்துப் போராளி. சர்ச்சைக்குரிய நேர்மையான எழுத்தாளருமான அவருடன் அளவளாவி இலக்கியப் பேச்சுக்களுடனும் பணிகளுடனும் இணைந் திருப்பதை அரிய சந்தர்ப்பமாகவே கருதுகிறேன்.

மேலும் அனைத்து இலக்கிய நண்பர்களுக்கும் அருகிருந்து உதவிய பலருக்கும் நன்றிகள்.

**ஈழவாணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...

நிர்வாண முக்தி
மஞ்சுவும் ரயிலில் கிழிந்த சேலையும்
சதானந்தி
பாட்டி வீட்ட போறாள்
நல்ல விலையில்
கடைசி நேரம்
திறந்தவாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாண முக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலன் இரண்டாவது தடவையும் அடக்க முடியா மல் தவித்துக் கொண்டிருந்தான். ஏற்கனவே கால் சட்டையிலிருந்து கிளம்பிய நாற்றம் ஓங்காழித்து வெளியேற, இம்முறை பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். நாற்றம் உடம்போடு ஒட்டியிருந்து நாசியை அடைக்க, அந்த ஒரு அறையிலும் விறாந்தையிலும் மாறிமாறி நடந்தான். ஐந்தாறு எட்டு வைத்து முட்டித் திரும்பினான். இரண்டாயிரம் ரூபா வாடகை வீட்டினுள் எப்படி சாவகாசமாக நடக்க முடியும்? நடப்பதால் வீட்டினுள்ளேயே வெளி வந்து விட்டால்? இதை நினைத்து அச்சம் ஏற்பட்டதால், அங்கே ஒரு மூலையில் தனிமை பேணிய ஸ்ரூலில் அமர்ந்து இயன்றவரை தம்பிடித்துக் கொண்டிருக்க, நிமிசங்கள் சினத்தோடு கரைந்தது. 5... 10... 20... 25... அவசரமாய் போய் கொல்லையோடு நின்றான். “அப்ப்பா.....” அடிவயிற்றிலிருந்து வெளியேற “சர்ர்ர்...” என இருகால்களின் பக்கங்களினூடாகவும் சிறுநீர் நிலத்தைத் தொட்டது.

மலசலகூடம் சமயலறைக்கு எதிர்ப்புறமாய் இருந்தமையால் ஏனோ மனசு அதற்குள்ளேயே இரண்டாவது தடவையும் போக உந்தவில்லை. கால் களின் பெரும் பகுதி உவர்த்தன்மையினாலேயோ என்னமோ அரிப்பும் எரிச்சலுமாயிருக்க, நாத்தம், புரட்டியெடுத்தது “எவன் சொன்னானோ... ஆத்திரத்தை அடக்கினாலும் மூத்திரத்தை அடக்கேலாதெண்டு, அவன் வாயில நெருப்பைக் கொழுத்த வேணும்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரூலில் அமர்ந்தவனுக்கு இருக்க முடியவில்லை. மனசு சின்னதாய் கோபித்தது அம்மாவின் மீது. அறுபது வயதிலும் தன்னுடைய சீரழிவுகளோடு மாரடித்துக் கொண்டிருக்கும் அவரை எப்பவும் மனசால் கூட நொந்தது கிடையாது. ஆனால் இண்டைக்கு ஏன் இவ்வளவு நேரம்? திருச்சி K.K. நகரில் ஒரு கோடியில் கிடந்த அந்த வீட்டினுள் எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் அமைதியை, விரட்டிக் கொண்டிருந்தது மூத்திர நாற்றம்.

"ஏனப்பா...." தொய்ந்து போன குரலையடுத்து விம்மல் வெடிப்புகள் அச்சிறிய வீட்டினுள் எதிரொலித்தது. காதலும் தேடலும் இருக்கக்கூடியதான இருபத்தேழு வயது வாலிபன் ஒருவனின் கண்களில் பொல பொலத்து கொட்டியது கண்ணீர். அவன் அம்மாவிற்குக் கூட கண்ணீரை அடக்க முடியவில்லை. தன் கண்ணீர் அவன் வேதனையை இன்னும் அதிகமாக்கும் என தன் துன்பத்தை மறைத்துக் கொண்டாள்.

சாரம் ஒன்றை எடுத்து அவன் இடுப்பில் கட்டி ஜீன்சைக் கழற்றி போட்டு வெளியே கொல்லைப்புறத்தில் விட்டு, அவசரமாய்த் தண்ணியை நிரப்பி அவன் மேல் ஊற்றினாள்.

இப்பொழுது வீடெங்கும் சாம்புராணிப் புகையைப் பரவ விட்டிருந்தாள். இது வீட்டிற்குள்ளிருந்த நாற்றத்தை விரட்டித் தூய்மையை நிரப்பியிருந்தது. அவனுக்காக கொணந்திருந்த சிலோன் றோல்சைத் கொடுத்து தேத்தண்ணியும் ஆத்திக் கொடுத்தாள். அதைக் குடித்து விட்டு நிமிர்ந்தவன் தாயின் நொற்றி யில் உரசுப் பட்டுக் கிடந்த காயத்தைப் பார்த்து பதறிப்போய், "அம்மா என்ன காயம்? எங்கயாவது விழுந்திற்றிங்களா?" எனக் கேட்டான்.

காயத்தைத் தடவிவிடுவதற்காகத் தன்னிச்சையாக கைகள் உயர, முழங்கைக்கு மேலாய் அறுபட்டுக் கிடந்த சதைத் துண்டங்கள் ஆடிச் சோர்ந்தன. இயலாமை உணர்வு நெஞ்சடைத்து பெருவலி யாய் உருவெடுக்க தாயின் முகத்தோடு தன் தலையையும் சேர்த்து மௌனம் இடையோட வேதனையைப் பகிர்ந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத்தம் எல்லாம் போய் இப்பதான் வீடுமாதிரி உணரக் கூடியதாக் கிடக்கு என்று நினைத்துக்கொண்டே எழுந்து பாயில் சாய்ந்தபடி உட்க்காந்து தாயைப்பார்த்த சீலனுடைய கண்களில் நீர் கசிந்தது. அவன் தன் நிலையை எண்ணி எத்தனையோ தடவை தனக்குள்ளேயே தற்கொலை புரிந்து, மீழவும் தேற்றி, தனக்கான ஆறுதலைத் தானே சொல்லித்தான் இன்றுவரை இருந்து கொண்டிருந்தான். மனசும் மூளையும் விவாதித்து சில சமயம் மூளை வெல்ல, மனசு தோற்றுவிடும். இப்பொழுதும் சம்பவங்கள் நிகழ்வுகளுடன் பேசத் தொடங்கியிருந்தான். கொதித்துக் கொதித்து அணைந்து கொண்டிருந்தது மனசு.

அம்மா பாவம், அவவுக்கு முட்டு வருத்தம், நிறைய வயசு போயிற்று. பாயில இருந்து நான் பாத்துக் கொண்டு இருக்கிறன். எந்த உதவியும் செய்ய ஏலாமக் கிடக்கே, மூச்சை இழுத்துக் கொண்டு சமைக்க ஆயத்தப்படுத்துறா. 'ரண்டு முருக்கங்காய் வேண்டி வந்திருக்கிறா, எனக்குச் சரியான விருப்பம் எண்டுதான். ஒரு காய் ஒன்பது ரூபா.'

ஊரில எங்கட வீட்டுக் கொல்லைக்க ரண்டு முருக்க மரம் நிண்டுது. நல்ல களி.

நினைக்கவே வாய்க்க எச்சில் ஊறுது.

சில நேரம் நினைச்சா ஏன் வாழோணும் எண்டு கூடக் கிடக்குது. இந்தச் சீரழிவுகளோட.... இவ்வளவு என்னில வன்மம். இல் லாட்டி அம்மாவையும் கூட வயசு போனவ எண்டு பாக்காம இப்பிடிச் சீரழிக்குமா?

"என்ன மாமி முருங்கக்கா கறியோ ம்... ம்..."

இவ்வாறு துளாவிய சிலோன் சுந்தரியின் கண்கள் என்னில் நின்றன.

இவள் கவிதா, எந்நேரமும் சிங்காரிச்சுக் கொண்டே இருப்பாள். இதால, பக்கத்தில உள்ளவே எல்லாரும் "சிலோன் சுந்தரி" எண்டு வினம். அகதியா வந்து இருபது வருசத்துக்கு மேல. இப்ப இருபத்தஞ்சு வயசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு என்மேல ஒரு இது. அத எப்பிடிச் சொல்லுறதெண்டு தெரியேல்ல. இருபத்தேழு, வாலிபத்தின் இயலாமக் கிடக்கிற உணர்ச்சிகளின் மீதான கருணையா? இல்லாட்டி, இச்சை தீர்க்கும் தூண்டலா....? அல்லது உண்மையாகவே அன்பு இருக்கக் கூடுமோ? மூன்றையுமே பிரித்தறிய முடியா நிலையினையே தருகிறது அவள் வந்து போகும். தருணம் எப்பிடி இருந்தாலும் அவளுக்கு அன்பைத் தான் பகிர வேணும். காரணம் மூன்றின் தேவைகளும் எனக்கிருக்கு. யதார்த்தமான வாழ்க்கையில சாதாரண மனுசனுக்கு இருக்கக் கூடிய இச்சைகள் தான் எனக்குமிருக்கு. என்ர தனிமைகள உணர்ந்து பல நேரங்கள இனிமையாக்கியிருக்கிறாள். விளித்து விளித்துத் தொல்லை தரும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அணைக்கத்தேடி உயர்ந்து துடித்துச் சோரும் கைகள். இயலாமையிலும் என்ன இது நுனிச் சதைத் துண்டம் கூட துடித்து ஓயும் நேரங்களை வெறும் வார்த்தைகளைக் கொண்டு அளந்து போட முடியாது, ஆண்மை செத்துப் போக நினைக்கும் நொடிகள். உணர்ச்சிகளை உணர்ந்து கைகளை நீட்டி அணைத்து பல தடவைகள் ஆன்மத் தீயை அணைத்திருக்கிறாள், இச்சைகளைக் கழித்து ஆறுதலாய் இருந்திருக்கிறாள்.

என் ஊனத்தில் அருவருப்பில்லாமல் உணர்ச்சிகளைப் புரிந்து உறவாடித் தந்திருக்கிறாள். இதெல்லாத்தையும் அவளின்ர வயசுப் பிழை எண்டோ, உடல் இச்சை எண்டோ சொல்லினால் நான் ஒரு கேவலமான பிறப்பாயிடுவன். நான் நிறையத்தடவ நினைச்சுப் பாத்திருக்கிறன், அவளோட வாழ்க்கையக் கடந்த தொலைதூர அன்பு என்ரமேல இருக்கோணும். இல்லாட்டி இப்பிடி “நிர்வாணமாய் அலங்கோலமாய்” என்ன நேசிக்கவோ சகிக்கவோ முடியாது.

என்ன செய்ய ஏலும் என்னால...? எல்லாம் தெரியிற தூரத்தில இருந்தும் கூட எந்தப் பசியையும் தீர்க்க ஏலாதே... ஐயோ... மனசும் உயிரும் ஓலமிடும் சத்தம் எந்த மனிதரை உண்மையாய்த் தொட முடியும்.....?

அவளால் மட்டும் தான் முடிந்திருந்தது எனக்கான நிர்வாண முக்தியைத் தர. முகச் சுழிப்புகளோ அருவருப்போ இல்லாம அத்தனை உணர்ச்சிகளையும் தழுவியிருக்கிறாள். சிறுநீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிக்கவோ, மலங்கழித்து சுத்தப்படுத்தவோ முடியாமல் தவித்த நேரங்களில் தன்னைத் தியாகித்து என்னைச் சுத்தப் படுத்தியிருக்கிறாள். உடலின் அங்கங்களை அளைந்து கழுவி என் பிறப்பின் வாலிப ரகஸ்சிய நாளங்களையும் உருவி மளித்து இசைத்திருக்கிறாள். எனைப் பொறுத்தவரை உடல், மனம் ஆவி எல்லாத்துக்கும் அவளே ஆர்த்மார்த்தமான குரு. நிர்வாண முக்தியளித்த தீட்சகி.

கவிதா கலகல பேச்சுக்காரி. அவள் வந்து போறது அம்மா வுக்கு கூட நிறைய ஆறுதல், பேச்சுத்துணை, மன இறுக்கம் கொஞ்சம் குறையும் தானே? என்ன முறையில அவள் அம்மாவ மாமியாக்கினாளே தெரியாது ஆனா மாமி மாமி யெண்டு முன்னுக் கும் பின்னுக்குமாய் வந்து போறது ஒரு மனச் சந்தோசம்.

நீண்ட பெருமூச்சொன்று வெளியேற முகட்டைப் பார்த்து, அண்ணாந்து படுத்துக் கொள்ளுறன். அவளின்ர குரல இன்னும் தெளிவா கேக்கோணும் எண்ட ஆசை.

"மாமி ஊரில இருந்து கனபேர் வந்திருக்கினம், என்ன விசேஷம்?"

"எனக்கென்ன பிள்ள தெரியும்? நீதான் உதுக்குள்ளால பூந்தோடித் திரியிறாய், உனக்குத் தெரியாததே?"

"வவுனியால இருந்து அம்மாட தம்பியும், மச்சானும் வந்தவே? சித்தி வீட்டில நிக்கின."

"என்னவாம், பொம்பிள பாக்கினமாமோ"

"கேட்டவே தான்; எனக்கு விருப்பமில்ல."

"ஏன் பெட்ட."

"கலியாணம் எண்டிட்டு நான் கொண்டு போறத வைச்சு கொஞ்ச நாளைக்கு சிலவழிப்பினம். பிறகு சண்டை, பிச்சல் பிடுங்கல், பிள்ளயும் வயிறுமா நான் அங்கையும் இஞ்சையுமா இழுபடோணும். அதவிட இப்பிடியே இருந்திரலாம் மாமி. கஷ்ரமோ நஷ்ரமோ தனியவே போயிரும். ஆனா நிம்மதி இருக்கும் தானே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொண்டே என்னப் பாக்கிறாள். கடைசி வார்த்தைகளில கவனம் பெற அரைக் கண்ணால் அவளையும் பார்க்கிறள். அவளும் என்னப் பாத்தாள். எனக்கு எதே செய்து உடம்பெல்லாம் ஆடிப்போச்சு. அந்தர வெளியில் பறந்து தத்தளித்தளிக்குது.

"இப்பிடியே இருந்து என்ன செய்யப்போறா? வயசெல்லே ஏறிக் கொண்டிருக்கு,"

"மாமி..."

"சொல்லு மருமவளே!"

"மச்சான் அந்த ஜெயத்த கண்டவராம்."

"ஜெயம், ஜெயம்" இந்தப் பெயரக் கேட்ட நிமிடம் சந்தோஷம் நொறுங்கி, அந்தர வெளியிலிருந்து தொப்படீரெண்டு விழுந்து கொதிச்சு எழும்பிற்று அவன்ர நினைவு.

மேலும் அவள் கூறிக் கொண்டிருந்தாள்.

"வவுனியால தான் இருக்கானாம். ஏதோ சஞ்சிகை நடத்துறானாம். மாமி"

"ம்..."

"கிளிநொச்சியில வீடு கட்டிக் கொண்டிருக்கிறானாம்."

"ஓ..."

"இப்ப வசதியாத்தான் இருக்கிறான். இப்பிடி ஊரில பேசியின மாம்."

குப்புறப்படுத்துக் கொண்டேன். இரத்தம் வேகமாப் பாயுது. உடம்புக்க சூடு அதிகரிக்குது; கண்ண மூடிக் கொண்டன். கண்ணீர் கூட சூடாகத்தான் சில துளிகள் வழியுது.

'ஓ அப்பிடி இருக்கிறானோ ராஸ்கல், துரோகி துரோகி.'

எனக்கு இந்த வினாடிகளை எதிர்நோக்கவே முடியேல்ல. நிர்வாணப்படுத்தப்பட்ட அந்த நாளின் நிமிடங்களை இப்ப சரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்கிறன். பலரக் கூப்பிட்டு என்ன நிர்வாணமாக்கி, என்ர அங்கங்களுக்கு விலை கேட்டத பரம கேவலமா.... எண்ணமெல்லாம் புரட்டுது. ஒவ்வொரு மயிர்க் காம்புகளும் மசுக்குட்டி மயிர்களாய் புடைத்துக் கொள்ளுது. உடம்ப பிணமாக உணர்றன். எண்ணை ஊற்றி என்னைக் கொழுத்தும் சுவாலை, அது கூட முடியாம கட்டுண்டு போய்க் கிடக்கிறன்.

சத்தியமா இப்ப என்ர ஊனத்தையும் அத ஏற்படுத்திய சூழ்நிலைகளையும், சூழ்நிலைகளை உண்டு பண்ணிய சூத்திர தாரிகளையும் சபிக்கோணும் போல இருக்கு. உண்மையில இத்தின வருசத்தில எத்தின கஷ்டங்கள தாங்கிருப்பன். ஆனா ஒரு நாள் கூட ஒரு நிமிசம் கூட நினைக்கேல்ல.

ஐயோ.. தாயே இண்டைக்கு எனக்கு அப்பிடி ஏலாமக் கிடக்கு, அவ்வளவு கேவலமாகக் கிடக்கு. அங்கம் அங்கமா ஒவ்வொருத்தரும் என்ன எள்ளி நகையாடுறதப போல கிடக்கு. செத்துப்போகோணும்... செத்துப்போகோணும்... நான் செத்துப்போகோணும் எப்பிடி நானே என்னச் சாகடிக்கிறது?

முடியுமா....?

ஜெயசுதா அண்ண சென்னை தாம்பரம் தாண்டி இருக்கிற SRM யுனிவெர்சிற்றியில படிச்சுக் கொண்டிருந்தவர். அங்க இருக்கேக்க ரேடியோ ஒண்டிலயும் வேல செய்தவர். அதவிட மனுசன் நல்ல அரசியல் வேலையளிலயும் ஈடுபாடு.

சமாதான காலங்களில ரண்டாயிரத்தி ஒண்டு, ரண்டு, மூண்டு ஆண்டுகள்ள கலை இலக்கியப்பண்பாட்டுக் குழுக்களோட சேர்ந்து பொங்கு தமிழ் நிகழ்ச்சிகள் நிறைய இடங்களில செய்தவை. நல்ல ஆளுமையான குரல்வளம். புலிகளின் குரலுக்காகக் கூட அப்பபோ நிகழ்ச்சிகள செய்தவர். இஞ்ச வந்த பிறகு தான் எனக்கு அவர நேரில் தெரியும். SRM மில மீடியா படிக்க வந்தவராம். அதில நிறைய வெளிநாட்டுத் தொடர்புகள். வெளிநாட்டு சில FM களிலயும், இணைய இதழ்களிலயும் வேலை செய்துகொண்டிருந்தவர். ஆனா கஸ்ரப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுசன். இஞ்ச படிக்கிறதுக்குக் கூட நோர்வேயில இருந்த ஏதோ ஒரு ஊடகத்துறை நிறுவனம் தான் உதவிக் கொண்டிருந்தது. அது நாட்டில ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பில்லை, பிரச்சனை என்று உறுதிப்படுத்தும் பட்சத்தில் இப்படியான உதவிகளையும் செய்யும், அந்த நிறுவனம். சில பேர நோர்வேக்கு கூட எடுத்திருக்கு.

அவர் இஞ்ச வந்த கத பெரிய கத. ரண்டு போத்தில உள்ள அனுப்பினா நாளுக்கு ஒன்று வீதக்கணக்கில அந்தக் கதையச் சொல்லுவார். ஆனாலும் அத கேக்கேக்க இருதயம் வலிக்கும். நிறைய வலியளை அனுபவிச்சிருக்கிறார்.

அவர் போன வருஷம் படிப்பு முடிஞ்சு இலங்கைக்குத் திரும்பிப் போனவர். அந்த ராத்திரி கூட அத சொல்லிக் கொண்டிருந்தவர்.

அஞ்சு நிமிசத்துக்கு முதல்தான் கதைச்சுக் கொண்டிருந்திட்டு வந்த நாங்கள் சுதாகர் வீட்டில இருந்து. சரியா அஞ்சே அஞ்சு நிமிஷத்தில அவனப் போட்டுட்டாங்கள். எப்பிடி இருக்கும் எனக்கு? எங்களையும்தான் தேடி அங்க வந்தவங்கள். வீட்ட ரண்டு பேர் வரக் கடையில நிண்ட தம்பி போன் பண்ணிச் சொல்ல, பின் கதவால விழுந்தடிச்சு வாழத்தோட்டத்துக்கால ஓடிப்போய், வேலி பாஞ்சு பக்கத்து வீட்டுக் கக்குசுக்க ஒரு இரவு முழுக்க இருந்தனான். ஒண்டு தெரியுமா பயத்தில ஓடேக்க காச்சட்டையோட மூத்திரம் போயிற்று. அந்த வலிய எனக்கே வந்தது போல சரியா அனுபவிச்சிருக்கிறன்.

இஞ்ச திருச்சியில தான், லண்டனில இயக்கும் FM இணைய இதழ்களுக்கு அலுவலகம். அதால நெடுக வருவார். வந்தா என்னையும் அடிக்கடி கூப்பிடுவார். அந்தக்கால கட்டத்தில மாற்றம் தேவப்பட்டதால போவன். அவரோட இருக்கேக்க நாலைஞ்சு தரம் வேணாம் வேணாம் எண்டும் வில்லங்கத்துக்கு பருக்கிவிட்டிருக்கிறார். சிக்னேச்சர் போத்தில் ஒண்டாவது இருக்கும். பிறகு பிறகு எனக்கும் அந்தப் பருக்குதல் தேவையாயிருந்ததால நானே தேடிப் போகத் துவங்கினன். என்ர நிலமையப் பார்த்து அவரும் மனவருத்தப்பட்டார். ஏதாவது உனக்கு நான் செய்யிறன், ஆப்ரேசன் செய்து ஓரளவு சரிப்படுத்தலாம் கவலப்படாத என்ற ஆறுதல் வார்த்தைகள் சில இரவுகள் என்னை நிம்மதியா தூங்க வைச்சிருக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா கடைசியில எல்லாம் இப்பிடி முடிஞ்சு போகும் எண்டு தாயறிய நான் நினைக்கவே இல்ல. சிலபோர் சொன்னவை தான் ஜெயம் உன்னப் பேக்காட்டிப் போட்டான், ஏமாத்திட்டான் எண்டெல் லாம். ஆனா இதுகள வைச்சு ஒரு தீர்மானத்திற்கு என்னால வர ஏலாமக் கிடந்தது. ஏனெண்டா அவர் அவ்வளவு நம்பிக்கை ஊட்டுற மாதிரிக் கதைப்பார்.

உண்மையிலயே மனுசத் தன்மையோட வாழ்றது அபூர்வம். அதுவும் என்ன மாதிரி இருக்கிற வேட்ட கொஞ்சமாவது இரக்கம் காட்டி வாழ வேண்டாம்? இவ்வளவு கேவலமா நடக் கோணுமா?

அண்டைய நாள் இன்னும் நினைவிருக்கு. உடம்பில ஓடிக் கொண்டிருக்கிற கடைசிச் சொட்டு உசிர் சாகிற வரைக்கும் மறக்க ஏலாத நிமிஷங்கள்.

பல தடவை என்னை அதையே திரும்பத் திரும்பச் சொல்லி தயார்ப்படுத்தியிருந்தார். கட்டாயமா இதன் மூலம் ஆப்ரேசனுக்கு காசு கிடைக்கும். இந்த நிகழ்ச்சியப் பாக்கிற வெளிநாட்டில வாழக் கூடிய சில இலங்கையராவது உதவி செய்வினம். அதவச்சு வைத்தியம் செய்வம் எண்டார்.

அதேபோல ஐந்து லச்சம் வரை கிடைச்சதா அறிஞ்சன். அப்ப அது உண்மதான். புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கட சனம் எனக்கு உண்மையா உதவோணும் எண்டு நினைச்சு ஒவ்வொரு லச்சத்தையும் எவ்வளவு கஷ்ரப்பட்டு அனுப்பிருக்குங்கள். எல்லாத்தையும் ஏமாத்திக்கொண்டு போயிற்றானே.

அப்ப எல்லாம் நடிப்பா, பேசினது, பழகினது, நல்ல மனுசனா காட்டிக் கொண்டது....?

நிழலாடி நிழலாடிப் போனது அன்றைய நாள்... அந்த நிமிசங்கள்...

கச்சைத் துண்டையும் கழற்றி வீசி,

அந்தரங்கத்திற்காய் பிச்சை போடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டேனா...

நானா.... நானா.....

குப்புறக்கிடந்த தலையை நிலத்தோடு முட்டி வலிக்கச் செய்கிறேன். வலி தெரியேல்ல.

அண்டைக்கு பத்து மணி. ஸ்ரூடியோக்குள்ள. அது நேரடி நிகழ்ச்சி. வெளிநாடுகளில் இணையத்தில் நேரடியாப் பார்க்கலாம்.

"என்ரபேர் சீலன், நான் கடைசிச் சண்டையில என்ர சில உறுப்புகள இழந்திற்றன். இஞ்சே என்ரகையள பாருங்க" எண்டு முழங்கையோடு கட்டாகிக் கிடந்த கைகளை, சதைத்துண்டங்கள தூக்கி ஆட்டிக் காட்டினன். அந்த நிமிஷம் இதயம் தீயாய் எரிஞ்சு, அழுதுவிட்டேன். கையள மட்டுமில்ல ஒரு காலைக் கூட இழந்திருக்கிருக்கிறன் பாருங்க... என்ர கால, கையப் பாருங்க, எனக் குனிந்து கைச்சதைத் துண்டத்தால தொடையோடு கிடந்த காலை தூக்க முயன்று, தடுமாறிக் கீழ விழுந்திட்டன். அருகில் கணணியில் வேலை செய்த பெடியன் ஓடிவந்து தூக்கிவிட்டான். ஒற்றைக் காலால் கெந்திக் கெந்தி அதே இடத்திற்கு வந்து நிண்டன்.

மீண்டு பேச ஆரம்பிச்சன். "சண்டையில நிறையச் சனங்கள் எல்லாத்தையும் இழந்து, உயிர்களையும் இழந்து தான் இருக்கினம். நான் என்ர சகோதரங்கள், அப்பா எல்லாரையும் இழந்திட்டன். எழுபது வயசில அம்மா மட்டும் தான் இருக்கிறா. ஆரும் எங்களுக்கு இதுவரை உதவ முன்வரேல்ல. ஒரு கால், ரண்டு கையும் இல்லாம என்னால ஒண்டுமே சுயமாச் செய்ய முடியேல்ல. நான் அப்பவே செத்துப்போயிருக்கோணும். துரதிஷ்டவசமா தப்பிற்றன். ஆரும் பக்கத்தில உதவி செய்ய இல்லை. பொய்க்கால் போட பணமும் இல்ல, விரக்தியில சாகலாம் எண்டா அதுகூட என்னால செய்ய முடியேல்ல. இஞ்ச பாருங்க. (கையை ஆட்டியபடி).

சிறுநீர் கழிக்கக் கூட எனக்கு ஆரும் உதவி செய்தால் தான் முடியும், இந்த நிலம ஆருக்குமே வரக்கூடாது. தயவுகூர்ந்து (அந்த சதைத்துண்டங்களால் வணங்கியபடி). எனக்கு உதவுங்கள். கை கால்கள பொருத்த நீங்கள் செய்யும் சின்ன உதவிகூட எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வரலாம். தயவு செய்து எனக்கு கைகால்களை பெற்றுத்தாருங்கள்.

அழுதுவிட்டேன்.

உருக்கமான அந்த உரையை அவர் சொன்னதுபோலே செய்தேன். ஆனா....

ஐயோ... ஐயோ.... ,இந்த வலியை எதைச் செய்து மாற்றுவன். கைகளின் மீதச் சதைத்துண்டங்களை இரண்டு பக்கங்களிலும் அடிக்கிறன். இன்னும்.... இன்னும்... பலமா அடிக்கிறேன். நல்லா வலிக்கட்டும்!

நிறைய வலிக்குது. நுணியில் எரிவுகூட.

சடலமாய் கிடந்த உடல் குலுங்கிக் குலுங்கித் தணிகிறது.

இன்னும் ஓங்கி அடிக்கிறன்.

வலக் கைத்துண்டத்தை ஒரு முழுக்கை பற்றும் உணர்வு. மெல்லத் திரும்பிப் பார்க்கிறன்.

சிவந்த கண்ணில் துளி நீருடன் தலைமுடியை மற்றகையால் வாரிவிட்டபடி அருகில் சிலோன் சுந்தரி.

"அம்மா குளிக்கிறா..."

முகத்தைத் திரும்ப குப்புற வைத்துக் கொண்டேன்.

"நான் இருப்பன்" என்கிறாள்.

என் உடல்மீது சாய்ந்தபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுவும்
# ரயிலில் கிழிந்த சேலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ**வுனியா புகையிரத நிலையம். ஒன்பது மணி மட்டுமேயாகியிருந்தது. இன்னும் நாற்பது நிமிடங்களில் இரவு மெயில் ரெயின் புறப்படத்தயாராக நின்றது. புகையிரத நிலையம் சனம் சந்தடியாகத்தான் இருந்தாலும் களையிழந்த கோலத்திலே பல ஆண்டுகள் சிறையிருந்து விடுதலை பெற்ற ஒரு முதிர் கன்னியைப் பேலிருந்தது. எவ்விதமான படைகளோ தடைகளோ யாரையும் மறித்துச் சோதனை போட வில்லை; பயங்கர வாதத் தடைசட்ட அனுமதிப் பத்திரங் களைக் கோரவும் இல்லை; பயணத்திற்காகக் கொண்டு செல்லும் ஆடைப் பொதிகளைக் கிண்டிக் கிளறி ரகசியமாக மறைத்து வைத்திருக்கும் உள்ளாடைக் கோலங்களை அருகே மோதிக் கொண்டிக்கும் கூட்டத்திற்குள் அம்பலப்படுத்தும் அருங்காட்சிளோ நிகழ்ந்து விடவில்லை. அதைக் கண்டு முகம் சுழிக்கவே சைசுகளில் வியக்கவே அருகில் யாரும் உரசிக்கொண்டு காத்துக் கிடக்கவு மில்லை. இவையெல்லாம் இல்லாமல் சில்மிசங்களால் சிணுக்கப்படாத முதிர் கன்னியாய் இப்புகையிரத நிலையத்தைக் காண புதிய வியப்பாகவே இருந்தது சசிகலாவிற்கு. பல ஆண்டுகளுக்கு முன் முற்றிலும் வேறுபட்டதாய் கண்டமையால் இது ஒவ்வாமையாகவே இருந்தது அவள் மனசிற்கு. இன்றைய நிலைப்பாட்டில் தடைமறித்தல்,பரிசோதித்தல்,பதிதல்என்றகெடுபிடிகள் இல்லாது இருந்தாலும் முன்னைய கலகலப்பு கரைந்துதான் கிடந்தது. சனங்களின் முகங்களில் ஏதோ கலக்கம் அப்பிக் கிடக்க தம் நிழலையும் யாரோ பின் தொடர்கிறார்களோ எனும் அச்சுறுத்தலுடனேயே திரிந்தனர். முன்னரைப் போலன்றி உள்ளே வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையசைத்து வழியனுப்பும் கூட்டம் சற்று அதிக மாயிருக்க, வெளிநாட்டு சூட்கேசுகளின் இழுவல்கள் அதிகமாய் தம் பெருமை கூறிச் சென்றன.

"ஆன்ரி மொபைல கொஞ்சம் தாங்கோ" என அவளின் அனுமதியைக் கூட எதிர்பார்த்துக் காத்திராமல் கையிலிருந்த மொபைல் போனைப்பிடுங்கி எடுத்த மஞ்சு ஒரு மூன்று வரிசை தள்ளிப்போய் யாருடனோ பேசினாள். பின் நமட்டுச் சிரிப்போடு பக்கத்து இருக்கையில் வந்தமர்ந்து மொபைலை நீட்டினாள். அதை வாங்கியபடியே அவளைப் பார்த்தாள். இன்னும் அதே நமட்டுச் சிரிப்பு. சசிகலாவிற்கு வியப்பாக இருந்தது, ஒரு சம்பிரதாயத்திற்காகவாவது நன்றி கூறாதது. "ஆரோட பேசினனி" என உதடு வரை வந்த வார்த்தைகளை அப்படியே முழுங்கிவிட்டாள். பேசிய எண் அழிக்கப்படாமல் அப்படியே கிடந்தது. அதை கவனக் குறைவாக விட்டதாய் தோன்றவில்லை. அதை தோள்பையினுள் வைத்துவிட்டு அவளோடு பேச விரும்பாமையால் நித்திரைத்தூக்கம் போல் பாவனை செய்து கண்களை மூடிக்கொண்டு இருக்கையில் பின்புற மாய் சாய்ந்தாள்.

பத்தாண்டுகளின் பின்பே வவுனியாவிற்கு மீண்டும் வந்திருக்கிறாள். ஊர் அப்படியே புரட்டிப்போட்டது போல் மாறிக் கிடந்தது. முதலில் கண்ணில் பட்டது ஆங்காங்கே நின்று தலையசைத்து வரவேற்ற உயர்ந்த மரங்கள் பல காணாமல் போனமையும், இவற்றிற்குப் பதிலாகவே என்னமோ பிரதான வீதிகள் தொட்ட, சீனக்கொடிகளோடு சிறு கம்பங்கள் நாட்டப்பட்டிருந் தமையுமே. இவை 'சீன இனப்பரம்பலுக்கான முன்னறிவித்தலோ அல்லது அயல்நாட்டின் ரகசிய சேகரிப்பின் நேந்திரலிடலுக்கான லஞ்சமாகக் கூட இருக்கலாம். சீனர்களைப் போலவே சீனம் தாங்கிய கம்பங்களும் கட்டைக் கொடிகளாகவே இருக்க, மன்னார் பிரதான வீதியினூடு சென்ற இது தலைமன்னார் வரை கூட எனக் கேள்விப்பட்டிருக்கிறாள். மேலும் புத்தன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டிருப்பானோ? எனவும் ஆலமரம் கண்ட இடங்களில் எல்லாம் கொடியோடு குட்டி போட்டிருக்கிறதே! போட்டி போட்டு எழும்பி நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்களும் அழகிய பெரு வீடுகளும், வர்த்தகச் சந்தைகளும் வவுனியாவை பெரு நகராகக் காட்டிக்கொண்ருக்க நகரப் பகுதி வர்த்தகத்தில் ஆங்காங்கே அடக்கமாக இருந்த சிங்களவர்களை இப்போது புற்றீசலாய் காணமுடிந்தது.

சசிகலா வவுனியாவிற்கு வந்து இன்றோடு மூன்று நாட்கள். ஆனால் அவள் கொழும்புக்கு திரும்புவதற்காக இப்போழுது புகையிரத நிலயத்தில் அமர்ந்திருந்தாள். திரும்பத் திரும்ப எண்ணத்தில் காஞ்சனாவும், கண்ணீர் விட்டு கதறி நின்ற அவளுடைய அவல நிலையுமே தோன்றி மறைந்தது. காஞ்சனாவும், சசிகலாவும் பால்ய சிநேகிதிகள். ஒன்றாய்ச் சிறு வயது முதல் பயின்று வந்தவர்கள். கஞ்சனா ஊரிலேயே திருமணம் செய்து கொள்ள சசிகலாவிற்கு லண்டனில் திருமணம் பேசி சீதனம் இன்றி கட்டி வைத்தனர். 1998 ஜனவரியில் வன்னி இன் ஹொட்டலில் நடைபெற்றது. அவளுக்கு 22 வயது, மாப்பிள்ளைக்கு 37 வயது. நல்ல அம்சமானவர் தான், சொட்டை விழுந்த தலையு மாய். தளதளவென இருந்த இவளைக் கட்டிக் கொண்டு சந்தோஷ மாகத்தான் கூட்டிக்கொண்டு போனார்.

2001ல் ஒரு தடவை வந்திருந்தாள் தனியாக. “பிள்ளை குட்டி” எனக் கேட்டதற்கு, “என்ன அவசரம் இப்ப, சந்தோஷமா வாழ்கையை விரும்பின மாதிரி வாழோனும்” என்றாள். இந்த முறை “எல்லாம் கடவுள் விட்ட வழி. எல்லாரும் செல்லுற மாதிரியில்லாமல் திருமணம் சில பேருக்கு நரகத்திலையும் கூட நிச்சயிக்கப்படுது” என்றாள். இதைப்பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவளின் தளதளத்த கட்டுடல். 35லும், 50வயது கணவனுடன் வாழும் ஏக்கம் அவளுடலில் வியாபித்துக் கிடந்தது. என்ன கஷ்ரப்பட்டாவது சீதனம் குடுத்து ஒத்த வயது மாப்பிள்ளையையோ அல்லாட்டி அதிலும் குறைஞ்ச வயதுடைய மாப்பிள்ளையையோ வாங்கிவிட வேணும், அப்பிடி இருந்தால் தான் பெரும்பாலும் கற்புடைய மனச்சாட்சியோடு வாழ முனையலாம் என்ற கருத்து மறைமுகமாக அவள் பேச்சில் தொனித்துக் கொண்டிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் காஞ்சனா அப்படியல்ல. 16 வயதில் திருமணம் செய்து இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்று 1997ல் கணவனையும் இழந்தவள். அவர்களது வீட்டுத் தோட்டத்தின் பின்புறமாவே சிங்கள இராணுவத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டான். இதனால் இளமையைச் சுருட்டி தன் பெண் குழந்தைகளுக்காக மிகக் கஷ்டபட்டு வாழ்ந்து, கஜேந்தினி என்ற மூத்த பெண்ணுக்கு சொந்தத்திலேயே கட்டிக் கொடுத்தாள். இளையவள் மஞ்சு. கஜேந்தினிக்கு பெண் குழந்தை பிறந்த இரண்டு வருடத்தில் அவளுடைய கணவன் குளுமாட்டுச் சந்தியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறக்க துன்பச்சுமையும், வீட்டுச் சுமையும் கனக்க துடித்துப் போனாள். இந்த நேரங்களில் எல்லாம் பக்க துணையாக இருந்தவள் சசிகலாவே. துன்பத்தின் ஆறுதலாகவும், பொருளாதார சிக்கல்களுக்காகவும். ஆனால் கணவன் இறந்த 13வது மாதத்தில் கஜேந்தினிக்கு பிறந்த ஆண் குழந்தை பற்றிய ரகசியம் இவர்களிடையே ஒரு விரிசலை ஏற்படுத்தியிருந்தாலும் இம்முறை இலங்கைக்கு வந்தபோது தானாகவே காணவந்து, இளைய மகளின் நடவடிக்கைகளையும் கூறி எப்படியாவது நீதான் காப்பாற்ற வேண்டும் என்று கதறி நின்ற கோலமும் அவளை இளக வைத்து விட்டது.

கஜேந்தினிக்கு புருஷன் இறந்த பின் 13வது மாதத்தில் தான் குழந்தை பிறந்தது என்பதை ஒத்துக்கொண்டதோடு அதற்குக் காரணம் ஒரு பொலீஸ்காரன் என்ற ரகசியத்தையும் கூறிவிட்டாள். “நான் வேலைக்குப் போனா சின்னவளும் பள்ளிக்கூடம் போயிடுவாளடி; முன்னுக்கு பொயின்ற் போட்டிருந்த பொலீஸ்காரங்கள் அடிக்கடி வேலியால எட்டி தண்ணியத்தா, கதிரையைத்தா, கம்பத்தா எண்டு பல்லக் காட்டிக் கொண்டு வந்து போனதில சிந்தக்க எண்டவன் இவளோட கூடப் பழகி இருக்கிறான். உதுக்கு புருசன் போட்டான் எண்ட கவலையை விட உடம்பு அரிச்சல் தான் பெரிசாப் பட்டிருக்கு. அவன் புள்ளையகுடுத்துட்டு போயிட்டான். உதுக்கு மூண்டு நாலு மாசத்துக்குப் பிறகுதான் புள்ளத்தாச்சியானது தெரிஞ்சிருக்கு சனியன், சனியன். அதுக்குப் பிறகு ஆசுப்பத்திரிக்கு கொண்டு ஓடினா தாயின்ர உசிருக்குத்தான் ஆபத்து கலைச்சா எண்டிட்டினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெத்த வயிறு கேக்கேல்ல உவள சாகடிக்க. என்ன வந்தாலும் சமாளிக்கலாம் எண்டு அப்பிடியே விட்டிட்டன" என வயித்தில அடிச்சுக் கதற எல்லாம் மறந்து தோழியை எப்படியாவது ஆறுதல் படுத்த வேண்டும் என முனைந்ததில் கோபம் போன இடம் தெரிய வில்லை. அதுவுமில்லாமல் உடற்கூறுகளின் இளமைப்பசி வேகத்தையும் அறிந்து அதனால் மிக அவஸ்தைப்பட்டு தன் மனச்சாட்சியை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உடன்பட வைத்து பிறழ்வு வாழ்வைப் பழக்கப்படுத்தியவள். அதனால் இதைப் பெரிதாக விமர்சனம் செய்யவோ கண்டு கொள்ளவோ இல்லை. காஞ்சயாவின் இளமையின் பிறழ்வற்ற வாழ்வும், கண்ணீரும் நெஞ்சில் ஈரத்தைச் சுரக்க, அவளுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டும் என முனைந்தாள்.

குலுங்கி முன்னோக்கி உந்தப்பட, நேராக நிமிர்ந்து அமர்ந்து கொண்டாள். புகையிரதம் புறப்படத் தயார் நிலைக்கு வந்தமையே குலுக்கலுக்கான காரணம். திரென மஞ்சு எழுந்தாள் தோள்ப் பையைத் தூக்கியபடி "அன்ரி இவர் என்னோட பெஸ்ற் பிறண்ட் அடுத்த பெட்டியில இருக்கிறார்" என உயர்ந்து நின்ற கறுத்த உருவத்தைக் காட்டினாள். அவன் முகத்தில் வழிந்த உணர்வை யோசிக்கவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அவன் தன்னைப் பார்த்த பார்வையும் முகத்திலிருந்து உடனே கீழிறங்கி அங்கங்களை மேய்ந்த செயலும் அவனைக் கடைந்தெடுத்த ஒரு காமக்காடையன் எனப் பிரகடணப்படுத்தியது.

பக்கத்தில் நின்ற ஒருவனைக்காட்டி வந்த காடையன் "மெயா மெத்தன தமாய் இண்ட ஓணே சுட்டக் வெலாவ" (இவன் இஞ்சைதான் கொஞ்சநேரம் இருக்கோணும்) என மஞ்சுவைப் பார்த்துக் கண்சிமிட்டினான். அவளுக்கும் புதியவனாக இருக்க வேண்டும். புதியவனைப் பார்த்து "மெயா கௌத ஜ மெத்ன இண்டேணே" (இவன் யார் ஏனிஞ்சை இருக்கோணும்), "மங் பஸ்ஸ கியன்னே" (நான் பிறகு சொல்றன்) என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசிகலாவுக்கு எதுவும் புரியவில்லை. என்னவென்று விசாரிக்க முனைந்தவளை பேசவிடாது "அன்ரி நான் இவரோட கொஞ்ச நேரம் அடுத்த பெட்டியில கதைச்சுக் கொண்டிருந்திட்டு வாறன் அதுவரைக்கும் இவரிதிலை இருக்கட்டும்" என இரண்டாவதாய் நின்ற புதியவனைக் காட்டினாள். "வேண்டாம் வேண்டாம்" என அவளின் கையைப்பிடித்து தடுத்தவளை சிறிதும் சட்டை செய்யாது அவள் அவன் பின்னால் செல்ல, புதியவனும் யார் பதிலையும் எதிர்பார்க்காமல் அமர்ந்து கொண்டான். சசிகலாவிற்குள் நெஞ்சிற்குள் ரயில் ஓடியது. மஞ்சுவின் பின்னால் சென்று அவளைத் தடுத்து நிறுத்தவோ, இவனைத் தாண்டிச் செல்லவோ முடியாமல் ஒரு நிமிடம் ஸ்தம்பித்து நின்றவள் சுதாகரித்துக்கொண்டு இருக்கையில் அமர்ந்தாள். சிறிது நேரத்தில் வருவதாகத்தானே கூறிச்சென்றாள். அதுவுமல்லாமல் இந்தப் புதிய சிங்களவன் வேறு இங்கே எந்தப் பொதியுமில்லாமல் அமர்ந்திருக்கிறான். அதனால் எப்பிடியும் வந்துடுவாள் இன்னும் பத்து இருபது நிமிடத்தல என தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். கண்ணை மூடி மனதை அமைதிப்படுத்த முயன்றாள்.

அவள் அமர்ந்திருந்தது குளிரூட்டப்பட்ட 2ம் வகுப்புப்பெட்டி. மிக வசதியாக இருக்கும். அப்படியே சாய்ந்து தூங்குவதும் இலகு. மஞ்சுவை அழைத்துச் சென்ற அடுத்த பெட்டியும் 2ம் வகுப்பு குளிரூட்டப்பட்டதே.

திடீரென அவளது புத்தியில் பொறிதட்டியது "இவன்தான் அவனாக இருக்குமோ...! காஞ்சனா சொன்ன அந்த கொடித்துவக்கு? ஓம் அப்பிடித்தான் இருக்ககோனும். அவள் சொன்ன தன்மை யெல்லாம் இவனிட்ட இருந்ததே, அதால இவனாத்தான் இருக்கா கோணும். வேகமாய் கைப்பையின் சிப்பைத் திறந்து மொபையிலை எடுத்தவள் காஞ்னாவின் எண்ணை அவசரமாய் தேடினாள்; பக்கத்தில் இருந்தவன் நினைவுக்கு வர மெல்லத் திரும்பிப் பார்த் தாள். அவன் கண்கள் தன் உடலில் அலைந்து கொண்டிருப்பதை கண்டாள். உள்மனம் ஏதோ சொல்ல எடுத்த மொபைல அப்பிடியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்ப வைத்துவிட்டாள். "கொஞ்ச நேரத்தில வாறன் எண்டு தானே சொன்னவள் வந்திடுவாள். இப்ப போண் பண்ணி காஞ்சனாவை ஏன் கலவரப்படுத்துவான்" என எண்ணியவாறே நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

பத்து. பதினைந்து என நேரம் போக புகையிரதமும் புறப் பட்டது. சிறிது நேரத்தில் பயணச்சிட்டை பரிசோதகர் பரிசோதித்து விட்டு மின் விளக்குகளை அணைத்து கடைசி இருக்கையில் அமர்ந்து கண்மூடி சிறிது நேரத்திற்குள்ளாகவே குட்டிக் குட்டிக் கொறட்டைகளாய் அனுப்பிக் கொண்டிருந்தார்.

அசதி அதிகமாகவே இருக்க நிலை மறந்த நிலையில் தூங்கிக் கொண்டிருந்தாள். நேரம் 11.45ஐத் தொட்டுக் கொண்டிருந்தது. பயணிகளுள் பெரும்பாண்மையானவர்கள் தூங்கிக் கொண்டி ருந்தனர். தடதட சத்தத்தை மீறிய சில குட்டிக் குறட்டைகளைத் தவிர பலரின் மூச்சுக் காற்றுக்கள் மட்டுமே பேசிக் கொண்டிருந்தன.

சசிகலா இடப்பக்கத் தொடையில் பூச்சி ஊர்வதை போல் உணர தூக்கத்திலேயே அதைத்தட்டி விட்டுத் தொடர்ந்தாள். மறு படியும் ஊரும் உணர்வு மேல் தொடை நோக்கி.... தட்டிவிட்டுத் தொடர்ந்தாள். தலையின் கூந்தலோடு விரல்கள் கோதி வருடும் மயக்கத்துள் உணர்த்தப்பட்டாள். அது கிறக்கமானதொரு உணர்வைக் கொடுக்க குணுகிக்கொண்டு யன்னல் பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டு இருக்கையோடு அழுந்தப் படுத்துக் கொண்டாள். தலையைக் கோதும் கிறக்கம் பெரும் கிளர்வை ஏற்படுத்த நித்திரையாகியிருந்த அவளுக்கு உணர்வூட்டும் கனவாகவோ ஓடியது. அவள் கூந்தல் ஸ்ரைட்டிங் செய்யப்பட்டு விரிந்து தோளோடு குட்டையாக வெட்டப்பட்டிருந்தது. இதனால் வருடலுக்கும் தொடுதலுக்கும் இலகுவாக உள்ளே நுழைந்திருந்தது விரல் கள். கூந்தலின் தொடர்ச்சியாய் விரல்கள் கன்னங்களில் இறங்கி கீழுதட்டை வருடி... கழுத்தில் இறங்கி மெல்ல மெல்ல கீழ் நோக்க... சசிகலா திடுக்கிட்டு சுய உணர்வுக்கு வந்தாள்.

விழித்த மாத்திரத்திலேயே புரிந்து கொண்டாள், இது அழகிய கனவல்ல அசிங்கமான அந்த சிங்களவனின் செயலெனா. இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்த அவள் மனசு படபடக்கத் தொடங்கியது; அவன் கையைத் தட்டிவிட முயன்றாள் முடியவில்லை. அவன் பக்கமாய்த் திரும்பிப் பார்த்து முறைத்தாள்; அவனோ மர்மமான புன்னகை ஒன்றை வீசினான். அவளுக்கு எரிச்சலும் கோபமுமாய் வர பின் இருக்கை யில் யாரும் உதவக் கூடியவர்கள் இருக்கிறார்களா எனத் திரும்பிப் பார்த்தாள். அங்கும் இரண்டு சிங்கள அதுவும் ஆமி முகமாகவே தெரிய பக்க இருக்கைகளைப் பார்த்தாள், அதே நிலைமைதான். எல் லாமே பயங்கரமாகக் காட்சியளித்தன. இருக்கையிலிருந்து எழும்ப முற்பட்டாள். ஆனால் அவன் எழும்பவிடாமல் மார்பின் மீதூர்ந்த கையை அழுத்தமாக அழுத்தி, மறுகையில் இருந்த ஏதோ ஒன்றை அவள் கையில் திணித்தான். விரித்துப் பார்த்தவள் விக்கிப் போனாள் இரண்டு இரண்டாயிரம் ருபாய்த் தாள்கள்; தீய்ச்சூடாக அவன்மீது வீசினாள். அவன் காதோரமாய் முகத்தைக் கொண்டுபோய் அவள் செவிகளை நாக்கால் துளாவி "ஐய் மதித...?" (ஏன் போதாதா) என்றவன் மாமிசத்தைக் கண்ட வேட்டை நாயாய் அவள் கழுத்தை நக்கினான். இதற்கிடையில் ரெயின் வேகம் குறைந்து நின்றது. அனுராதபுரம் நிலையமாக இருக்க வேண்டும். இரண்டு பேர் புதிதாக அனுமதிக்கப்பட்டனர்.

வியர்த்துக் கொட்டியது. இந்தப் புது நாடகமென்ன? ஒன்று மாய் புரியவில்லை. அவன் இப்பொழுது தன் கையையும் குரூர மூஞ்சையையும் அவளிடமிருந்து எடுத்திருந்தான். தொட்ட இடமெல் லாம் சாக்கடைப் புழுவாக நெளிய முதன் முதலாய் நாற்குணத்தில் ஒன்றான "பயிற்பை" உணர்ந்தாள்.

அவளின் கைபேசி "உர் உர்." மறுபக்கம் மஞ்சு. "அன்ரி இப்ப நான் வர ஏலாது. கோட்டை ஸ்ரேசனில இறங்கினோட வாறன். போண் பண்ணுறன்" துண்டித்துக்கொண்டாள். "இது கட்டாயமா அவன்ரை போணாகத்தான் இருக்ககோணும். ஏனெண்டா ரெண்டுநாளைக்கு முதலே காஞ்சனா போனைப் பறிச்சு வைச்சுட்டாளே. ஆனபடியா இது அவன்ரைதான்." 'நாய், நாய். அவன்ர நம்பரில இருந்து எனக்கு அடிக்குதுதானே நன்றி கெட்ட நாய். அவனோடை போய்க் கிடக்கிறது காணாதெண்டு நம்பரையும் வேற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுத்திட்டுதே. ஐயோ இதுக்கு அடிக்கடி இவன் அடிச்சு இவளோடை நெடுகக் கதைப்பானே வீட்டை கூடக் கூப்பிட்டுடுவாளோ? கடவுளே என்ன செய்யிறது இப்ப கண்ணைக்கட்டுதே' எனத் தலையில் கை வைத்தாள்.

மஞ்சுவுக்கு தன் தாய் தன்னுடன் கொழும்பிற்கு அனுப்பியதை நன்கு உணர்ந்து கொண்டிருப்பாளோ...? அப்படித்தான் இருக்க வேணும். இரண்டு நாட்களில் அங்கு நடந்த கதையையெல்லாம் அவள் தன்னிடம் ஒப்புவித்த போது சசிகலாற்கு கண்ணெல்லாம் இருட்டடித்து துன்பமென்று சொல்ல முடியாத அருவருப்பான அதிர்ச்சியாவே இருந்தது. இப்படியெல்லாம் கூட நடக்குதா....?

2009 யுத்தம் முடிஞ்சு தேசிய போராட்டத்தின் அமைப்பை முற்றாக ஒழிச்சிற்றம் என்ற பேரினவாத அரசின் கூக்குரலைத் தொடர்ந்து, நாட்டில பலவிதமாக தமிழரை சீரழிக்கின்ற நடவடிக்கை யில் ஈடுபட்டும் வருகிறது என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனா இவ்வளவு மோசமா எல்லாம் நடக்குமெண்டு தெரியேல்ல; அப்பிடி நான் நினைக்கவுமில்லை. அகதி முகாமில சொந்தக்காரரக் கூட பார்க்க விடுறதில்லை. வெளில நிண்டுதான் பேசோணும். பேசுறவேட பேச்சு காத்தோட போக மிச்சம் கால்வாசிக்குக் குறைவாய்த்தான் மற்றப்பக்கமா இருக்கிறவேட காதில விழும். அதையும் கமரா வைச்சுக் கவனிக்கினமாம். ஆரும் உடுப்பு தின்பண்டங்கள் என்று கொண்டு போனாலும் அத நேரடியக் குடுக்க ஏலாதாம். உள்ள தான் வாங்கி வைக்கினாமாம். பிறகத எந்தச் சிங்கள நோனா திண்டுட்டு உடுப்ப போடுறா எண்டு ஆர் கண்டது...? சாப்பாடும் பாணும் வெறும் பருப்பும் சோறும்தானாம். பெரும்பாலும் அதுவும் உப்பாம். பிள்ளைகளைப் படிக்க விடுறாங்கள் இல்லையாம். வயசுப் பெடியளுக்கு செக்ஸ் சம்பந்தமான புத்தகங்களையும், வீடியோக்களையும் குடுத்து அதை ஊக்குவிக்கிற மாதிரியா செயற்படுகினம் எண்டும் சொல்லுகினம். இதுக்குக் காரணம் இன்னொரு நல்ல கல்வி அறிவான, ஆரோக்கிய மான தேசிய உணர்வுடைய துடிப்பான தமிழ் சமூகம் உருவாகக் கூடாது எண்டது. இப்பெல்லாம் யாழ்ப்பாணத்து ஆம்பிளையள் வேலை முடிஞ்சதும் நேரா வீட்டுக்குப் போறதில்லையாம். அங்கங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்குச் சந்தி நிண்டு இந்த கோல்கேள்ஸ கூட்டிக் கொண்டு போறானுகளாம். அது மட்டுமே?... யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்திற்குப் பின்னால லொச்சுகளும் இயங்குதெண்டு கேள்வி. குடும்பத்து விடலைப் பெட்டையளுக்கு அடிக்கடி போன் வருகுதாம். அதுகளும் திடீர் திடீரென்று வெளிக்கிட்டுப் போகுதுகளாம். அங்க பொலிஸ்காரன் ஆமிக்காரங்களோடை ரூம்களுக்காம்.

அவளின்ர பெட்டையும் உப்பிடி ஒரு பிரச்சனையில மாட்டி நிக்கிறாள் எண்டு சொன்னவள். அடிக்கடி போன் வருது வெளிக்கிட்டு வெளியில போறாள். எங்கை எண்டா பதிலில்லை. போன்கூட எப்பிடி வந்ததென்று தெரியேல்லை. கேட்டா அங்கையிங்கை எண்டு மழுப்பிப் போட்டாளாம். ஒரு தடவை கற்பமாகி இருக்கத்தான் நடத்தது தெரிஞ்சதாம். வவுனியா நெளுக்குள தொழில்நுட்பக் கல்லூரியில் இப்ப இருக்கிற அகதி முகாமோடை பக்கத்திலை இருக்கிற வீடுகளையும் பறிச்சுப் போட்டுட்டாங்களாம். பொலிஸ் ஆமி ரூம்களாப் பாவிக்கினமாம். ஊரில 14 தொடங்கி படிக்கிற பெட்டையளைவிரட்டி மிரட்டி மடக்குறாங்களாம். முதலில் பயந்த சிலது இப்ப பழகி ருசி கண்ட பூனையாகிட்டுதுகளாம்.

மஞ்சுவும் இதில பெரிய விருப்புப் போல நடக்கிறாளாம், எப்ப போன் வந்தாலும் ஓடிப் போறாளம். சில நேரம் இரவில கூட வாறதில்லை எண்டாள். ஏனெண்டு கேட்டா பிரண்ட் வீட்டில நிண்டன் அப்பிடி இப்பிடி எண்டுறாளாம். கத்திச் சண்டை போட்டு செத்திடுவன் எண்டு மிரட்டி வீட்டில கட்டிப் போட்டா, உந்தக் கொடித்துவக்கு எண்ட பொலிஸ்காரன் வீட்டுக்கே வந்திட்டானாம், அவளோடை படுக்க... ஒருநாள் இப்பிடிக்கூட நடந்ததாம். எப்பிடியிருக்கும் இந்த மாதிரி நடந்தால் ஒரு தாய்க்கு? அதுவுமில்லாமல் நானும் விதவை மூத்தவளும் புருஷன் இல்லாமல் இருக்கிறாள். ஒரு நாள் அவளுட்டையும் சேட்டையைக் காட்டிப்போட்டான்; என்ன செய்வன் நான்? எண்டு பரிதவிச்சுப் போய் நிண்டாள் காஞ்சனா.

மஞ்சுவோட கர்ப்பத்தை குளிசை குடுத்துக் கரைச்சிட்டாளாம்; அவன் வீட்டை வராமலிருக்க என்னவாவது செய்யட்டும் எண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுட்டன் எண்டாள். இப்ப நீதான் எப்பிடியாவது உவளை உருப்படியாக்கோணும், இல்லாட்டி இப்படியே போனால் நானும் இளசாத்தானே இக்கிறன் எண்டு ஒரு நாளைக்கு என் மேலையும் கை வைப்பான் போல கிடக்கு. அவன் பார்வையும் அடிக்கடி அதைத்தான் சொல்லுற மாதிரிக் கிடக்கு.

இதைக் கேட்டதும் எனக்கு உச்சந்தலையில சம்மட்டியால அடிச்ச மாதிரி இருந்துது. அதுதான் போனையும் பறிச்சுப் போட்டு ஏழுமணிக்குத்தான் கூட்டிக்கொண்டு வந்தது. ஆனா உவள் எப்படியே உவனிட்டைச் சொல்லி வரவைச்சிட்டாளே! லண்டனில பக்கத்து ரூமுல ஒரு பெடியன் இருக்கிறான். சாதுவா வெருண்ட கேஸ். பெட்டையளைப் பாத்தா அல்வாவை பாத்தமாதிரி வழியும். அவனுக்கு யாரும் பொம்பிளை குடுக்கேல்லை. லவ் கிவ் ஏதும் இருக்கிறதாயும் தெரியேல்லை. வீசாவோடையும் இருக்கிறான். மஞ்சு பாக்க லட்சணமா வடிவா இருக்கிறதால எப்பிடியும் அவன் கிறங்கிடுவான். அந்த இழிச்சவாயனைப் பிடிச்சு இவளுக்கு எப்படியாவது கட்டி வைச்சிடோணும். அவனும் கொழும்பு வந்திருக்கிறான்; இவளைப் பாத்து எப்படியும் வழியத்தான் போறான்; அதைச் சாட்டா வைச்சு, போக முதல் எழுதிப் போடோணும், இந்த நிமிடம் வரையும் இதைத்தானே நினைத்திருந்தாள், தோழிக்கு எப்பிடியாவது உதவ வேண்டும் எண்ட நோக்கில் சசிகலா.

என்னதான் நெறி தவறின வாழ்க்கையைத் தொட்டுத் தொட்டு வாழ்பவளாக இருந்தாலும், ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாவே இந்த இளைஞர் தொடர்பான அரசின் ராணுவத்தினூடாக கட்ட விழ்த்து விடப்பட்ட சீரழிவுகளின் மூலமான வன்முறை இருக்கிறது. இவ்வாறான சீரழிப்பு நடவடிக்கையின் முடிவுகள் எஞ்சியிருக்கும் தமிழ் சமூகத்தை எப்படித் தாக்கும் என்பதை ஜீரணிக்க முடியாமலே இருக்கிறது

இப்பொழுது ரயில் மா கோசந்தியை தாண்டியிருக்க வேண்டும். மீண்டும் சுவாசங்கள் மட்டும் பேசியிருக்க அவன் மட்டும் விழித்திருந்தான். இடம்மாறி அமர இருக்கைகள் உண்டா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை சுழலவிட்டாள் எதுவும் காலியில்லை. நிரம்பி நித்திரை வழிய இருந்தது. இவனைப் பார்க்கையில் உயிர் உலையாய் கொதித்தது. அவன் கண்ணில் அதிபோதையேறியிருந்தது. திரும்பி யன்னல் பக்கமாய் சாய்ந்தாள். தடதடத்த தண்டவாளத்தோடு அவள் இதயமும் சேர இரவு நாராசமாய் ஓடிக்கொண்டிருந்தது.

இருக்கையின் மேற்பகுதியிலிருந்த கை மீண்டும் தோளில் விழுந்து ஊரத்தொடங்கியது, துகிலுரிந்த உணர்வாய் கையைத் தட்டிவிட்டாள், கை அட்டையை விடவும் ஒட்டிக்கொண்டது. கழுத்தில் ஐவிரல்களும் பரம்பி மெல்ல மெல்ல இறுக்கிக் கொண்டிருந்தது. திணறித்தான் போனாள். கூச்சநாச்சம் அருவருப்பு ஓடிப்போக, உயிர்ப்பயம் மெல்லமாய் தலை நீட்டியது. "மானத் திற்காய் உயிரைவிட எப்ப நான் கவரிமானாய் வாழ்ந்திருக்கிறன்? உயிரைப் பாதுகாத்தலின் அவசியமே இங்கு அவளுக்கு அதிகமாக, கொஞ்சமாய் இறுக்கத்தை தளர்த்தினாள். கைகளில் அதே கடாதசி... இப்பொழுது மூன்று இரண்டாயிரம் ரூபாய் தாள்கள். பணம் அப்படியே இறுகிக் கிடக்க அவள் இயன்றவரை உணர்வற்று இருந்தாள். அவசர மாய் அந்தச் சிங்களவன் எழும்பிச்சென்றான், இத்தோடு ஆறாவது தடவை, சிறுநீர்க் கழிப்பறைக்காகத்தான் இருக்க வேண்டும்.

நாழிகை சில கடந்து போக திடீர்க் குலுக்கலோடு நின்றது ரயில். அவனைத் திரும்பிப் பார்த்தாளவள். கோணிய முகமாய் காற்சட்டையைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஈரம்பட்டுக் கிடந்தது. சிறுநீர்க் கழிப்பிடத்தால் ஒரு நபர் வெளியேற இவன் அவசரமாய் எழுந்தோடினான். நிமிர்ந்தவளுக்கு ஆடை அவிழ்ந்த உணர்வு, அதே வேகத்தில் குறுகியமர்ந்தாள். மார்பாடை குக் கழன்று கிடந்தது. அதை இழுத்துக் கொழுவ... ஏற்பட்ட அசைவில் மார்பு பாரமாய் வலிக்க முலைகள் புடைத்து புண்ணாய் நோவு எடுத்தது. உள்ளாடையும் கூட இழுபட்டு விலகித்தான் கிடந்தது. உடம்பு எரிமலைக்குழம்பானது. தவிப்பு கோபம் படபடப்பு, அவருவருப்பு, தன்னிலைக் காழ்ப்பு எல்லாம் ஒன்றாய் குமைய யன்னலை விலக்கிப் பார்த்தாள். நீர் கொழும்பு புகையிரத நிலையம். தலைக்குள் கிறுகிறுப்பு அவசர மாய் கைப்பையையும் சிறிய உடைப்பொதியையும் எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அவன் தன்னைக் காணக்கூடாதே என்ற வேகத்தோடு இறங்கினாள். சிறிதும் தாமதிக்காது அதே வேகத்தில் ஆட்டோ ஒன்றில் ஏறி விரைந்தாள்.

'ஐயோ நல்லவேளை இருக்கற வீட்டு விலாசத்த காஞ்சனா வீட்டுக்கு குடுக்கேல்ல. இப்ப காணேல்ல எண்டு பார்த்தாலும், கோட்டை ஸ்ரேசனில தான் இறங்குவனெண்டு நல்லாத் தேடுவான். தேடட்டும். சீச்சீ... எவ்வளவு அருவருப்பாக்கிடக்குது. உவளுக்கு நல்லது தானே செய்ய நினைச்சன். இப்பிடிக் கேவலா மாட்டி விட்டிட்டாளே, எல்லாம் நாசமாப்போச்சே. உவங்கள் வீட்டுக்கே வந்திட்டால் என்ர நிலைமை?' படபடத்த நெஞ்சில கையை வைத்து அழுத்தினாள். எங்கட பொடியள் இருந்தால் உதெல்லாம் நடக்குமோ? தலைகீழா கட்டி நேர குறியில் வைச்சிருப்பாங்கள் வெடி... சே... இதுக்கும் எங்கட சிலதுகள் இளிச்சுக் கொண்டு போகுதுகள் தானே.. எப்பிடி இருந்தது இந்த இரண்டு வருசத்தில இப்பிடி எல்லாம் போச்சே...!"

நேரம் விடிகாலை 4.50. ஹெந்தல சந்தி திரும்பியதும் நெடிய மூச்சொன்றை நிம்மதியா விட்டாள் சசிகலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதானந்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ச**தானந்தி!

அழகான பெயரெல்லோ?

எனக்கு இப்ப கதையே மாறிப் போச்சாம், அம்மா அடிக்கடி எனக்கு பேசுறவா. இப்ப ரெண்டும் கெட்ட ஒரு வழக்கில தான் என்ர பேச்சு இருக்கு தொண்டு.

இந்த வடிவான பெயருக்கு சொந்தமாக கதையை சொல்லத் தொடங்கேக்கயே எனக்கு எங்கட ஊரில தொதல் சாப்பிட்ட ருசி வாய்க்குள்ள எச்சில நிரப்புது.

"தொதல்" ஒரு இனிப்புத் தின்பண்டம். எங்கட ஊரில பிரசித்தி பெற்றது. எனக்கு தொதல் எண்டால் சரியான விருப்பம். ஒரு நாலைஞ்சு வயசிருக்கும். அம்மம்மாட அறுபதாவது பிறந்த நாளுக்கு அப்பா பெரிய தாச்சிச்சட்டியில நிறையச் செய்தவர். அப்ப நாங்கள் கரையில இருந்த தேங்காய் சிரட்டேக்க போட்டுக் கொண்டு குசினித் தாழ்வாரத்தில இருந்து சாப்பிட்ட ஞாபகம் இன்னும் எனக்கு மறக்கவேயில்ல. ஆனா அதுக்குப்பிறகு அப்படி ஒரு சுவையில நான் சாப்பிட்டதே இல்ல. என்ர ரண்டாவது அக்கா சில நேரத்தில செய்து கொணந்து தருவா. தொதலா மஸ்கற்றா எண்டு கண்டேபிடிக்க முடியாமல் இருக்கும். பாவம் அவ சரியான மென்மையானவ. அவவ அப்பா முந்தி இப்பிடித்தான் திட்டுவார்: "காலில கறையான் பிடிக்கப்போகுது கெதியா நட" எண்டு.

சரி நாங்க தெதலுக்கு வருவம். பதினைஞ்சு வருசத்துக்குப் பிறகு நான் நல்ல ருசியான தொதல சாப்பிட்டது சதானந்தி செய்து கொணந்தது தான். அவள், நான் சின்ன வயசில இருந்த ஊரில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவள். அந்த ஊருக்கு பூவரசங்குளம் எண்டு பெயர். அவ்வளவு அழகா இருக்கும். சந்தியில ஒரு பக்கம் பள்ளிக்கூடம். பெரியபள்ளிக்கூடம் தான். A/L வரை இருந்தது. மற்றப்பக்கம் ஐஞ்சாறு ஏக்கர் நீளம் வரை டிஸ்பன்சறியும் வாட்டும் கட்டப்பட்டிருந்த மருத்துவமனை. மன்னார் வரையும் இருந்து இங்க தான் வருவினம். நிறையக் குழந்தைகள் எல்லாம் அங்கதான் பிறந்தது. அந்த ஆசுப்பத்திரி காணிக்க பெரிய ஆலமரம் நிண்டது நிறைய விழுதுகளோட. அந்தக் காலத்தில ஆசுப்பத்திரி வளவுக்கும் அதுக்குள்ள இருந்த முரலி மரம், ஆலமரம், பாலமரம், ஆசுப்பத்திரி கட்டிடங்கள் எல்லாத்துக்கும் நான்தான் இளவரசி. விதவிதமான ஆலம் விழுதுகளில் இஷ்ரப்படி விதவிதமாக ஊஞ்சல் ஆடுவோம். என்னை வெருட்டும் தைரியம் அந்த மரத்திற்கு தாவிவரும் குரங்கிற்கு மட்டும் தான் இருந்தது. காரணம் என்ர அப்பாச்சி அங்கு தாதியாக இருந்ததே. இருந்தாலும் அவரெண்டால் எல்லாருக்கும் சரியான பயம். திரேசம்மா வாறா எண்டால் அங்கு சத்தமே இருக்காது. இப்படியாக இருந்ததால் என்னையும் அடக்க அங்கு யாரும் இருக்கவில்லை.

ஆசுப்பத்திரிக்கும் பள்ளிக்கூடத்திற்கும் இடையாக செட்டி குளம் பிரதான வீதி போகுது. அப்பாச்சீர குவாட்டஸ் வேலியால பூந்து வந்தா ரோட். அடுத்த வேலி பள்ளிக்கூடம். பள்ளிக்கூட வேலிக்குள்ளால பூந்து உள்ளே சென்று எத்தனை தடவை அக்காக்களுக்கு அவமானம் தேடிக் குடுத்திருக்கிறன். பின் ஒரு காலத்தில் 91, 92களில்பொம்பரால குண்டு போடேக்க எங்கட மாஸ்ரர்மாரும், ரீச்சர் மாரும் இந்த வேலீக்கிளாலதான் தூக்கி விட்டவை எங்கள வீட்ட போறத்துக்கு.

ஆனா இப்ப இந்தப் பள்ளிக்கூடம் முருகன் கோயிலுக்கு முன்னால நகர்ந்து போயிற்று. பழைய பள்ளிக்கூடம் பத்தையும் செடியுமா கிடக்குது. நான் முதன்முதலா நிண்டு பேசின மேடையில் கூட பல மரங்கள் முளைச்சிருக்குது. இன்னும் முக்கியமா நானும் சதானந்தியும் கிளித்தட்டு மறிச்சு சண்டை போட்டு நட்பான பாலமரத்தடித் திடலும் பத்தையாக் கிடக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப அந்த இடத்தைத்தான் நான் தாண்டிப் போய் கொண்டு இருக்கிறன். காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கு. கிளித்தட்டில அளப்பல் விளையாட்டு. நானும் மஞ்சுவும் சிலரும் இந்தப் பக்கம். அவளும் கோணேஸ்வரியும் இன்னும் கொஞ்சப் பேரும் அந்தப் பக்கம். அளாப்பி பொய்யா அடிச்சது கோணேஸ்வரி. இதால சண்டை. கல்லால தூக்கி எறிஞ்சது சதானந்தி. எனக்கு பயங்கர மான கோபம். நானும் பதிலுக்கு அடிச்சிருப்பன். சரியா நினை வில்லை.

"வாடி வாடி எங்கட வீட்டத் தாண்டித் தானே போவாய்? அம்மாட்ட சொல்லுறன்?"

"உங்கட அம்மாக்கு கொம்போ இருக்கு" "ஓமடி கொம்பு தான் இருக்கு. கோபிய அவுட்டு விடுவன். அப்ப என்ன செய்வாய்?"

கோபி எண்டதும் எல்லாரும் பயந்திற்றினம். அண்டு பின்னேரமே சிலபேர் அவையளோட அம்மாவோடயும் அக்காவோட யும் வந்து வீட்டில பேச்சுவார்த்தை. கோபிய கட்டி வைக்கச் சொல்லி.

## கோபி...

கோபி உங்களுக்கு புதுசு. எங்கட வீட்டில எல்லாருக்கும் உயிர். பூவரசங்குளம், மணியர்குளம், பாவக்குளம், குருக்களூர் பொன்னி கிராமம் எண்டு பெரும்பாலும் எல்லாருக்கும் தெரியும். அவ்வளவு பேமஸ். வலியப் போகமாட்டான். தன்னைச் சீண்டினாலே, இல்ல எங்களோட ஆராவது சுறண்டினாலே விடமாட்டான். குதறி எடுத்துப் போடுவான். மம்மி வீடு மட்டும் விதிவிலக்கு. அவ வந்தா ரண்டு "ஊவ்... ஊவ்... வும் வாலாட்டலுமே. காரணம் அவேயுடைய வீட்டு ஜிம்மிர குட்டிதான் எங்கட கோபி. செல்ல நாய்.

இப்படி இரண்டு பகுதிக்கும் பலத்த சண்டை நடந்தது. வகுப்பறையுள்ளும், கோயிலுக்குப் போகும் போதும் என கொஞ்ச நாள் கதைக்காமல் இருந்தம். வகுப்பில் ஆரும் கதைக்காம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கக்கூடாது எண்டு எங்கட தலையாட்டி விஞ்ஞானவாத்தியார் சமாதானப்படுத்தி விட்டார். அதுக்கு பிறகு நான் ஏதாவது சண்டை போட்டால் கூட அவள் என்னோட கதைக்காம இருந்ததில்லை. அவ்வளவு அன்பு. என்னில் மட்டுமல்ல என் குடும்பத்தின்மீதும். இன்னும் தங்கை மீது இன்றுவரையும். ஒரு நாள் என்னிடம் மன்னிப்பு கேட்டாள் அன்று நடந்த சண்டைக்கும் தான் தப்பாகப் பேசியதற்காகவும். இரண்டு வருடங்களின் பின் இறம்பைக்குளம் மகளிர் தேசிய கல்லூரிக்கு நானும் தங்கையும் மாற்றப்பட்டதால் ஊரை விட்டு பெயர்ந்து நகரத்தில் குடியேறினோம். பிரிந்து போனாலும் எங்களுக்கிடையிலான அன்பு இன்னும் அதிகரித்தது. பள்ளிக்கூட விடுமுறை காலங்களில் ஒரு இரண்டு மூன்று நாளைக்கு அவளும் அவள் தங்கையும் "தொதல்" செய்து எடுத்துக் கொண்டு என்னைப் பார்க்க வருவாள். அத்தோடு பனங்காய் பலகாரம், அவள் வீட்டுப் பலாப்பழம், கறுத்தக் கொழும்பான் மாம்பழம், இப்பிலிப்பி, நெல்லிக்காய், சீத்தாப்பழம், மரக்கறி என...

*"வேல்வேல் முருகா*
*சித்திரவேல் முருகா"*

சித்திரவேல் வீடு தாண்டி எங்கட வீடு. கல்லில ஏறி நிக்கிறம். எங்கட வீட்டுக்கு முன்னால இடப்பக்கமா ஒரு பெரிய கல் இருக்கு. அந்தக் கல் எங்களுக்கெல்லாம் முதுசம். உடுப்பு போடாத வயசில இருந்து இதில ஏறி நிண்டு துள்ளுறது என்னோட வழக்கம்.

இண்டைக்கும் புதுசா இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னுக்கு மல்லிகைப் பந்தல் வாசத்தோட என்னால உணர முடிஞ்சது. காரணம் என்ர மூத்த அக்காக்கள் ரெண்டு பேரும் என்னோட கூட வந்து துள்ளினதுதான்.

நானும் அக்காக்களும், எங்கள் வீட்டின் செல்வ மகளும் கூட அதில் ஏறி நிற்கிறம். யது எங்களை கல்லோடு வைத்து பல கோணங்களில் கிளிக்... கிளிக்... நிறைய போட்டோ. இப்ப கூட நான் பாடினன். "வேல் வேல் முருகா, சித்திர வேல் முருகா..." ஆனா பக்கத்து வீட்டு சித்திர வேலும் அவரோட ரக்டர் பெட்டியும் வரவே யில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் எப்படி இருப்பாரோ நல்லா வயசு போயிருக்கும். இருப்பாரே இல்லையோ எண்டு கூடத் தெரியாது. எங்கட வீட்டின் இடப்பக்கமாக இருந்தாவே. இமல்ட்டா இவரோட மனிசி. சுமதி எண்டு இவைக்கு ஒரு பெட்டை இருந்தவள். அவள் என்னோட படிச்சவள். வகுப்பில முன் மேசையில இருக்கிறது அவள்தான். எப்பிடிப் பாத்தாலும் கடைசி மேசைதான் எனக்கு. உயரம் பாத்து விடுறதால நானும் சூட்டியும் கடைசில தான். ஆனா கொஞ்சம் படிப்பன் எண்டதால மஞ்சு ரீச்சர் என்ன ரண்டாவது வரிசையில ஓரப்பக்கமா கூப்பிட்டு விடுவா. சுமதி இன்னும் கூட நாலரை அடி உயரம்தான் இருப்பாள் எண்டு நினைக்கிறன். ரம்பைக்குளம் கொன்வென்ரில நான் A/L இரண்டாம் வருடம் படிக்கேக்க அவள் முதலாவது வருடத்தில் படிச்சுக் கொண்டிருந்தவள். O/Lல் கணிதம் பெயில் எண்டதால ரிப்பீற் எடுத்தவள். அப்ப பாத்த சுமதி நாலரையடிதான் இருப்பாள்.

நான்காம் ஐந்தாம் வகுப்பு படிக்கேக்க என்ன எடுப்பு அவளுக்கு? இப்ப எல்லாம் அடங்கிப் போயிருந்தாள். ஆனா என்னோட கதைக்கேல்ல. முந்தி வீட்டுக்குத் தெரியாமல் பள்ளிக் கூடத்தில, றோட்டில வரேக்க கதைப்பாள். ஆனா அவோட வீட்டுக்குத் தெரிய என்னோட கதைக்க மாட்டாள். காரணம் அவோட வீட்டுக்கும் எங்கட வீட்டுக்கும் சண்டை.

**கா**ணிச்சண்டை.

என்னெண்டால் எங்கட அஞ்சரை ஏக்கர் காணி இருக்கும் எண்டு நினைக்கிறன். அகலம் ஒரு ஏக்கர் அளவுக்கு இருக்கும். பின்னுக்கும் அப்பிடியே நீண்டு கொண்டு போகுது. ரண்டு ஏக்கர் தாண்டினப்பிறகு எங்கட காணிப் பக்கமாக உள்ளால தள்ளித்தள்ளி வேலியப் போட்டு காணியப் பிடிச்சிட்டுதுகள். பின்னால இருக்கிற மூண்டு ஏக்கரில அகலத்தால எங்களுக்கு குறைஞ்சு ரண்டு ஏக்கர் தான் இருக்கும். என்ன சனங்களே தெரியாது அதுகள். இதால ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை ரண்டு வீட்டுக்கும். அதுமட்டுமா? எங்கட கிணத்தடிக்கு நேரதான் அவேர வீடு இருக்கு. கிணத்தோட பிலா தோடை எல்லாம் நிண்டது, கொஞ்சம் தள்ளி வேலியோட பனமரம் ஒண்டு 6 அடி உயரத்தில வளந்து நிண்டது. அதுகள் அதுக்கு அசிற் ஊத்தி எரிச்சுப் போட்டுதுகள். எங்கட காணி எல்லைக்கு ஆதாரம் இருக்கக்கூடாது எண்டு. இப்ப பனைமரமும் தமிழ் மக்களும் தமிழின் அடையாளமாக அழிக்கப்படுவது போல இருபத்தாறு வருசத்துக்கு முதலே சித்திர வேல் குடும்பம் எங்கட பனமரத்த எரிச்சு அந்த நிலத்த கொஞ்சம் கொஞ்சமா பிடிச்சது நாலஞ்சு வயசில இருந்த எனக்கு தெரிலேல்ல. ஆனா பட்டுப்போய் நிண்ட பனமரம் மட்டும் நல்லா நினைவிருக்கு.

"அட இஞ்ச பாரடா டெசி. ஐயோ எவ்வளே நாளாச்சு..."

"எப்ப வந்தது, சுகமா இருக்கிறிங்களா?"

தங்காக்கா, இவ எங்கட முன்வீடு. பீசி குடும்ப மெம்பர். ஊரிலேயே சரியான கட்டை. மூண்டு அடி இருப்பா. நாங்க கல்லில ஏறி நிக்க பேசிப்பேசியே அவவும் தொங்கித் தொங்கி ஏற தெண்டிச்சுக் கொண்டிருந்தா.

முன்னுக்கு ராணியம்மா வீடு. இப்ப அவவுட மகள் ராணி அக்கா தான் இருக்கிறா. முந்தின ஓல வீடில்ல, சின்னதா ஒரு ஓட்டு வீடு கட்டியிருந்தா. நிலத்துக்கு காப்பற் எல்லாம் போட்டு வடிவா வச்சிருக்கிறா. எங்களக் கண்டோண்ண ஒரே புழுகம். துள்ளித் துள்ளி குசினிக்கும் விறாந்தைக்குமா திரிஞ்சா.

நாங்க அவசரமா வெளிக்கிட, "நிண்டு சாப்பிட்டுத்தான் போகோணும், எண்டு பிறிஜ்ச திறத்து மீன் இருக்கு இறைச்சி இருக்கு டப்பெண்டு சமைக்கிறன் இருங்கடியப்பா" என்டா. உண்மையச் சொன்ன எனக்கும் சந்தோசமாத்தான் இருந்தது. அதே பழைய உணர்வு.

என்னட்ட கதைச்சுக் கொண்டிருக்கேக்க இடையில சொன்னா, "அடியேய் இதெல்லாம் கதையா எழுதி என்ன அவமானப்படுத்திப் போடாத" எண்டு. நானும் சிரிச்சுப் போட்டு வந்திற்றன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு.**

எனக்கு அழுகையே வந்தியிட்டுது. வீட்டுக்கு முன்னுக்கு நிண்ட வேப்பமரம் பட்டுப்போய் நிக்குது. இந்த வேப்ப மரத்தோட எத்தனை உறவுகள், எத்தனை நினைவுகள், எத்தனை ரகஸ்யங்கள். முதல் முதல் மரமேறிப்பழகியது, ஊஞ்சல்கட்டி ஆடினது எல்லாமே இந்த மரத்திலதான்.

போன தடவை வந்தபோது கூட எவ்வளவோ வேப்பம் பூ ஆஞ்சம், வடகம் சுடோணும் எண்டு. ஒரு பெரிய வாளி நிறைய போட்டு எடுத்துக் கொண்டு போய் வேப்பங்குள வீட்டில கார் கறாச் சுக்க காய வைக்க, அதுக்க பூனை ஏறி குட்டி போட்டிட்டுது. அந்த குட்டியளப் பாத்தோடண வடகம் இல்லை யெண்ட கோபமே பறந்து போயிற்று. ஆறு வருசம் கழிச்சு வாறன். ஒரு வடகம் கூடத் தராம செத்துப் போச்சே! உண்மையாவே அதப்பாத்தோடண நெங்சுக்க ஏதோ மாதிரி இருந்தது.

வீடு அப்பிடியே இருந்தது. இன்னும் அது கம்பீரமாக உயர்ந்து தான் நிண்டது. வீட்டைச் சுத்தி தோடைமரம், கொய்யா மரம் எண்டு குளிர்மையா இருந்தது.

கிணத்தடியில கூட வாழை, கமுகு எண்டு செழிப்பாத்தான் இருக்கு. இப்ப வீட்டில இருக்கிறவைக்கு எங்கள ஆர் எண்டே தெரி யேல்ல. இது எங்கட வீடு. நாங்கதான் இந்த வீட்டின்ர சொந்தக்காரர் எண்டு சொன்னம். அதுக்குப் பிறகு அங்க நிண்ட பிள்ள தோடங்காய் பிடுங்கிக் கொண்டுபோய் கரைச்சுத் தந்தாள். நல்லாத்தான் இருந்தது. பிறகு வாட்டர்பம்பை ஸ்ராட் பண்ணி தண்ணி இறைச்சு தந்தாள். குடிச்சு, அங்க நிண்டு நனைஞ்சு, வராத சிறுநீர் கழிக்க பழைய ஜெனாட "லெப் றைட்" டய்லறக்குள்ள போய்....

நீண்ட நாள் தாகம் தீர்த்ததைப்போல இருந்தது.

மம்மி வீட்டத் தாண்டிப் போய்க்கொண்டு இருக்கிறம். அந்த வீடு இடிஞ்சுபோய் அழுது கொண்டு நிண்டதப் போல இருந்தது எனக்கு. காலம பூவசரங்குளம் வந்தோடண முதல் முதல் மாமா வீட்டதான் போனம். அம்மாட அண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேத்தண்ணி எல்லாம் தந்து போட்டு அத்தை நைசா, "அப்பிடியே வீட்ட போய் எட்டிப் பாத்திட்டு நேர வந்திடோணும் சரியோ?" எண்டு சொன்னா.

"அங்கால ஜோசப் வீட்டுப் பக்கங்களுக்கு போறேல்ல. இப்ப அங்கால எல்லாம் சரியில்ல.... பயம் பிறகு பாக்கலாம் என்ன."

"ஓம் அத்த."

வாகனத்துக்கயே வைச்சு செல்லியாச்சு திரும்ப போகேக்க சதானந்தி வீட்ட போனத சொல்லக்கூடாது எண்டு. அக்காக்களுக்கு கூட அவளில நல்ல விருப்பம். அவவும் விருப்பப்பட்டுத்தான் வந்தவ. யது சொல்லாத எண்டா சொல்ல மாட்டான். ஆனா ஜெறோனி தான் ஓட்டவாய். எல்லாக் கதயயும் அப்பிடியே ஒப்புவிப்பாள். அதால ஆற்றவீட்டுக்குப் போறம் எண்டு சொல்லாமத்தான் கூட்டிக்கொண்டு போனனாங்க.

முதலாங்கட்டை சந்தி.

ஒழுங்கைக்குள்ள திரும்பியாச்சு. எனக்கு நெஞ்செல்லாம் ஒரே படபடப்பா இருந்தது. நான் போய் நிண்டா என்னப் பாத்து எவ்வளவு சந்தோஷப்படுவாள். என்ன றியாக் பண்ணுவாள்? வீட்டையே ரண்டுபடுத்துவாளே...

"ஏனடி நீ இவ்வளவு நாளும் கதைக்கேல்ல."

இதக்கட்டாயம் கேப்பாள். தன்ர களியாணக் கதையக் கூட கிடைக்கிற காப்ல செல்லுவாள்.

இதேதான். இந்த வீடுதான். அதே பழைய கேற். யது இறங்கித் திறக்க எல்லாரும் உள்ள போறம். சதானந்தீன்ர அப்பா, ஆரெண்டு உத்துப் பாக்கிறார். பின்னாலேயே அம்மா. ஒருக்கா நிண்டு பாத்தா.

"அடியே... எப்பிடி இருக்கிறா" வேகமாக வந்து கட்டியணைத்தார் பின்னாலேயே செல்வி, ஓடிவந்து அணைத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தை சாப்பாடு குழைச்சு தந்து கொண்டிருந்தா. முருங்கக் கீர நிறையச் சுண்டி வைச்சிருந்தா. போகேக்க கேட்டவ மீன் இருக்கு சமைக்கிறன் எண்டு. நான்தான் வேணாம் எண்டிட்டு போனனான். முருங்கக் கீர மட்டும் சுண்டி வையுங்கோ, வீட்ட போகேக்க எடுத்துக் கொண்டு போறம் எண்டு. எனக்குச் சதானந்தியிட்ட சாப்பிடோணும். அதுதான். சிகப்புப் பச்சயரிசிச் சோறும் முருங்கக்கீரயும் பச்சமிளகாய் பொரியலும் சுடச்சுட. அத குழையலாக் குழைச்சுக் கையில தந்தா. வேற கறியும் வச்சிருந்தா. ஆனா எனக்கு இதுதான் நல்ல ருசியா இருந்தது.

எட்டாங்கட்டை, குமார் அண்ண கடையத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தம். சாளம்பைக்குளம், மனசு வாகனத்தில இருந்து குதிச்சு பத்து வருசத்துக்கு முந்தின நினைவுகளோட அதில குந்தியிருக்க ஆசைப்பட்டுது.

ஆனா பத்துவருசத்தில எவ்வளவோ மாற்றம். நதிப்பாதையில் மறைந்துபோகும் மேடுபள்ளங்களப்போல வாழ்க்கையின் சோகங்கள் துன்பங்களை எதிர்கொள்ளப் பழகிக் கொண்டிருக்கிறன். இன்னும் சந்தோசங்களை, உயிரக் காவிக் கொண்டு திரியும் உடம்புக்கான வலிகளை ரசிக்கவும் பழகியிருக்கிறன்.

எனக்கு நிறைய ஏமாற்றமா இருந்தது, சதானந்தி வீட்டில இல்லாதது. எவ்வளவு ஆசையாய் போனன். எல்லாம் காத்துப்போன பலூனாய் போச்சு.

எல்லாரும் ஏதோ சிந்தனையில இருக்கினம். ஆரும் கதைச்சுக் கொள்ளவில்லை. யது மட்டும் இடையிடையே ஏதேதோ சொன்னான். சாய்ஞ்சபடி நித்திரை ஜெறோனி. ரண்டாவது அக்காக்கு அடிக்கடி கோல் வந்து கொண்டிருந்ததால் கொஞ்சம் ரென்சன். வீதி முழுக்க சதானந்தி வீட்டு ஞாபகம் எனக்கு.

நாங்க போகேக்க அவள் அங்க இல்லை. புருசனோட கண்டிறோட்டில அவேட அக்கா வீட்டில இருக்கிறாளாம். அவளின்ர அம்மா கோல் பண்ணித் தந்தவா. நான் கதைச்சனான். என்ன அங்கயே நில்லு ஒரு மணித்தியாளத்தில வாறன் எண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகள மளமளவெண்டு கேட்டாள். நான் உடனே போகப் போறன் எண்டு சொன்னதும் பின்னேரம் வேப்பங்குளம் வீட்ட வாறன் எண்டிருந்தாள்.

கட்டியணைத்த செல்வியின் நடுக்கம் என் உடம்பின் ஓரங் களில் தட்டிய விதம் இன்னும் ஒரு வித உணர்வாய் இருந்தது.

செல்வி, சதானந்தியின் தங்கை. அவளுக்கு இருபத்தெட்டு வயசு. எனக்குப் பக்கத்திலேயே கையைப் பிடிச்சுக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் நடுக்கத்தின் எதிரொலியாய் என் கையில் கூட ஆட்டம் இருந்தது.

"ஏன் நீங்க வரேல்ல இவ்வளவு நாளும்?"

"எனக்கின்னும் சரியாகேல்ல தெரியமா?" என்றாள். அந்த மங்கிய கண்ணில்கூட ஏக்கத்தைக் காண முடிந்தது என்னால்.

முந்தியெல்லாம் வீட்டபோனா ஒரே துள்ளிக் கொண்டு திரிவாள். இப்ப நடையே தள்ளாடிக்கொண்டுதான் இருந்தது. புடலங்காய் சைசுக்கு இரட்டைப் பின்னல் முன்னும் பின்னுமாய் தவண்டு கொண்டிருந்த தலைமுடி, காஞ்ச பயித்தங்காயாய் ஒற்றையாய்த் தொங்கிக்கிடந்தது. அவள் உருக்குலைஞ்சு போயிருந் தாள். நாப்பத்தைந்து வயது தோற்றத்தைக் கூட தாண்டியிருந்தாள்.

முந்தி செல்விகூட அழகியாத்தான் இருந்தாள். சதானந்தி கறுப்பி. ஆனா இவள் கொஞ்சம் அவளவிட நிறம். அலையலையாய் அடர்த்தியான முடி. உயரமும், அளவான உடம்பும். அப்பயே கொஞ்சம் வருத்தம் இருந்தது. ஆனாலும் குளுசைகளப் போட்டா கொஞ்ச நாளைக்கு நல்லா இருப்பாள்.

இந்த ஆமிறக், பெரிய வாகனங்கள், செயின்புளக், கூட்டமா படைகள் என்று பாத்தா அவளுக்கு ஒரு மாதிரி வந்திடும். உடம் பெல்லாம் நடுங்கி, பிறகு கத்தத் தொடங்குவாள். தொடந்து வலிப்பு மாதிரி வர மயங்கி விழுந்திடுவாள். கத்துறதெண்டா சும்மா இல்ல பயங்கரமான சத்தங்கள போட்டு ஆவேசமா கத்துவாள். தொடந்து வாற வலிப்பு கட்டுப்படுத்தவே முடியிறதில்லை. ஆரம்பத்தில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் கொஞ்சமா இருந்தது நாள் போகப்போக தொடர்ச்சிய இப்பிடி நடக்கத் துவங்கிற்று.

ஒருநாள் சதானந்தி சொல்லிக் கவலப்பட்டாள்.

"கொழும்பு கண்டி என்று பாக்காத வைத்தியம் இல்ல. அவளுக்கு ஒண்டும் சரியாகேல்ல. குளுசை மட்டும் ஒரு நாளைக்கு 100 கிராம் வரை குடிக்கிறாள். என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. அவளால தனிய வெளிய எங்கயும் போக ஏலாது. குமர்ப்பிள்ளையாயிட்டாள், பயமா இருக்கடி."

"இப்பிடி பிரச்சனை எப்ப இருந்து அவளுக்கு இருக்கு?"

"மடுவுக்கு போய்வந்த பிறகுதானடி."

**ம**டு.

இது மன்னார் மாவட்டத்தில் இருக்கிற பிரசித்தி பெற்ற இடம். வவுனியாப்பக்கம் இருந்து போனா பம்பைமடு, பண்டி விரிச்சான் தாண்டி இருக்கு. "மடுமாதா" எந்றால் இலங்கையில தமிழ் சிங்களம் எல்லாருமே கும்பிடுவார்கள். ஆவணியில் திருவிழா நடக்கும். அந்த நேரத்தில் தென்பகுதில் இருக்கக்கூடிய சிங்களச் சனம் எல்லாத்தையும் அங்கு காணலாம்.

இனப்பிரச்சனையில் சரித்திர முக்கியத்துவம் பெற்றது இந்த மடு. தொண்ணூறுகளில் பெரிய அகதிமுகாம் இருந்தது. எல்லாத் தமிழ்ப் பகுதிகளிலிருந்தும் போரால பாதிக்கப்பட்ட சனம் இடம்பெயர்ந்து மடுவிலதான் அகதியாக இருந்தவர்கள். லச்சக்கணக்கில் சனம் இருந்தது, அது பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

தொண்ணூறுகளின் கடைசிகளில பூவரசங்குளம், வாரிக் குட்டியூர், குருக்களூர் போன்ற பகுதிகளில் செல் அடிபாடு, பொம்பர் அடி நடந்ததால அந்த ஊர்ச் சனம் இடம்பெயர்ந்து மடுவுக்கு போனவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதானந்தி குடும்பமும் அந்தக்காலக்கட்டத்தில மடுவுக்குப் போனவை. ஒருதடவ கதைக்கேக்க அவள் "சாத்திரம் பாத்ததில ஆரோ 'செய்வினை' செய்திருக்கினமாம், அதுதான் செல்விக்கு இப்பிடி இருக்காம்" எண்டாள்.

ஆனா எனக்கு அதில பெரிசா நம்பிக்கை இருக்கேல்ல. வேற ஏதாவது பாதிப்பு இருக்கும் எண்டு நினைச்சன். அவளிட்ட செல்விய மனநலம் சார்ந்த கவுன்சிலிங் கூட்டிக் கொண்டு போவம் எண்டு கேட்டன். அவளும் அதுக்கு ஒகே சொல்ல, 2000 ஆண்டில MSF நிறுவனம் நடத்தின "கிறீன் கவுஸ் கவுன்சிலிங்" கூட்டிக்கொண்டு போனன்.

இது நடந்து மூன்று நாள் கழிச்சு MSF நிறுவன வவுனியா இயக்குனரான முனாப் என்னக் கூப்பிட்டு பேசினார்.

முதலாம் கட்டை

அந்தப்பகுதி பூவரசங்குளம் எல்லைக்குள் இருந்தாலும் முதலாம் கட்டை என்பார்கள். அங்க வீடுகள் எல்லாம் தூரத்தூரத் தான் அமைந்திருக்கும். நிறைய தோட்டம் - புலவுக் காணிகள். சதானந்தி வீட்டில் இருந்து கூப்பிடு தூரத்தில் வீடுகளே இல்லை. சுற்றி முழுவதும் தோட்டங்கள் வீட்டின் அருகில் மா பலா தென்னை கமுகு என சூழ்ந்த சோலை. அதை ஒட்டி தோட்டங்கள். அநேகமான மரங்களை அங்கே காணலாம். நெல்லி, கொய்யா, இப்பிலிப்பிள், அன்னமுன்னா, சீத்தா, ஜம்புமரம், சண்டி, முருங்கை, அம்பிறலங்கா – இப்பிடி நீட்டிக் கொண்டே போகலாம். நெல்லு, கத்திரி, வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களும் செய்வினம். அங்க இருக்கிற கிணத்தடியில இருந்து பாத்தா வீடு தெரியாது. பெரிய சத்தமா கூப்பிட்டாக் கூட கேக்காது.

1992 கடைசியில என்டு நினைக்கிறன். சரியா நினை வில்லை. வவுனியா பம்பை மடுவிற்கும், பிரமணாளங்குளம் - செட்டிக் குளத்திற்கும் இடைப்பட்ட பகுதிகள் ஆமிக் கட்டுப்பாட்டுக்குள்ள வந்தது. ஆமிக்கட்டுப்பாட்டுக்குள் வந்த ஆரம்பத்தில பயங்கர அட்டூழியங்கள். அந்த நாள் நடந்த நிகழ்வுகள் இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கு. எங்கட வீட்டுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில இருந்த குடும்பங்கள், வதி அக்காட தங்கச்சிமார் அஞ்சாறுபேர், இப்பிடி ஒரு இருபத்தைஞ்சு பேருக்கு கிட்ட வீட்ட வந்து தங்கியிருந்தவை. அதவிட என்ன விசேசம் எண்டால், கலைபண்பாட்டுக் குழுவால நடக்கிற ஒரு பெரிய நிகழ்வு, பெயர் நினைவில்லை. அந்த நிகழ்விற்கு எங்கட பள்ளிக்கூடத்தில இருந்து நிறையப் போர் போனவை. அப்பிடிப் போனவேல கால்வாசிப் போர் காலம திரும்பி வந்தவை. வீடுகளுக்குப் போக முடியாம அவையும் கூட இஞ்ச வந்து தங்கீற்றினம். காலம விடியமுதலே வந்தபடியால் ஊருக்குள் ஆமி வந்தது தெரிவில்ல. காக்கயன் குளத்தில இருந்து நேர பள்ளிக் கூடம் வந்து மாட்டீற்றினம். வீட்டில திருவிழாக் கூட்டம் போல சனம். என்னமோ எனக்கும் தங்கைக்கும் கொண்டாட்டமா இருந்தது. பிரச்சனைகள் விளங்கேல்ல. நிறைய போராட்ட கவிதைப் புத்தகங்கள் வைச்சிருந்தனான். அதெல்லாம் எரிபட்டது. அதுவும் ஒண்டாப்போட்டு கொழுத்தினால் பெரிய நெருப்பு புகை வருமெண்டு, ஒற்றை ஒற்றையாய் கிழித்து அடுப்பு எரிக்கிற மாதிரி எரிச்சது. எத்தனை புரட்சிக் கவிதைகள் புகையாய் போனது! அவர்களின் ஓங்கிய குரல்கள் எல்லாம் தீயாய் எரிந்தது. இன்றைய நினைவில் எத்தகைய சொத்துக்களை அழித்திருக்கிறோம் என்று தோன்றுகிறது.

இந்த ஆமி வந்த புதிதில் அடிக்கடி வெடிச்சத்தங்கள் கேக்கும். எங்கள் வீட்டுக்குப் பக்கத்துக் காணிக்குள்ளாலே அடிக்கடி றோந்து போவாங்கள். பக்கத்து காணி வேலியும் குசினியோடு இருக்கும் பின்முற்றமும் அருகருகில். ஒரு தடவை அந்தப் பக்கத்து காணிவேலியருகில் நின்று சூட்டிங் பயிற்சி செய்து கொண்டிருக்கேக்க சத்தம் கேட்டு எங்கட குசினிக்குள்ள இருந்த சித்தப்பா விழுந்து படுத்திட்டார். பிறகு அவங்கள் "கான்ஸ்அப்" எண்டு சொல்ல இவரும் படுத்தபடியே கையைத்தூக்கிக் கொண்டு கன நேரமா இருந்தவர். இப்பிடி சிரிப்புக் கதையள் கூட நிறைய நடந்தது.

முனாப் கூப்பிட்டு இப்பிடித்தான் சொன்னார்:

அவள் "கவுன்ஸ்லிங்"ன் போது கொஞ்சம் பேசியிருந்தாளாம். அரே வீட்டுக்கு முன்னால இருந்த சிங்கள ரீச்சர் வீட்ட பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STF ஆமிக்காம்ப் இருந்தது. அடிக்கடி இவயளின்ர வீட்டுக்கு டோசர், றக்குகளுக்கு தண்ணி நிரப்ப போறவங்கள். அவளின்ர தாய்தகப்பனுக்குச் சிங்களம் தெரியும். அதால கொஞ்சம் சிநேகிதமா பேசிக் கொள்வாங்களாம். இப்பிடி பேசுறதால தங்கள ஒண்டும் செய்ய மாட்டாங்கள், நல்லாத்தானே பழகுறாங்கள் எண்டு சாதாரனமாவே விட்டிட்டார்கள். அவங்களும் சகஜமா வந்து போறது, வீட்டில் வளவில் புளங்குவது, தண்ணி எடுக்க, பழங்கள் ஆய அடிக்கடி வருவது என எப்பவுமே அங்கிருப்பாங்கள்.

ஒரு நாள் எல்லாரும் வெளியே சென்ற வேளை. அன்று சதானந்தி ரியூசன் யோயிருந்தாள். தாயும் தகப்பனும் வவுனியா ரவுணுக்குப் பேயிற்றினம். தம்பியும் இவளும் தான். தம்பியும் கொஞ்சத்தால எதோ விளையாடப் பக்கத்தில போயிற்றான். வழமையா நடக்கிற செயற்பாடுகள் தானே இவை. இவள் குளிச்சுக் கொண்டிருந்திருக்கிறாள். அந்த நேரம் தண்ணி எடுக்க வந்த மூண்டு ஆமிக்காரங்கள் சும்மா பேசிப் பேசி சீண்டிப் பாத்திருக்கிறாங்கள். பாவம் இவள் சின்னப் பிள்ளை. சாமத்தியம் கூட ஆகவில்லை. பத்துவயசுப் பிஞ்சு. இவளும் விளையாட்டாக எடுத்திருக்கிறாள். ஆனால் அந்த மூண்டில ரண்டு பேர் விளையாடி விளையாடி, வாழைத் தோட்டத்திற்குள்ள இழுத்துக் கொண்டு போயிற்றாங் களாம். அங்கிருந்து கத்தினால் அருகில் ஆரும் இருந்தாலே அன்றி நாலு திசையிலும் கேக்காது. இவளுக்கு பயம் வந்து அழத் தொடங்க வாயைப் பொத்திக் கொண்டான்களாம். அந்த மூன்றாமவனும் வந்து சேர்ந்து கொண்டு....

இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் ஒரு மாதிரி விக்கத் தொடங்கி சில நிமிசங்களில் பயங்கரமா கத்தி பின் மயங்கி விழுந்துவிட்டாளாம்.

அந்த மூன்று ஆமிக்காரனுகளால பயங்கரமா அவள் சேதப்படுத்தப் பட்டிருக்கோணும். சின்ன வயதில் பயங்கரமான அந்தச் சம்பவம் நிகழ்ந்ததால, கொஞ்சம் கொஞ்சமா தோன்றும் அந்த நிகழ்வுகள் பயங்கரமான மன அதிர்ச்சிக்கு தள்ளியிருக்குது. ஆமி, றக், இது சம்மந்தமானதைப் பார்த்தோடண அந்த நிகழ்வுகள் அவளுக்கு மீளமீள ஞாபகம் வந்து இப்படி ஆகுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சொன்னார் முனாப்.

இப்ப அவள் இருக்கிற அந்த நிலையப் பார்த்ததும் எனக்கு உடலுக்குள் சுவாலையாய் உணர்வு.

எவ்வளவு உருக்குலைஞ்சு போனாள்.

முனாப் சொன்னதை சதானந்திக்கு செல்லேல்ல. எனோ தெரியேல்ல சொல்லத்தோணேல்ல.

**வ**வுனியா காஞ்சுபோய்க் கிடக்கு. புல்லுகள் கூட வெக்கயில எரிஞ்சுபோயிற்று. இப்பிடி காஞ்சு கிடக்கிற வவுனியாவ இந்த முறை தான் பாக்கிறன்.

மணி நாலரை இருக்கும். மாமா வந்திருந்தார். குளிச்சிற்று போக, ஒரே வெக்கையா இருந்தது. பிறிஜ்சில கிடந்த சட்டித் தயிரை எடுத்து சீனி போட்டு யோகட் மாதிரி செய்து மாமாவும் நானும் சாப்பிட்டிட்டு, கொஞ்சத்த முகத்திலயும் அப்பினன். வழமையான சிரிப்போட 'போகட்டா' எண்டிட்டு அவர் போக சுபாஸா வந்தாள்.

பின்னேரம் முல்லைமணி ஐயாவைச் சந்திப்பதே என்னுடைய வேலைத்திட்டம். நான் வந்திருப்பதை தெரிந்து ஆசையாக வந்திருந்தாள் பார்க்க. இருவருமாகச் சேர்ந்து உக்குளாங்குளத்தில் இருக்கிற "முல்லை மணி ஐயா" வீட்டுக்குப் போனம். அவர் இல்லை, அவரின் மகள் இருந்தார். கடைசி நேரம் ஊரோட இருக்கோணும் எண்டு ஆசைப்பட்டு முள்ளியவளைக்கே சென்றுவிட்டதாக சொன்னார். எனக்கு ஏமாற்றமாய் இருந்தது.

அவருடைய வீட்டில் நிறைய பெசன் புறூட் கொடியாய் படர்ந்திருந்தது. பார்த்ததும் சுபாஸ சக்கரை வியாதிக்கு சுண்டிச் சாப்பிட்டால் நல்லமாம் எண்டு, கொஞ்ச இலை பிடுங்கினாள் கொண்டுபோக,

போன் றிங் பண்ணியது, அது என்னுடைய போன். சதானந்தி கதைச்சாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வீட்ட வந்திருக்கிறனடி... எப்ப வருவாய்?”

என்ன செய்வதெண்டு எனக்குக் தெரியேல்ல. சுபாஸா வீட்ட வரச்சொல்லிக் கேட்டதால ஓம் எண்டிட்டன்.

“நான்வர லேற்றாகும். நாளைக்கு பதினொரு மணிபோல உங்கட வீட்ட வாறன்” எண்டன்.

அடுத்த நாள் பன்னிரண்டு மணியிருக்கும், காட் மாத்துறத் திற்காக பாங்க் போயிருந்தன்.

போன் றிங் பண்ணிச்சு, சதானந்தி.

“என்னடி வாறன் எண்டாய் எங்கடி இருக்கிறாய்? சமச்சிற்றுப் பாத்துக் கொண்டிருக்கிறன் எப்ப வருவாய்”

“கொஞ்சம் வேலையா பாங்க்கு வந்தனான். முடிச்சிற்று கோல் பண்ணட்டாடி?”

“ஓமடி.”

கட் பண்ணிட்டாள்.

நேற்று இரவே சதானந்தி வீட்ட போறதில்லை எண்டு முடிவு செய்திற்றன்.

என்னமோ தெரியேல்ல அவளப் பாக்க நிறைய ஆசையா இருந்தன். கொழும்பில இருந்து வரும்போதே மூன்று வேலை களைத் தான் பிளான் பண்ணியிருந்தன்.

ஒண்டு கான்சர் வருத்தத் கடைசி நேரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற பெரியம்மாவப் போய்ப் பாக்கிறது.

ரண்டு சின்னனில இருந்த வீட்டபோய் அந்த கல்லில ஏறி நிண்டு குதிக்கேணும்; கிணத்து தண்ணிய அள்ளிக் குடிக்கோணும்; அத விதம்விதமா போட்டோ எடுக்கோணும். அதோட சதானந்தி வீட்ட போய் அவளப் பாத்துக் கதையளக்கோணும்.

மூன்டாவது முல்லை மணி ஐயாவை பாத்து பேசிறது.

முல்லை மணி ஐயா 2006க்கு பிறகு நாலைஞ்சு வருசமா கதைக்க ஏலாம படுத்த படுக்கையா இருந்தவர். திறமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதி. வன்னியின் நாட்டார் பாடல்கள், வழக்காறுகள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள், தொகுப்புப்பாடல்கள் என நிறைய சேவைகள் புரிந்திருக்கிறார். ஆரம்ப காலத்திலிருந்து என்னுடைய இலக்கிய வளர்ச்சிக்கு மிகவும் உதவியிருக்கிறார். எப்படியாவது அவரைப் பார்க்க வேணும் என்பதில் தீவிரமாக இருந்தேன்.

ஆனால் சதானந்தி வீட்டில் இல்லாதது ஏமாற்றந்தான்.

அத்தை அங்கு போக வேண்டாம் என்று சொன்னதற்கும் காரணம் இருக்கு.

2006ம் ஆண்டு தான் கடைசியா பார்த்திருந்தன். அதன்பிறகு நிறைய நிகழ்வுகள். அவளுக்குத் திருமணம் கூட ஆகியிருந்தது. போன் நம்பரும் தொலைந்து போயிற்று. பேச்சும் நின்று போயிற்று.

அவளின் புருஷனை ரண்டு வருசத்திற்கு முதல் ஆள் கடத்தல் கேசில புடிச்சு ஜெயில்ல வைச்சிருந்தவங்கள். ஆக்களப் பிடிச்சு அடைச்சு வைச்சு காசு பறிச்சவையாம். காசுக்காரங்களாப் பாத்து பிடிச்சு அடைச்சு வைக்கிறது, அந்த ஆக்களின் சொந்தக் காரரிட்ட போன்பண்ணி மிரட்டி காசு வாங்கிறது.

இது நடந்து ரண்டு வருசத்துக்கு மேல ஆச்சு. இதாலதான் போக வேணாம் எண்டிருப்பா.

இதெல்லாம் எனக்கு முதலே தெரியும், நிறைய யோசிச்சனான். போவமா? விடுவமா? போனா என்னனென்ன பிரச்சனைகள் வரும், போகாட்டி நான் வந்தத கேள்விப்பட்ட அவளின்ர மனசு வருத்தப்படுமே. புத்திக்கும் மனசுக்கும் நடந்த விவாதத்தில மனசு முன்னுக்கு வந்திற்று. போறதா முடிவெடுத்தன்.

கிட்டத்தட்ட 96ம் ஆண்டில இருந்து ஒரே கலக்கமான நிலைதான். வயசுப் பெண்களை வீட்டில் வைச்சிருக்கிறதை விட பெடியள வைச்சிருக்கிறது தான் பெரும் கலக்கமாக இருக்கும்.

நானும் தங்கையும் இருந்ததை விட அண்ணாவை காவிக்கொண்டு திரியிறதே அம்மாக்கு பெரும்பாடாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத தடைச்சட்டத்தின் பேரில் ஏதாவது ஒரு காரணத்தை தேடிப் பிடித்து சிறையில வைச்சிருவாங்கள். இன்னும் பெண்களைக் கூட சிறைக்குள் பிடித்து வைத்து மிகவும் கேவலமான முறையில் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். இதற்கு எங்கள் வீடும் ஒன்றும் விதிவிலக்கில்ல. சில தடவை வீட்டைச் சுற்றி வளைத்திருக்கிறார்கள். ஒரு தடவை புலி என்று பிடித்து உள்ளேயும் வைத்துவிட்டார்கள். அந்த நேரத்தில் மிகவும் கஷ்ரப்பட்டம். களுத்துறை சிங்கள மாக்கப்பட்ட ஊர். அங்கு தமிழர்கள் போவது கடினமாக இருக்கும். நானும் தங்கையும் தனியா இருப்பம். சுத்திவர சொந்தக்காரர் இருந்தவை. இப்ப வக்காலத்து பேசும் இவர்கள் எல்லாம் அப்ப எங்க போனவை? அந்த நேரத்தில பிறத்திச்சனம் செய்ததுகூட இவர்கள் செய்யவில்லை.

எங்களோட பேச, வீட்ட வரப் பயப்பட்டார்கள். தங்களுக்கும் பிரச்சனை வரும் எண்டு கதைக்கிறதுக்கு கூட பயப்பட்டார்கள். களுத்துரைறைக்கு ஒரு நாள் போயிருப்பினமா? எல்லாரும் உத்தியோகம். வாத்திமாரும் ரீச்சர்மாரும். எங்களுக்கு ரண்டு மூண்டு நாள் வைச்சுப் படிப்பிக்கக் கூட மனசில்லை. எத்தனை தடவை நான் படிக்கப் போய் திரும்பி வந்திருப்பன். இதனால் நாங்கள் ஒன்றும் கெட்டுப்போகேல்ல. இந்த வலி மற்றவர்களுக்கு தெரியாது. ஏன்? அண்ணாக்குக் கூட தெரியாது.

ஆனா இப்ப எல்லாரும் தேடிகினம். பழக உறவாட ஆசைப்படுகினம் அவையோட சேராத இவையோட பேசாத எண்டினம்.

இந்த நேரங்களில எல்லாம் சதானந்தி எங்களுக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறாள். அடிக்கடி வீட்டுக்கு வருவாள், தங்கி ஆறதலா இருப்பாள். இப்பிடியாய் இருந்த அவளை யார் என்ன சொன்னாலும் போய் பாக்கிறது என்ட முடிவோடதான் போனனான்.

ஆனா அவள் அங்க இல்ல.

நான் என்ன செய்யிறது? அடுத்த நாள் வாறன் எண்டு சொன்னாலும் போக எனக்கு தோன்றவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்ட மாமி வீட்டுக்கு நான் போவதா? நான் அங்க போறது எனக்கு நல்லா இருக்காது.

கொழும்பில வந்து இந்த குளோரின் தண்ணியில குளிச்சப்பிறகு தான் ஒரு திருப்தி.

அன்ரி இல்ல.

ஏதோ பள்ளிக்கூடத்தில அவவுக்குப் பார்ட்டியாம் அவ சுவிஸ் போறா, இன்னும் நாலு நாள்ள.

சரியான பசி, ஒண்டையும் காணேல்ல, கொண்டு வந்த எள்ளுறுண்டை ஒன்றை சாப்பிட்டபடி சோபாவில் கால் நீட்டி படுத்திருந்தன்.

போன் றிங் பண்ணிச்சு.

பாத்தா சதானந்தி

"எங்கடி இருக்கிறா"

"நான் விடியத்தான் 5 மணி இன்ரசிற்றியில கொழும்புக்கு வந்திற்றன். அவசரமான வேலை ஒண்டடி"

"அடியே ஏனடி போன்னி..., நான் உனக்கு தொதலும் பனங்காப்பணியாரமும் சுட்டுக் கொண்டு வருவம் எண்டு பூவரசங்குளம் வீட்ட வந்தனான். இஞ்சயெண்டாத்தான் என்ர இஸ்ரத்துக்கு எல்லாம் வடிவாச் செய்வனடி. நீ எப்ப வருவாய் திரும்பி"

"அடுத்த கிழமை வருவன்"

"சரியடி வந்திற்று போன் பண்ணு கட்டாயம், நான் வாறன்." அதே அன்புடனும் நட்புடனும் அழைத்தாள்.

என்னை நானே செருப்பால் அடித்துக்கொண்ட உணர்வு எனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டி வீட்ட போறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அக்கா நான் உதில கச்சேரியடிக்கு போயிட்டு வாறன்.” என்றவாறு பாரதி சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டான்.

“பொறடா தம்பி வாறன்” என்றவள் நேரத்தைப் பார்த்தாள் 10.20. கொப்பியினுள் வைத்திருந்த இரு கடிதங்களையும் எடுத்துக் கொண்டு வந்தாள்.

“டேய் பாரதி, பாட்டி போகேக்க மறந்திட்டன்டா. இன்னும் அனுப்பியிருக்க மாட்டாங்கள்; பாட்டியப் பாத்து குடுத்துவிடு பக்கத்தில அருள் மாமாக்கு. இல்லாட்டி வரேக்கே போஸ்ட் பண்ணிவிடு.”

“உனக்கு என்ன மறதியோ தெரியாது ம்...” என வாங்கி மடித்து ஜீன்ஸ் பொக்கற்றில் வைத்துக் கொண்டு, “வாறன் போட்டு” எனக்கூறி சைக்கிளை மறுபடியும் எடுத்துக் கொண்டு திரும்பினான். பக்கத்து சனமெல்லாம் ஆரவாரத்துடன் “இவர் தான் பாரதிதாசன் ஐயா, இவன் அக்காதான் வாசுகி” என கையை பாரதியை நேக்கிச் சுட்டினர்.

இரண்டு போலீஸ் பின்னால், முகாம்சனம் விஷயம் அறியும் ஆர்வத்தில் திரண்டு வந்தது.

பாரதிக்கு நெஞ்சுத் தண்ணியெல்லாம் ஆவியாகியது. பொலீஸ்காரனைப் பார்த்ததும் அவன் கை தன்னிச்சையாக உயர்ந்து பேர்சைத் தட்டிப் பார்த்தது, சின்ன நிம்மதி பாஸ் இருக்குதெண்டு. இருந்தாலும் அவனை மீறி கால்கள் படபடத்தன. சைக்கிளை மெதுவாக ஸ்ராண்டில் விட்டுவிட்டு “பிள்ளையாரப்பா உனக்கு இரண்டு தேங்காயு டைப்பன்” என வேண்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீரே பாரதிதாசன்" என்றான் ஒருவன்.

மெதுவாக மேலும் கீழும் தலையை ஆட்டினான் பாரதி

"நல்லம்பிள்ளை ஆச்சி..."

"அவ எங்களோடதான் இருந்தவா, இண்டைக்குத்தான் அவவின்ர வீட்ட யாழ்ப்பாணத்துக்கு போறா" அவசரமாகச் சொல்லி முடித்தான்.

"அதில்லைத் தம்பி, இங்க அவவுக்கு நெருங்கின உறவுகள் இருக்கிறது."

"அவவுக்கு யாருமில்லை; இடம் பெயர்ந்து வரேக்க எங்களோட வந்ததில இங்கேயே இருந்திட்டா. யாழ்ப்பாணத்தில அவவுக்கு மகன் இருக்கிறார்."

"அவ தம்பி, விழுந்ததில கொஞ்சம் சுகமில்ல; நீர் வந்தீரெண்டா நல்லாயிருக்கும்" என்றான் மற்ற போலீஸ்காரன்.

"என்னடா பாட்டிக்கு என்னடா" வாசுகி ஓடி வந்தாள்.

"என்னடா பாட்டி விழுந்திட்டாவா, என்னடா... சொல்லடா" கைகளைப் பிடித்து இழுத்தாள்.

"பாட்டியைக் கொஞ்சம் வந்து பார்த்தால் நல்லம். கொஞ்சம் வாங்கோ, கச்சேரியில யாழ்ப்பாணம் போற இடத்தில்" பொலீஸ்காரன் போய்விட வாசுகியும் பாரதியும் படபடப்புடன் சைக்கிளில் ஏறி கச்சேரிக்கு புறப்பட்டனர்.

கச்சேரியடி, சனங்களின் குசுகுசுச்சத்தம்.

பாட்டி நிலத்தில விழுந்து கிடக்க, சாமான் எல்லாம் சிதறிக் கிடந்தது. அந்தப் பை மட்டும் இன்னும் கையில் அமிழ்ந்து இறுக்கி, அணைத்தபடி கிடந்தது. இரவு சுட்ட தட்டவடையும் உறைப்பு முறுக்கும் சிதறிக் கிடக்க, காகம் வந்து அதையே சுத்திச் சுத்தி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. சனக் கூட்டம் திரளாக பாட்டியைச் சுற்றி நின்று கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுகிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்படியே நின்றாள்; தொண்டைவரை அழுகை விக்குகிறது. ஆனால் கண்ணீர் வரவில்லை. அவளின் வாய் முணுமுணுத்தது.

"பாட்டி போட்டா, ஓம் பாட்டி எங்கள விட்டிட்டுப் போட்டா. செத்துப் போட்டா" திரும்பிப் பாரதியைப் பார்த்தாள். அவனும் அப்படியே ஆடாமல் அசையாமல் பிரமை பிடித்தவன் போல் நின்றுகொண்டிருந்தான். கண்கள் பாட்டியையே வெறித்துக் கொண்டிருந்தது. வாசுகி ஓடிச்சென்று "பாரதி பாரடா. பாரதி பாட்டி எங்கள விட்டுட்டுப் போட்டாடா" என அழுதாள். ஆனால் பாரதி இன்னும் சிலையாகவே நின்றான். அவள் அவன் கையைப் பிடித்து அழுதபோது கூட அவன் ஒன்றுமே உணராதவனாய் அப்படியே நின்றான்.

அவள் ஓடினாள் பாட்டியின் அருகில். "பாட்டி எங்கள விட்டிட்டுப் போக எப்பிடி உனக்கு மனசு வந்திச்சுப் பாட்டி... பாட்டி" பாட்டியின் காலைப் பித்துக் கத்தினாள்.

இரண்டு பொலீஸ்காரர் "வந்து தொடக்கூடாது தங்கச்சி. இதை பொலீஸ் பாக்க வேணும். இப்பிடித் தொட்டு விழுந்தெல்லாம் இதுல அழக்கூடாது." அவளை எழும்ப வைத்து விலகிப் போகக் கூறினார்.

அழுதபடியே தள்ளிப் போய் பாரதியருகில் நின்றாள். ஆனால் அவளது அழுகை இன்னும் விக்கலாய் வெளிவந்துக் கொண்டேயிருந்தது.

"சே அவனுகள் எல்லாம் மனுசங்களா, மனுச உணர்வே இருக்காதா?"

"ஏனடா நீ கோவப்படுகிறாய், ஏண்டா பாட்டீர பேத்தியப் பாத்திட்டியா மச்சான்?"

"சீ வாய மூடுறா, நீ இப்பத்தான் வந்திருக்கிறாய். உனக்கு ஒண்டும் தெரியாது, இங்க நடந்ததப் பாத்திருந்தா இப்பிடி நீ கதைக்க மாட்டாய்."

"என்ன ரவி நடந்தது? சொறீடா ரவி என்ன நடந்தது? என மற்றவன் கெஞ்சினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவங்களெல்லாம் இப்படியே காட்டில் இருந்து உற்பத்தியாகி வந்திருக்காங்களா? இவங்களுக்கு மனுசரோட பழகிற மனிதாபிமான உணர்வு இருக்காதா? ஒரு அம்மாட வயித்தில பிறந்திருக்க மாட்டானுகளடா? பாவியள் எங்க கொட்டப் போறாங்களோ தெரியாது." கூறியவன் கண்களில் இருந்து வடிந்த கண்ணீரைத் தட்டிவிட்டு ஜீன்சில் துடைத்துக் கொண்டான்.

மற்றவன் பொறுமை இழந்து "ரவி நான் என்ன நடந்ததெண்டு கேட்டன். நீ ஏதோ உளறுறாய். நடந்தத சொல்லு"

"சுரேன் நானும் யாழ்ப்பாணம் போகவெண்டு விடிய ஆறு மணிக்கெல்லாம் வந்து இஞ்ச லைன்ல நிக்கிறன். ஆனா இந்தப் பாட்டி எனக்கு முதலே இஞ்ச வந்து நிண்டவ."

"எனக்கு முன்லைன்ல தான் நிண்டா. கன நேரமா நிண்டதிவ, என்னோட சும்மா கதைச்சவ. தனக்கு ஒரு மகன் தானாம். அவர் யாழ்ப்பாணத்திலயாம். ரண்டு பேத்தியும் இருக்கினமாம். பிறந்ததில இருந்து பேத்திமார இன்னுமே பார்க்கேல்லையாம்.

"தன்ர பேத்திமார பாக்கப் போறன். என்ர சொந்த மண்ணப் பார்க்கப் போறன். என்ர ஊர, ஊரில சனத்த, உறவுகளப் பார்க்க போறன், போய் அந்த நல்லூர் முருகன் சன்னிதியில கும்பிட்டு இருந்து ஆற வேணும் எண்டு சொன்னவ. நான் போய் என்ர புள்ள குட்டியளப் பாத்து, நான் பிறந்த மண்ணிலதான் கண்மூட வேணும் எண்டு சொன்னவ.

"நேரம் செல்லச் செல்ல சனம் கூடத் தொடங்கி, நெருக்குப் பட்டுக் கொண்டு நிண்டதுகள். வரிசை குழம்பி சனமெல்லாம் நெருக்குப்பட பாவம் பாட்டி நேரத்தோடயே வந்ததில 'கால் நோவுதடா தம்பி, நான் இப்பிடி ஓரமா நிக்கிறன்' எண்டு சொல்லி அங்கால போகத் திரும்பி நடந்தவ. சனம் வரிசை காணாம குழம்பி நிக்க உதில நிக்கிற பொலீஸ்காரங்கள் பெரிய தடியளக் கொண்டு வந்து அதால தள்ளியும் அடிச்சும் லைனுக்குள் கட்டும் படுத்தினாங்கள்.

"ஆனால் முடியேல்ல அவங்களால். அதால கம்பால கண்டபடி சனத்துக்கு அடிக்கத் தொடங்கிட்டாங்கள். பாவம் பாட்டி ஓரமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கப் போனவ, இவங்கள் எல்லாம் கண்டபடி கம்ப ஓங்கினதால அடிப்பட்டுச் சரியப்போக மற்றவங்கள் வந்த வரத்தில தள்ளி விட அப்படியே விழுந்தவ பேச்சு, மூச்சு இல்லாமக் கிடக்கிறாடா..."

"பாட்டி உடனேயே செத்துப் போட்டா. பாட்டியத் தள்ளி விழுத்தி இவங்கள் தானடா சாகடிச்சவங்கள்."

வாசுகி தலையை திருப்பி அந்த இரண்டு பேரையும் பார்த்தாள். எழுந்து சென்று இருவரிடமும் (ரவி, சுரேன்) "பாட்டியைச் சாக்காட்டிற்றங்களா? இவங்களா...? கொண்டு போட்டாங்ளா...?" என ஆவேசாய் கேட்டாள்.

பின் பாரதிதாசன் நிண்ட இடத்திற்கு ஓடி வந்தாள்.

பாரதி "டேய் இவங்கள்... இவங்கள்தான் எங்கட பாட்டியக் கொண்டுட்டாங்களாம்" எனக் கத்தியபடி பொலீஸைக் காட்டினாள். பாரதி திகைத்து போய் சுய நினைவுக்கு வந்தான். "பாரதி எங்கட பாட்டியைக் கொண்டு போட்டு நிக்கிறாங்கடா" என்றவள், அங்கு திரளாக கூடி நின்ற சனத்திடம்,

"நீங்க சொல்லுங்க, நீங்க செல்லுங்க! என்ர பாட்டியைக் கொண்டது இவங்கதானே இவங்கதானே!" என்று கத்தினாள்.

குழுமி நின்றவர்கள் அவளைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

ஒரு முதியவர் விரைந்து போய்ப் பாரதியின் காதில ஏதோ கூறினார்.

பாரதி வாசுகியைப் பிடித்து, "ஏய் வாசு சும்மா கத்தாத உனக்குப் பைத்தியமா? பாட்டி விழுந்ததில செத்துப் போட்டா சும்மா கத்தாத" என அவளை கையைப் பிடித்து இழுத்து யாருக்கும் தெரியாமல் அதட்டினான்.

ஆனால் வாசுகி பேச்சை நிறுத்தின பாடில்லை.

பாரதி வாசுகியை தரதரவென இழுத்துக் கொண்டு போய் சைக்கிள் பார்க்கில் இருந்த ஒரு வாங்கில அமர்த்தி தானும் அமர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏண்டா-ஏண்டா பாரதி என்ன இழுத்துக் கொண்டு வந்திட்டா.. நம்மட பாட்டிடா, அவ எங்கட பாட்டிடா. கொண்டிட்டாங்கடா... என அழுதாள்.

"தெரியும் வாசு. ஆனா இப்பிடிக் கத்தாத வாசு. அவங்கள் எதையும் செய்வாங்கள். பாட்டியில எனக்கு மட்டும் கவல இல்லையா? நீ எனக்கு வேணுமடி; நீ இப்படிக் கத்திக் கொண்டு இருந்தா இந்தக் காட்டு மிராண்டியள் உன்ன ஏதாவது செய்திடுவானுகள்."

"இங்க பார். அழாதம்மா, நாங்க வீட்டுக்குப் போய் அழுவம், அழாதம்மா," என வாசுகியைப் பாரதி தேற்றினாலும் அவன் கண்களிலும் நீர் வடிந்தது.

திரும்பி பாட்டி கிடந்த இடத்தைப் பார்த்தான்.

புதிதாக பொலீஸ் வந்து பார்த்தார்கள். பாட்டி கிடந்த இடத்தை அளவெடுக்க சனங்கள் இன்னும் அப்படியே இருந்தனர். அவர்கள் பேயறைந்த முகங்களாய்க் காட்சி தந்தனர்.

பாரதிக்கும் பாட்டியின் இறப்பு நெஞ்சில் கனத்த ஆவேசத்தைத் தந்தாலும், அடக்கிக் கொண்டான். உண்மை என்று யாரும் கூறவந்தால் 'நாளை புலி' என்ற பெயருடன் வெலிக்கடையிலோ, களுத்துறையிலோ தான் இருக்க வேண்டும்.

பாட்டியின் அருகில் சிதறிக்கிடந்த பலகாரங்களைப் பார்த்த போது அவனுள் வெப்பியாரத்தை அடக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து வரேக்க குண்டு விழுந்து அம்மாவும் அப்பாவும் செத்துப் போட்டினம். அனாதையா ஆருமில்லாம அழுது கொண்டு நிண்ட எங்கள பாட்டிதான் அணைச்சு கூட்டிக் கொண்டு வந்தவ. அகதி முகாமில எங்களோடயே ஒருடமும் போகாம காவலா இருந்தவ. சின்னப் பிள்ளையளா இருந்த எங்களுக்கு அம்மாவா அப்பாவா இருந்தது மட்டுமில்லாமல் படிக்கவும் அதத் தொடரவும் ஒவச்சவா.

அதவிட மேலாய் இந்த அகதி முகாமில பிள்ளையள் பன்னிரண்டிலும், பதின்னாலிலும் எண்டு ஓடிப்போற, கெட்டுப் போற நேரத்தில வாசுகிக்கு நல்ல பாதுகாப்பா இருந்தவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எப்பிடித் தனிய இருப்பம்? வாசுவ நான் எப்படிப் பாதுகாப்பன்? பாட்டி ஏன் நீ இப்பிடிக் கெதியாய் போட்டாய். மனசுக்குள்ளேயே அழுதான்.

பாவம் பாட்டி எவ்வளவு ஆசையாய் பேத்திமாருக்கெண்டு பார்த்துப் பார்த்து உடுப்பு வாங்கி, இரவிரவா பலகாரம் சுட்டு எடுத்துக்கொண்டு வந்தவ... ஏன் கடவுளே உனக்கு கூட இரக்க மில்லையா? ஆசையாசையா வந்த பாட்டிய கொல்ல வைச்சு மண்ணில விழுத்திப் போட்டியே.

பாட்டி ரண்டு நாளில் வந்திடுவன்டா பேராண்டி எண்டாயே... அதுக்குள்ள போட்டியே... விக்கியது பாரதியின் மனம்.

“தம்பி உங்களிட்ட வாக்கு மூலம் ஏதோ எடுக்க வேணுமாம் கொஞ்சம் வாறிங்களா” என்று கேட்டபடி ஒருவன் வந்து நின்றான். தலையை ஆட்டி விட்டு அவன் முன்னால் போக பாரதி வாசுகியை எழுப்பி அவள் கையை இறுகப் பற்றிக் கொண்டான்.

அவள் மட்டும்தான் தனக்கு இனிச்சொந்தம் என்ற நினைவோ தெரியாது. அவன் மனதில் வேண்டினான். “மன்னித்துவிடு பாட்டி. நீ அடிக்கடி சொல்லுவாய். எண்ட நிலத்தில தான் கண்மூட வேணுமெண்டு... ஆனா இந்தப் பாதகர் உன்னச் சாகடிச்சிட்டாங்கள். இவர்களுக் எதிராய் ஒரு விரலைக் கூட நீட்ட முடியேல்ல...”

அப்படி நீட்டினால் என்ன மிஞ்சி மிஞ்சி சித்திரவதை செய்து சிறையில் அடைப்பாங்கள். ஆனா என் அக்காவை நினைச்சு பார். இன்னுமொரு செம்மணியாகவோ ஒரு சாரதாம்பாளாகவோ நான் அவள இழக்க விரும்பேல்ல... எனக்கு அவள் மட்டும் தான்.

உனக்குத் துரோகம் செய்வதாக நினைச்சு விடாத பாட்டி. உன் குழந்தைகளாகிய எங்கள மன்னிச்சு விடு பாட்டி. நீ கீழ விழுந்து இறந்துவிட்டதாகத்தான் நான் சொல்லப் போறன்.

*(2004ம் ஆண்டு நிறங்கள் தொகுப்பில் வெளியானது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல விலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தில் மகிழ்ந்து குலாவி மாம்பிஞ்சுகளைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்த சில மந்திகள் அவளைப் பார்த்து அலமந்து குதித்தோடியது போல தோன்றியது. மாமரக் கூரையின் கீழ் வடலி ஓலையால் சுற்றி அடைக்கப்பட்ட கிணற்றடியில் குழலி ஆடை களைக் களைந்து விட்டு மார்பிற்குக் குறுக்காகத் தான் கொண்டு வந்த சாரத்தைக் கட்டினாள். கட்டியவள் மீண்டும் ஒருமுறை இறுக்கமாக உள்ளதா எனச் சரி பார்த்துக் கொண்டாள்.

உடுப்பு அலம்பும் வாளியை இழுத்து அருகில் வைத்துவிட்டு மளமளவென நீரை இறைத்து வாளியினுள் ஊற்றினாள்.

"சடக் சடக்" யாரோ நடந்து வரும் ஓசையும் தொடர்ந்து திரும்பிச் செல்லும் ஓசையும் கேட்டது.

"பத்மினி பத்மினி" அழுத்தமான அழைப்பு. வந்தவன் பத்மினியின் கணவர் தான் என்பதைக் குழலி புரிந்து கொண்டாள். "பத்மினி" என்று மீண்டும் குரல்.

அவள் "ஓம் வாறன். என்னப்பா அதுக்கிடையில வந்திட்டடியளே? ஏன் துவாய மறந்திட்டீங்களே?" என வினவியபடி வெளிவாயிலுக்கு வந்து சேர்ந்தாள்.

"ஒரு மண்ணும் இல்லை. ஆர் கிணத்தடியில் நிக்கிற? மனுசர் களைச்சு விழுந்து வந்து, களைப்புத் தீர மேல் கழுவுவம் எண்டு போனா அங்கயும் தொல்லைதான்."

"இவள் தானப்பா. குழலி குளிக்க இஞ்ச தானே இப்ப வாறாள். கொஞ்சம் பொறுங்கோ. கெதியாக் குளிச்சிட்டு, விடச் சொல்லிப் போட்டு வாறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இஞ்ச நில்லும். உது இங்க எத்தின நாளா நடக்குது? இஞ்ச பாரும் எந்தக் குழலியா இருந்தா எனக்கென்ன? உவ இஞ்ச குளிக்க வர என்னையும் ஒரு மாதிரிப் பாப்பினம். இனிமேல் இந்த நாட்டியம் எல்லாம் வேண்டாம். எங்கேயும் இளிச்சவாயன் இருப்பினம் அங்க போய் நடத்தச் சொல்லு."

"ஸ்... சத்தமா கதைக்காதேங்கோ அவளுக்குக் கேக்கப் போகுது. மெல்ல கதையுங்களேன்."

"ஏன் கேட்டா என்ன? உவ பெரிய கண்ணகி. எரிச்சுப் போடுவா எண்டு பயமாக்கிடக்குதே உனக்கு! ம்... ம்... க்கக்கே..." என நக்கலாய்ச் சிரித்தபடி உள்ளே சென்றான்.

குழலியின் சப்த நாடிகள் அனைத்தும் ஒரு முறை ஸ்தம்பித்து விட்டன. மார்பிற்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு அப்படியே மரம் போல் நின்றாள்.

பூங்குழலியும், அருண்மொழியும், பாக்கியம் – புனிதவதி தம்பதியிரின் செல்வக் குழந்தைகள். குழலிக்கு இரண்டு வருடங்கள் மூத்தவன் அருண்மொழி.

ஊரில் மிகவும் வதியாக வாழ்ந்தவர்கள். தோட்டமும் தோப்பு மாய் எப்போதும் பொலிந்து கொண்டிருக்கும், செல்வம். அவர் களுக்குப் பசு மாடுகளுடன் நித்தமும் பாலும், நெய்யும் என செழிப்பாக இருக்கும். குருக்கள் புதுக்குளத்திலும் அதன் அண்டை ஊர்மனைகளிலும் பாக்கியத்தை தெரியாதவர்கள் கிடையாது அப்படிப்பட்ட கொடைத்தனவான் குழலியின் தந்தை.

குழலியின் வீட்டுத் தோட்டக் காணியில் வசித்தவர்களே பத்மினி குடும்பம். பத்மினியின் பெற்றோர் குழலி வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள். அவர்களுக்குச் சொந்தமாகக் காணி கிடையாது. மிகவும் வறியவர்கள். இவர்களைப் பார்த்து இரக்கப்பட்டு தன் தோட்டத்தில் ஒரு துண்டை அவர்களுக்கு இருக்கக் கொடுத்து வயிற்றுப்பசியைப் போக்க வழியும் செய்து கொடுத்தார் பாக்கியம். அவர்களும் நல்ல விசுவாசமாய் உழைத்தார்கள்.

குழலிக்கு தான் வசதியானவள் என்ற பெருமையோ செருக்கோ, சிறிதும் கிடையாது. பாடசாலை செல்லும் போது கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து செல்லும் பத்மினியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டே செல்வாள். வேற்றுமை இல்லாது தன்னுடன் சேர்த்து அவளுக்கும் உணவு கொடுப்பாள். தான், வீட்டில் விளையாடும் வேளைகளில் அவளையும் சேர்த்து விளையாடி பெரிதாகக் கட்டியிருந்த தொட்டியுள் இருவரும் குளித்து விளையாடிய அந்த நாள்களில்...

மாமரத்தில் இருந்து தொப்பென்று குழலியின் தலையில் மேல் மாம்பிஞ்சு விழுந்து நன்றாக நோக மனசும் லேசாக வலித்தது.

சீ... இப்படியும் இருப்பாரா? மனுசரா! கொஞ்சமாவது எனக்காக முன்பு எப்படி என்னோட அன்பா இருந்தவ. ம்... போகட்டும் காலங்கள் நிலைப்பதில்லையே... என எண்ணியவள் மளமளவெனக் குளித்த பின் அணியவென எடுத்து வந்த உடையை அணிந்து கொண்டு, மற்றய உடைகளை எடுத்து உருண்டையாகக் கட்டிக் கையில் எடுத்து அணைத்தபடி மண்றோட்டில் நடந்து பாவற்கும்பூமடு வாய்க்காலை நோக்கிப் போனாள். விதியை நோவதா? தன்னை நோவதா? என அவளுக்குப் புரியவில்லை

இடப்பெயர்வுகள் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருந்தமை யால் குழலியின் குடும்பமும் இடம்பெயர்ந்து மடுவிற்குச் சென்றனர். பின் 1993ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் குருக்கள் புதுக்குளத்திற்கு வந்தார்கள்.

அக்காலப்பகுதியில் கல்வி நிலைமைகள் சீராக இல்லாமை யால் வவுனியாநகர் நோக்கி 1994ம் ஆண்டு புறப்பட்டனர். மன்னார் வீதி பூவரசங்குளம் வழியாக வந்து சாளம்பைக்குளம் பகுதியில் இருக்கும் விக்ஸ் காட்டுப் பகுதியினூடாகச் சென்று கொந்தக்காரன் குளம், காக்கையன்குளம் வழியில் வெள்ளத்தில் மிதந்து சேற்றில் புரண்டு ஒரு வழியாக ஓமந்தை சென்றடைந்தனர். அன்று ஓமந்தை இறம்பைக் குளத்தில் தங்கி அடுத்தநாள் வவுனியா நகருக்குள் செல்ல ஆயத்தமாயினர்.

குழலியின் மனதில் துயரம் வடிந்தது. இனி மீண்டும் ஊருக்கு வந்து எப்போது எல்லோரையும் பார்ப்பது?

பிரியாமல் விடை தந்த சந்திரன், தோப்புகள், கிளித்தட்டு விளையாடிய தடங்கள், கடைசியாகச் சந்தித்த நாள்கள் என உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்துச் சிதறி விடும் போல் இருந்தது. இருந்தாலும் தன் படிப்பு முடிந்ததும் ஊருக்கு அப்பா அழைத்து வருவார் என்ற அசையாத நம்பிக்கையுடன் புறப்பட தயாரானாள்.

அவளுக்குத் தெரியாது. அவளுடைய விதி வேறு பாதை வகுத்தது. தாண்டிக்குளம் செக்பொயின்ரை அண்மித்து விட்டார்கள். வவுனியா நகரை எட்டிப் பார்த்தால் தெரியும் போல் இருந்தது. அப்பொழுது ஏதோ மிருக பாஷையில் கதைப்பது போல் இருந்தது. இருவர் வந்து ஏதோ கேட்டனர். இவர்கள் புரியாமல் நிற்க மரத்தடியில் நின்ற ஒருவரைக் கையைக் காட்டி அழைத்து ஏதோ சொல்ல. "பெரியவங்க ரொம்பச் சரி. உங்களுக்கு ஒண்டுமில்லை. இந்த பெண்ணும் பொடியனும் சந்தேகம் சொல்லுது; அது சுட்டி விசாரிக்கச் சொல்றது மாத்தையா" என மொழிந்து ஒரு கூடாரத்தினுள் அழைத்து சென்றார்கள்.

கூடாரத்துள் சென்றவர்கள் வரவில்லை. வந்தார்கள் மூன்று வருடங்கள் கழித்து. குழலியின் தந்தை மகனையும், மகளையும் நினைத்து பாயில் விழுந்தவர். ஒரு வருடத்தின் பின் ஒரேயடியாகப் போய்விட்டார். தாய் தான் இழுத்திழுத்துப் பார்த்து வந்தாள்.

வாய்க்காலில் சலசல என நீர் ஓடிக் கொண்டிருந்தது. படிகளில் இறங்கி கண்களை மூடி அழுக்குகள் எல்லாம் கரையட்டும் என எண்ணினாளோ என்னவோ ஒரு மணிநேரமாகக் குளித்தாள்.

**க**ண்ணகை அம்மன் கோயிலில் மதியப் பூசை தொடங்கி விட்டது என்பதைக் காட்ட கோயிலின் மணி டாண். டாண் என ஒலித்தது. வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே நோக்கினாள்.

மின்னலென அவன் பார்வை அவளை வெட்டிச் சென்றது. தொடர்ந்து காறி உமிழும் ஓசையும். ஒரு கணம் நின்று நிதானித்துக் கண்களை இறுக மூடித் திறந்தாள். பின் மளமளவெனக் கோயிலினுள் செல்ல அம்மனுக்குத் தீபாராதனை நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருநதது. கண்களை மூடிப் பிரார்த்தித்தாள். கண் இடுக்குகளின் வழியாகக் கண்ணீர் வழிந்தது.

பூசை முடிந்து பிராசாதத்தைப் பெற்றுக் கொண்டு எல்லோரும் சென்று விட்டார்கள். குழலி மட்டும் வெளி மாடத் தூணில் சாய்ந்து கொண்டு அமைதியின்றித் துடித்துக் கொண்டிருந்தாள்.

தன்னைப் புரிந்து கொண்டு தன் உயிராகப் பார்த்த அவனே இன்று முகத்தில் சேற்றை அடிப்பது போல் நடந்து கொண்டானே. ஏங்கித் தவித்தது மனசு.

சந்திரன் குழலியின் அயல்வீடு. சந்திரனின் பெற்றோரும் குழலியின் பெற்றோரும் உறவினர்கள் இல்லையே தவிர, அவர்களிடையே உறவுக்கும் மேலான பாசப்பிணைப்பு நிலவி இருந்தது.

“மாமி மாமி” எனத் தன்னைச் சுற்றி வருகின்ற துடிப்பான சிறுமியாக இருந்த குழலி மேல் அளவில்லாத பிரியம் சந்திரனின் தாய்க்கு. சந்திரன் தாய்க்கு ஏக புத்திரனே.

உணவில் இருந்து உடுக்கும் உடை வரை இரு குடும்பத்தாரும் கலந்தாலோசித்தே எடுத்துக் கொள்வார்கள். இருவரும் ஒன்றாக உண்டு பச்சைப் பசுமை நிறைந்த வயல் வரப்புகளில் ஓடிப் பிடித்தாடி ஒற்றுமையாக இருந்தனர்.

அருண்மொழியும் சந்திரனும் ஒரே வகுப்பு. ஆனபடியால் இருவரும் ஒன்றாக இருந்து படிக்கும் போது குழலியும் சேர்ந்து கொள்வாள்.

கால ஓட்டத்தில் பெரியவர்களானார்கள். ஆனால் அன்பு மட்டும் மாறாமல் ஆழமாக வளர்ந்தது. குழலி பெரியவளான தும் கட்டுப்பாடுகளைப் போட்டார்கள் பெற்றோர்.

முன்பு போல் அவளுக்குச் சந்திரனுடன் சண்டை போடவோ பறித்து ஏமாற்றி உண்ணவோ, கிளித்தட்டு மறிக்கவோ முடிய வில்லை. அவர்களிடையே சந்திப்புக்கள் குறைய ஏக்கம் அதிமாகிக் கொண்டிருந்தது. இருவருக்கும் ஒரே துடிப்பு, எப்போது பார்ப்போம், பேசுவோம் என. களவாவாவது பார்த்துப் பேசிட வேண்டும் என மனம் ஏங்கிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளாவது குழலி வெளியூரில் உறவினர் வீட்டுக்கு எங்காவது சென்றால் அவன். துடியாய்த் துடித்து விடுவான். இப்படியே இருவருக்குமிடையில் காதல் வேரூன்றியதை இருவரும் புரிந்து கொண்டனர்.

இந்த விஷயம் ஊர் கண்ணில்பட்டு விட்டது. ஊர் வாய்க்கு உலை மூடி கிடையாதே! இரு வீட்டாருக்கும் தெரிய வந்தது.

சந்திரனின் தாய்க்கு குழலி மருமகளாவதில் சக்கரையாய் இனித்தது. ஆனால் குழலி வீட்டில் பெரிய பூகம்பமே வெடித்து. தந்தை குதித்தார் "என் செல்ல மகளை எப்படி வாழ வைப்பேன், தோப்பும் துரவுமாய் வாழ்ந்த செல்வ மகள் கஷ்டப் படுவதா? அவளுக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை பாப்பன், ரங்கூனில் உத்தியோகம் பார்க்கும் மாப்பிள்ளையைத்தான் கட்டி வைப்பன். என்ர மகள மகாராணி போல வாழ வைப்பன். எதிர் வீட்டில வேலக்காரி மாதிரி வாழோணுமா?" தாம் தீம் எனக் குதித்தார்.

தாய் குழந்தையின் மனம் நோகக் கூடாது எனத் தவித்தாள். ஏற்கெனவே இரண்டு நாட்களாக சாப்பாடும் இல்லை; பேச்சும் இல்லை. இந்நிலை நீடிப்பதை அவள் விரும்பவில்லை.

கணவனுடன் நாசூக்காகப் பேசினாள், "சந்திரன் கெட்டிக்காரன், படித்து முன்னுக்கு வந்து உத்தியோகம் பார்ப்பான். அதோட அவனுக்குப் பிச்சல் பிடுங்கலும் இல்லத் தானே" என எடுத்துக் கூறி கணவனை ஒரு மாதிரிச் சம்மதிக்க வைத்தாள்.

தகப்பனார் ஒருமாதிரி இசைந்தாலும் கடுமையாக கண்டிசன் ஒன்றைப் போட்டு விட்டார். "படித்து முடியும் மட்டும் காதல் கீதல் எண்டு திரியிரதில்லை. ஒரே இடத்தில் இருந்து படித்தால் இருவரும் உருப்பட்டாற் போலத்தான். அத்தோட இங்க மாஸ்ரர் மாரும் இல் லாததால் படிப்பும் அவ்வளவாக இல்லை" என்று கூறி குழலியையும் அவளுடைய அண்ணனையும் அழைத்துக் கொண்டு குடும்ப சகிதமாக நகர் நோக்கிப் புறப்பட்டார்.

குழலி கடைசியாச் சந்திரனிடம் தன்னைப் பிரியாமல் விடை கொடுத்தது கண்களில் இன்னும் நிழலாடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளை இறுகப்பற்றி கமுகம் தோப்பினுள் கண்கலங்கி நின்ற காட்சி நினைவில் மீளும் போதெல்லாம் அவளுள் மின்சார கிளர்ச்சியை ஏற்படுத்தும். "குழலி நீ ரவுணுக்குப் போனா என்ன மறந்திடுவியா? நீ தான் என்னோட அன்பை புரிஞ்சு கொள்ளாட்டியும் உன்னோட என்ர இதயம் உறவாடி உயிருள்ள வரைக்கும் வாழுவன், வாழ்ந்து கொண்டிருப்பன். ஆனா நீயும் என்ன மறக்காமாட்டாய் எண்டு உன்ர ஆழமான அன்பில புரிஞ்சு கொண்டன். இருந்தும் உன்னோட அப்பா எங்களப் பிரிஞ்சுப் போடுவாரோ எண்டுதான் பயமாக் கிடக்கு" கூறும் போதே அவன் கண்கள் சிவந்தது. கண்ணீரை ஒருவாறு அடக்கிக் கொண்டு விடை பெற்றான்.

**சி**ட்டுக் குருவி விர்ர்... என வந்து அர்ச்சனைப் தேங்காயுள் இருந்த வாழைப் பழத்தைத் தன் குன்றி மணிக் கண்களால் உருட்டி உருட்டிப் பார்த்து சின்ன அலகினால் கொத்தியது. குருவியைத் துரத்தி விட்டு கன்னத்தில் இரண்டு முறை போட்டுக் கொண்டாள்.

மீண்டும் அம்மன் சன்னிதானத்தை வணங்கினாள். "கடவுளே நீ எனக்கு எவ்வளவு சோதனையைத் தந்தாய். எல்லாத்தையும் தாங்கினன். என்னை நேசிக்கிற என்னைப் புரிஞ்சு கொண்ட ஒரு ஜீவன் எனக்காகக் காத்திருக்குது எண்டு தான் இருந்தன்; இனியும் நான்... நான்... எப்பிடி... இந்த துன்பத்தையெல்லாம் தாங்கிற சக்திய நீ தான் எனக்குக் குடுக்கோணும்."

படிகளில் இறங்கி வந்து செருப்பை மாட்டிக் கொண்டு திரும்பியவள், சந்திரனின் தாய் வருவதைக் கண்டாள். அவர் முகமெல்லாம் கறுத்துப் போனது. முகத்தை திருப்பி சங்கடப்பட்டுக் கொண்டு நின்றார். இந்த நிலையை நீடித்து அவரை மேலும் சங்கடப்படுத்தாமல் விறு விறு என நடந்து அவரைத் தாண்டிப் போனாள். "மாமி உங்கட மகனை நல்ல விலைக்கு விக்க காலம் இருக்கேக்க ஏன் நழுவ விடுறீங்க" எனத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் குழலி.

*(2004ம் ஆண்டு நிறங்கள் சிறுகதைத் தொகுப்பிலிருந்து)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனா நீண்ட நேரமாக சீமெந்தால் செய்யப் பட்டிருந்த குந்தில் அமர்ந்து அந்த அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். எப்போதுமே தனாவும் அவளின் அக்காமாரும் தமக்குள் அவரைக் கூப்பிடுவது "சகடையம்மா" என்றே.

சகடையம்மா கட்டிலில் படுத்துக்கிடந்தாள். நம்பவே முடியவில்லை.

வினாடிகள் நிமிடங்களாக மாறிக்கொண்டே இருக்க, "என்னம்மா அப்பிடி பாக்கிறாய்?" என்ற அனுங்கல் குரல் பேசவைத்தது.

'ரெண்டு புளிமூட்டையாக கிடந்த உடம்ப நம்ப ஏலாம பாத்துக் கொண்டிருக்கிறன்' என்று சொல்ல நினைத்தும் அதைச் சொல்லாமல், "ஒண்டுமில்ல சும்மா தான் பாத்தனான்" என்றாள்.

"கிட்டவாவன்..."

அவள் கட்டிலுக்குப் பக்கத்தில் போய் இருந்ததும், தலையைத் தடவி விட்டார். அதுக்குக் கூட போதுமான சக்தி இருக்கவில்லை. அவர் கையைப் பிடித்துக் கொண்டாள் தனா. அவளுக்கு பேச வார்த்தைகள் வரவில்லை. எந்த வார்த்தையுமே அவரைக் காயப்படுத்தி விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாகவும் இருந்தாள் அவள்.

உளறலாக சில வார்த்தைகள் வெளிப்பட்டு விசும்பலோடு கரைந்தன. அவர் ஏதோ நிறைய வார்த்தைகளைப் பேசினார். அவை பெரும்பாலும் விளங்கவில்லை.

"பாத்தியாடி பெரியம்மாவ.... ம்.... இப்பிடி..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியம்மா சரியாயிட்டன்... இனி எழும்பி கொஞ்ச நாள்ள தோட்டமெல்லாம் செய்வன் பார்."

கண்களை மூடிக்கொண்டார்.

கொஞ்ச நாளைக்கு முன் தனாவின் சித்தி அம்மாவிடம் சொன்னது இன்னும் அவள் காதுக்குள்ள ஒலிச்சுக் கொண்டே இருந்தது. "அக்கா சொல்லுது தனக்கு சுகமாயிற்று எண்டு. அப்ப இப்ப கடைசியாயும் யாழ்ப்பாணத்தில மருதனா மடத்தில கொண்டு போய் வைச்சிருந்தவே?"

"பாவம். அது அப்பிடியே நம்பிக் கொண்டு இருக்கட்டும். எனக்கெண்டா இப்பிடிக்கிடத்து அழுந்துறதவிட அக்கா கெதியாப் போயிற்றுதெண்டா நல்லம்."

"பிள்ளையள் அத வடிவாப் பாக்குறதில்ல.நாலுபேரும் தங்கட சுயநலம். கடைசிப்பெட்டை புருசனோட சண்டையப் போட்டிட்டு இஞ்ச வந்து குந்திருவாள், அதுக்கு ஒரே ஆக்கின. சந்தோ சமா இருந்தா அந்தப்பக்கம் வாறதே இல்ல."

"மற்றது மூத்தது, காசு ஏதாவது குடுத்தா அதப் பறிச்செடுத் திரும். தாயப்பாக்கிறன் எண்டு சொல்லி லீவப்போட்டிட்டு வந்து தோட்டம் செய்துகொண்டு நிக்கும். அக்காக்கு தண்ணி குடுக்கக் கூட ஆரும் இருக்கிறேல்ல, சிலநேரம். அதுக்கு கூப்பிடவும் சக்தியில்ல. மற்றதுகளும் ஒவ்வொரு பக்கம். ஏதே அண்ணிய குற சொன்னாலும் அவ இருந்தபடியாத்தான் ஆஸ்பத்திரியில இருந்து வந்தோண்ண இடியப்பமும் சொதியும் வைச்சுக்கொண்டு ஓடிவந்து பாத்தவ, அண்ணையும் முந்தி மாதிரியில்ல இப்ப மாறிட்டுது."

"உள்ளங்கை கூட சோகை பத்திக் கிடந்தது. மயக்கத்தில் கிடக்கிறாரா, அல்லது தூக்கத்தில் கிடக்கிறாரர என்றே தெரிய வில்லை."

சகடயம்மாவின் இரண்டாவது மகள் தோட்டத்துக்குள் இருந்து வந்தாள்.

"தேத்தண்ணி குடிக்கிறியா?"

"வேண்டாம்" அவள் தலையசைக்கிறாள்.

"இரு, பச்சக்கச்சான் புடுங்கிப் போட்டிருக்கு. எடுத்துக் கொண்டு வாறன். உனக்கு நல்ல விருப்பம் தானேடி" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனா ஒன்றும் சொல்லவேயில்லை. அப்பிடியே இருந்தாள்.

பொலுத்தீன் பையை எடுத்துக்கொண்டு தோட்டப்பக்கமாய் போனாள், அந்த இரண்டாவது மகள்.

சகடையம்மாவிலோ அவளுடைய பிள்ளைகளிலோ நிறைய விமர்சனங்களும் கோபங்களும் இருந்தாலும், தனா சாப்பாட்டு விடயத்தில் அவர்களின் தாராள மனசையோ, தனி உழைப்பையோ விட்டுக் கொடுப்பதில்லை.

"என்ன கதபடிக்கிறியா?"

அரைவிழி திறந்தபடி, பக்கமாக அவளைப் பார்த்துச் சகடையம்மா கேட்டாள். தனாவின் கைகளிலே தினமுரசு கிடந்தது. அதைப் பார்த்துக் கேட்டிருப்பாளோ என்னமோ. அனுங்கி அனுங்கி சில வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருந்தாள்.

"நான் என்ர தெய்வத்த இழந்த கத..."

"சைவத்த மறந்த கத..."

"இந்த ஊருக்கு வந்த கத"

மீண்டும் களைத்துப் போய் கண்களை மூடினாள்.

தனா மெதுவாக எழுந்து முற்றத்தில் நடந்தாள்.

வாட்டர் பம்ப் தண்ணியைத் தொட்டிக்குள் இறைத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்க அவளுக்கு ஆசையாக இருந்தது. அருகில் போய் வெண் நுரை நுரையாய் வெளியேறிக் கொண்டிருந்த நீரிலே, சுட்டு விரலை நீட்டி நனைத்தாள். அந்த நீர் அந்த வீட்டின் இறந்த நினைவுகளை உயிர்ப்பித்தது.

தனாவுக்கு இந்த மாதிரி வாட்டர்ப்பம்ப் இறைக்கும் நீரில் நனைவது என்றால் சரியான விருப்பம். இந்த வீட்டில் அப்போதெல் லாம் பெரிய தோட்டம் இருக்கும். கோவா, வெங்காயம், கடலை, கத்திரி, மிளகாய்... என்று நிறையப் பயிரிடுவார்கள். அவளுக்கு ஆறு ஏழு வயசிருக்கும். அந்தத் தோட்டத்திற்குள் ஒளித்துப் பிடித்து விளையாடுவதும், தண்ணி இறைக்கும் போது தண்ணியில நனைந்து, பாய்ந்த ஓடையில் ஓடியிருக்கும் வெண் மணலை எடுத்து ஆளுக்காள் அடித்து விளையாடுவதும், எவ்வளவு இனிமையான நாட்களாயிருந்தது. முன்பெல்லாம் எப்போது பள்ளிக்கூட லீவு வரும் இங்கே ஓடிவர என்று காத்திருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆசையான நாட்கள் மாறி அதிமுக்கியமான விடயங்களுக்காக இந்த வீட்டிற்கு வருவதாய் இருந்தாலும் வெறுப்பாய் இருக்கும். இதற்கு காரணம் சகடையம்மாவின் செயற்பாடுகளும் அவள் நேசித்த குமரனும் தான்.

தனா தீச்சுட்டாற்போல் கையை இழுத்துக் கொண்டாள். “இந்தத் தண்ணிதானே, இந்த தண்ணீர் வரும் கிணறுதானே எங்கட குமரன சாகடிச்சது?”

சகடையம்மா சொன்ன கடவுள் அவன்தான். தனாவிற்கும் அவனுக்கும் ஒரே வயசு. இப்ப இருந்திருந்தா பெரிய ஆம்பிளையா இருந்திருப்பான். அவளுக்கு சகோதரன் முறை.

குமரன் இறந்தபின் அந்த வீடே மாறிவிட்டது. ஒரே பிரச்சனை, அவன் தவறுதலாக கிணத்துக்க விழுந்து செத்துப் போயிற்றான். சகடையம்மாவின் கணவர் குடிகாரனாய் மாறினார். இவளையும் துன்புறுத்தினார். இரண்டு வருசத்திற்குள் இவளை விட்டுவிட்டு இன்னொருத்தியோடு வாழத்தொடங்கினார். ஆம்பிளப்பிள்ளை பெறப்போகிறாராம்.

அதன்பின் சகடையம்மா சைவத்தில் இருந்து தென் இந்திய திருச்சபைக்கு மதம் மாறினாள். எப்படியெப்பிடியோ வாழ்ந்தாள். அவள் மனசும் வக்கிரமடைந்து போயிற்று.

வாயில் வந்தபடி எல்லோரையும் கேவலமாக பேசுபவளாக மாறினாள். குடும்பங்களுக்குள் குழப்பம் உண்டாக்கும் சகுனியாகவும் திகழ்ந்தாள். இந்த சகடையம்மாவின் ஒரேயொரு தம்பியும், கடைசித் தங்கையும் இவளைச் செல்லமாக “சகுனி” என்று தான் அழைப்பார்கள்.

சகடையம்மா பற்றி அவளின் கடைசித் தங்கை சொன்னது அரைவாசிதான் உண்மை என தனாவுக்குத் தோன்றியது. ஒரு அனாதையைப் போல் அவள் இருந்து கொண்டிருந்தாள். மாறி மாறி யாராவது ஒருத்தர் இருந்தாலும், சுகாதாரமான முறையில் அவளைப் பராமரிக்கவில்லை. இலையான்கள் மொய்த்துக் கொண்டு கிடந்தன.

புறணி அளந்த அந்தத் தங்கை கூட ஒருநாள் லீவு போட்டு இந்த அக்காவை பராமரித்திருக்கலாம் தானே? உத்தியோகம் பாக்கிறார்கள், விருப்பமானதைச் செய்து குடுத்து கடைசி நேரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தூய்மைப்படுத்தலாம் தானே? இவர்களுக்கெல்லாம் எப்படிப்பட்ட கடைசி நேரங்கள் அமையுமோ? இப்படித் தனாவின் உள்ளம் சகடையம்மாவிற்கு வக்காலத்து வாங்கியது.

என்ன இருந்தாலும் தனாவின் உள்ளத்தில் ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்த தீயை கடைசி நேர இரத்தக் கண்ணீரால் கூட அணைக்க முடியவில்லை.

அந்தச் சம்பவம் நேற்று நடந்தது போல் இன்னும் ஒவ்வொரு சொற்களாய் நினைவிருந்தது அவளுக்கு.

இந்தச் சகடையம்மாவின் கணவரிடம், தனாவின் அம்மா மகனைச் சிறையில் படையினர் அடைத்து வைத்திருந்தபோது காணி உறுதியைக் கொடுத்து பத்தாயிரம் பணம் வாங்கியிருந்தாள். இதை அறிந்த சகடையம்மா விடிந்ததும் விடியாமலும் அந்த வீட்டுக்கு வந்து பணம் வாங்கியது பற்றி ரகளை செய்தாள். பிள்ளைகளையும் அந்தத் தாயையும் போட்டு அடித்துக் கடுமையான வார்த்தைகளைத் துப்பினாள்.

அயல் வீடுகளில் இருந்தவர்கள் கூடியதைக் கூட பொருட்படுத்தாது, சொந்தத் தங்கையையும் பிள்ளைகளையுமேயே கேவலப்படுத்துகிறோம் என்று பார்க்காமல் அப்படிக் கத்தினாள்.

"போர்ட் போட்டு வைச்சிரு. ரண்டு குமருகளும் நீயும் சேர்ந்து தொழில் நடத்தலாம். நல்லா நிறையக் காசுவரும்."

இது நடந்து சரியாகப் பதிமூன்று வருடங்களாகிறது.

"இந்தா கொண்டு போய் அவிச்சு சாப்பிடு."

கச்சான் எடுக்கப்போனவள் கொணர்ந்து கொடுத்தாள்.

"வை, மாமா வீட்ட போறன், வரேக்க வாறன்."

கூறிவிட்டு பொறுமையாக நடந்தாள் தனா.

சகடையம்மாவுக்கு கருப்பையில் கான்சர். இப்பொழுது மிகவும் முற்றி மோசமான நிலைக்கு வந்துவிட்டது. கடைசி நாளுக்காகக் காத்திருக்கிறாள். சுகாதாரமான முறையில் பராமரிக்காத காரணமே என்னமே அவளிருந்த பக்கங்கள் எல்லாம் நாறிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்தவாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர மினுக்கிட்ட ராத்திரிகள் மாறி கரும்புகையூடிய ராத்திரிகள் நீண்டுகொண்டே செல்ல, அதன் தொடர்சங்கிலியாய் அந்தத் தகரக் கதவுத் தட்டல்களும் கரும்புகையூடு கிழிந்த சத்தங்களாய் தொடர்ந்தவையே. புகையூடிய கண்ணாடியிலும் பளிச்சிட்ட தன் முகத்தைத் தானே பார்த்துக் கொண்டாள். முகத்தை விகாரமாக்கி, கண்ணை அகல விழித்து, பல்லை இளித்து 'ஆ..." வென்று. அவ்வளவு விகாரங்கள் பொருந்திக் கிடக்கிறதா என வேறு வேறு கோணங்களில் கண்ணாடிக்குள் தன்னை ஒட்டிப் பார்த்தாள். விழிகள் சிவந்திருந்தன. மனம் ஒரு கப் வையின் அடித்தால் நன்றாயிருக்குமோ? எண்ணித் தோற்றது. எந்தப் போதைக்குமே இந்தப்பேதையின் இப்போதைய மனநிலையை வென்று பார்க்கத் தைரியம ற்றுக்கிடந்தது.

மூலையில் கிடந்த மண்முட்டியும், அதை மறைச்சிருந்த சுளகும், அப்பு தவறணைப் பக்கம் போய் வந்ததைச் சொல்ல எட்டி விழித்தாள். விழிக்குள் அப்பு அம்பிடவில்லை, எங்கேயே கிழவர் போயிட்டார். மணி ஆச்சி கடப்பக்கமாய் தான் போயிருப்பார், அப்ப சுணங்கும், தானே முடிவு செய்தாள். அப்பு மனம் விட்டு அழறது மணி ஆச்சி கடைக்குந்திலதான் கிழவரும் என்ன செய்வார் பாவம்.

ஒரு அலுமினியம் யக்கில் நிறைத்துக் கொண்டாள். வாசல் தட்டும் நேரம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. வாசலில் மெட்டவிழ்ந்து கொண்டிருந்த மல்லிகை வாசத்தை உள்ளேயனுப்பிக் கொண்டிருந்தது தென்றல். முலைகளைக் கிள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசி உணர்வின்றிச் சாகத் துணியும் தருணங்கள், இதை மரணிக்காவிடில் ஒரு கணம் மெல்ல மயங்கிச் சரியுமா. தனிமை உணர்வுகளை அடித்தமர்த்த முறித்து வைத்த வேப்பங்குலையை கையில் எடுத்துக்கொண்டாள். மறு கையில் ஊற்றி நிறைத்த யக்கை எடுத்துக் கொண்டாள் கண்ணாடி முன் போய் நின்றாள், வாசலைப் பார்த்தாள், மெல்ல மெல்ல இரண்டு பக்கங்களிலும் சரிந்து சரிந்து ஆடத் தொடங்கினாள். வஞ்ச நகை கடையுதட்டில், வழிய மறுபக்க மாய் வழிந்த கள்ளைப் புறங்கையில் மடித்துத் துடைத்து நக்கியபடி இன்னும் வேகமாய் ஆடத் தொடங்கியிருந்தாள்.

முலாம் உரிந்து கிடந்த அந்தக் கண்ணாடியை உத்து உத்துப் பார்த்தபடி ஆடிக்கொண்டிருந்தாள். அந்தயக் கண்ணாடி கொழுவிக் கிடந்த முகட்டு வளைத்தடியைத் தாண்டி வெறுமையாய் கவுண்டு கிடக்க...

மூடிய கண்களும் உலுப்புகிற கையையுடைய கிளையு மாய், குலைப்பன் காய்ச்சல் வந்தாற்போல் குலுங்கிக் குலுங்கி ஆடினாள். மூடிய கண்களுக்குள் முழுவேகம் நிறைந்து கிடந்தது. உதடுகள் வேகவேகமாய்ப் பலதையும் உச்சரித்துக் கொண்டிருந்தது. எதையோ விரும்புகிறாள், எதையோ வெறுக்கிறாள் என்று பார்ப்பவர் புரிந்துகொள்ள முடிந்தது. வாசல் திறந்தே கிடந்தது. அப்பு இன்னும் வரவில்லை. வாசலில் உருவ நிழல் ஒன்று நின்று, பின் கலைந்து மறைந்து கொண்டிருந்தது.

அப்புக்கு "கள்" என்றால் உசிர் இது முன்பு. இறக்கின உடன் கள்ளக் குடிக்கமாட்டார். இந்த மாதிரி மண்பானைக்க ஊத்தி வைச்சிருப்பார். பின்னேரக் கருக்கல் பொழுதில, படலையடியில இருக்கிற வேப்பமரத்துக்கடியில இருந்து ரசிச்சு ருசிச்சுக் குடிப்பார். ஆனால் இப்பயெல்லாம் விரும்பாமலே கள்ளு வாங்கிக் கொணந்து மண்பானைக்குள்ள ஊத்தி வைக்கிறார். கருக்கல் பொழுதில வேப்பம ரத்தடியில உக்காருவதும் இல்லை. பத்து, பதினொருமணிக்கு மேல தான் இப்பொழுதெல்லாம் வீட்டுக்கு வாறார். மணி ஆச்சியோட என்ன காதலே கீதலோ! இத்தனை நேரம் களிச்சா வீட்ட வரோணும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தெட்டு வயசு முதிர்க்குமர வீட்டில தனிய விட்டிட்டு இவருக்கு அவவோட என்ன வேண்டிக்கிடக்குது? இந்தக் குமருக்கு பேய் பிடிச்சமாதிரித் திரியுது, பைத்தியமாகக் கூட இருக்கலாம். ஆனாலும் கட்டாயமா இது கலியாணப் பைத்தியமாகத்தான் இருக்கோணும். இது அண்டை அயலுகளில் உள்ளவர்களுடைய பேச்சு.

எங்கட சனத்துக்கு என்ன நடந்துதோ இல்லையோ பக்கத்து வீட்டப் பாத்து விடுப்புக் கதைக்காட்டி உலையில அவியாது தானே.

அப்பு எப்பிடியும் பதினொண்டேகால், அரை ஆகிடும் வீட்ட வர. வந்தால் எறிந்து கிடக்கும் அலுமினியம் யக், வீடெங்கும் பரவலாய் உதிர்ந்து கிடக்கும் வேப்பம் கெட்டின் இலைகள், அரை மயக்கத் தூக்கத்தில் விழுந்து கிடக்கும் அவள், வேப்பிலைக்காரி. இதைப்பார்த்தால் தான் அவர் நிம்மதியா மீதமிருக்கிற கள்ளைக் குடித்துவிட்டு தகரக்கதவைச் சாத்திவிட்டு வாசலுக்குக் குறுக்கால சாக்கை விரித்து, அதுக்கு மேலாக இன்னுமொரு துண்டை விரித்துப் படுத்துக் கொள்வார்.

அப்புக்கு அவளை நினைக்க அடிவயிறெல்லாம் எரிஞ்சு தணியும். பாவம் அவளும் இத்தின காலமா ஏதேவெல்லாம் செய்து ஒவ்வொரு இரவுகளையும் யாகமாக்கிக் கொண்டிருக்கிறாள். அஞ்சு நாளைக்கு மேலாவும் எப்பிடித் தீட்டுத்துணியப் படலைக்கு முன்னுக்கா கிடக்கிற கொடியில துவைச்சுக் காயவிட ஏலும். மூண்டு நாள், நாலுநாள், அதிகபட்சம் அஞ்சு நாளைக்கு மேல அந்தத் துண்டை நனைச்சுக் காயவிட்டால் பொய் எண்டு தெரிஞ்சு போகுமே.

**வ**ன்னிப் பகுதிகளில் பெரும்பாலும் கிணற்றுத் தண்ணியைக் குடிப்பதற்கு அஞ்சுகிறார்கள். காலை விடிஞ்சால் எந்தக் கிணத்துக் குள் பெண் சடலமே, சிசுக்களே மிதக்குமென்றும், மனித உடல் ஊறிச் சிதைந்த நீரைக் குடிக்க நேர்ந்திடப் போகிறதோ என்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளில் கூட தினம் ஒரு செய்தியாவது இந்த மாதிரிப் படிக்க நேரிட்டு விடுகிறது.

அப்புவுக்கு எந்த நேரமும் திகிலான நிமிடங்களாகவே கழிந்தது. யுத்தம் ஓய்ந்துபோன நிம்மதியை மனுசன் எந்தவொரு நிமிடமாவது அனுபவித்திருப்பாரா என்றால் சந்தேகம் தான். வேப்பிலைக்காரியின் அப்பாவுடைய அப்பாவே இவர். எண்பத்தைந்து வயசு கடந்த கிழவர். அவளுடைய தாயும் தகப்பனும் யுத்தத்தில் இறந்து போயினர். நாப்பது வயதையுடைய சகோதரி கலியாணம் செய்து குடியும் குடித்தனமுமாய் யாழ்ப்பாணம் தின்னவேலியில இருக்குறா. ஆனால் இவளைப் பக்கத்திலும் அண்டுவதில்லை. கதைத்தால் கூட தமக்கு ஏதாவது பிரச்சனை வந்து விடுமோ என்கிற பயம். தம் பிள்ளைகளோடு சுகமாக வாழ வேண்டும். மற்றவர்கள் எப்பாடு பட்டாவது ஒழியட்டும் என்றுதானே இப்பொழுதெல்லாம் பலர் வாழ்கிறார்கள். இந்நிலையில் தெரிந்தவர்கள், பழக்க மானவர்கள் பேசவில்லையே எனக் கோபித்துக் கொள்வதிலும் அர்த்தமில்லை தானே.

இப்படித் தனித்து விடப்பட்ட மண்குடிசைகள் வன்னியில் ஏராளம். இந்தக் குடிசைகளுக்குள் எல்லாம் களமுனையில் நின்று களமாடி எதிரியைப் பல சமர்களில் விரட்டிய பல சரித்திர, பாரதி கண்ட புதுமைப்பெண்கள் பதுங்கிக் கிடக்கிறார்கள்.

பெண் சுதந்திரமாய், விடுதலை பெற்ற உணர்வாய் வாழ்ந்திருந்தவர்கள். அடிமைக்குள் அடிபட்டுக் கிடக்கிறார்கள். யுத்தத்தில் எஞ்சிய விடுதலைப் புலி வீராங்கனைகளும், சரண டைந்தவர்களுமாக வெனச் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டு பின் புணர் வாழ்வளிப்பதாகக் கூறிச் சிலர் விடுவிக்கப்பட்டனர்.

வெளியே வரும் போது மகிழ்ச்சியாகத் தாம் வாழலாம் என்ற ஆசையுடன் வந்தார்கள். ஆனால் இவர்கள் சிறைக்குள் இருக்கும்போது அனுபவித்த கொடுமைகளை விட வெளியே வந்து வாழ்வது பகிரதப்பிரயத்தனமாகிப் போயிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுடைய பெற்றோர் பெரும்பாலும் வயதுபோயோ அல்லது போரிலேயோ பெரும்பாலும் இறந்துபோயிருப்பார்கள். உடன் பிறந்தவர்களும் பெரும்பாலும் திருமணம் செய்து தனிக் குடும்பமாகி விட்டனர். அவர்களுக்கு இவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதில் தமக்கு ஏதாவது பிரச்சனை வந்துவிடுமோ என்ற பயம். பண உதவி கூடச் செய்யத் தயாராக இல்லை. தெரியாதவர்கள் போல் வாழ்ந்து கொள்கிறார்கள்.

இப்படித் தனித்து தவித்துப் போயிருக்கும் வீரப் பெண்களின் கதை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. இவர்களைக் கலியாணம் செய்ய எந்த ஆண்களும் தயாராக இல்லை. அத்திபூத்தாப்போல் வெளிநாடுகளில் அங்கொண்டும் இங்கொண்டும் என. அதுவும் சின்னப் பெட்டையளா இருந்தால்தான் (ஒரு இருபத்தேழு வயசுக்குள்ள). சிலர் எல்லாத்தையும் - இழந்து சாதாரண ஒரு வாழ்க்கையை வாழ முடியாத நிலைமைக்குள் தள்ளப்பட்டிருக்கும் இவர்களுக்கு உதவுவதற்கு மனிதம் உள்ள, மனிதாபிமானம் உள்ள, ஆண்மையுள்ள மனிதர்கள், இத்தனை பேருக்குள் எத்தனை? என்பதே புதுமையாகிறது.

இப்படித் தனித்து இருப்பவர்களில் உடல் உறுப்புக்களை இழந்து ஊனமாய், சிலர் கைகால்கள் வளங்காமல் சிறப்புக் கவனிப்புக்குட்படுத்த வேண்டியவர்களாய் இருந்தும், தவிக்கவிடப் பட்டிருக்கிறார்கள்.

இன்னுமொரு அசிங்கமான விடயம் ஒன்று, நூறு ரூபாய்க் காகக் கூட சில பெண்கள் விபச்சாரத்திற்கு இணங்குகிறார்கள். இப்படியான நிலைக்கு இந்தப் பெண்களைத் தள்ளியது யார்?

எங்கட ஆம்பிளையளுக்கு போராடி எதிர்காலமிழந்து உறவிழந்து நிற்கிற, இந்த வீரப் பெண்களை கலியாணம் செய்து, அவர்களுக்கான வாழ்வில் ஒரு துணையாக, ஆறுதலாக வாழத் தைரியமில்லை. ஆனாலும் இவர்கள் புத்திசாலிகள். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வாழும் பெண்களைப் பார்த்து, அவர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி வாழ்வது பெருமையாம். அவர்கள் வெளிநாட்டுக் கலாச் சாரத்தில் திருமணத்திற்கு முன் பழகிப் பழக்கம் விட்டு, கன்னி மாப்பிள்ளை என நினைத்து இவர்களைத் தேட, இவர்கள் பணமும், வெளிநாட்டு ஈர்ப்பும் எப்படி வாழ்ந்திருந்தாலும் பரவாயில்லை என்ற மனநிலையோடு, இங்கு இவர்களுடன் பேசும்போதே, அங்கு அந்தந்தக்காலத்து காதலனுடன் சுகித்துக் கொண்டே இருப்பதையே, காருக்கொருவர், வேலைக்கொருவர், எனத் திரிவதையோ சகித்துக்கொண்டு, அவளையே கண்கண்ட காதலி என கட்டிக்கொள்ளும் வீரமான ஆண்கள். இவர்களுக்கு எங்கள் தாய்நாட்டை மீட்கப் போராடிய பெண்கள்; காலத்தால் சிறையடைக்கப்பட்டு வெளியே வந்தால் கேவலமானவர்கள் என்ன ஒரு வீரம்! ஆண்மை!

சிங்களனுக்கு தெரிந்தது போலும், எங்கள் இன ஆண்களின் ஆண்மை. அதனால் தானோ என்னமோ, அந்தப் பெண்கள் தவித்திருப்பார்கள் என்று நள்ளிரவுகளில் கதவைத் தட்டி உள்ளே செல்கிறான். புணர்வாழ்வு என்று சொல்லி விடப்பட்ட பல பெண்களை மிரட்டி மிரட்டியே பல தட்டித் தாழ்திறந்த வீடுகளில் பலவந்தமாக காமஇச்சைகளை, சதைகளைப் பிய்த்து காட்டுமிராண்டிகளாகவே இன்னும் தீர்த்துக் கொள்கிறார்கள். களமாக இருந்திருந்தால் பிய்த்து மண்டையோட்டுக் கூழ் குடித்துக் களித்திருப்பர். என்ன செய்வர் இப்போது அவன் கலவிக்குடித்து உறிஞ்சியும், உடுக்கை இழந்தவன் கையாய் படுக்கையில் சரிய நேர்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு பெண்களும் வெவ்வேறு விதங்களில் இவ்வாறு பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். எதிர்காலமிழந்துவிட இவர்களுக்கு யார் ஆறுதல் கொடுக்கப்போகிறார்? அந்தத் தைரியம் யாருக்கு இருக்கிறது?

களத்தில் நிற்கும்போதோ, களப்பணிகளில் ஈடுபடும் போதோ, எந்த வகையான சுய உணர்ச்சிகளுக்கும், சுய இச்சைகளுக்கும் இடமிருக்காது. குடும்ப வாழ்க்கை தாபங்கள், சமூக இடைஞ்சல்கள், தனி உழைப்புகள் என்பன தேவையற்றதாகி விடுகிறது. அதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளிகளும், இருப்பதில்லை. அவர்களுக்கு இருந்த ஒரே பொதுவான நோக்கம் தாய்மண்ணின் விடுதலை.

விடுதலையாகி சிறையிலிருந்து வெளியேவந்து சின்னா பின்னமாக்கப்படுவோம் என எந்த பெண்ணும் நினைத்திருக்க மாட்டாள். இப்பொழுது ஒரு தேசத்திலே முழுவதுமாகக் கைவிடப் பட்டதைப் போன்று, அந்தப் பகுதிகளிலே அனாதையாக்கப்பட்டிருக் கிறார்கள். தங்குவதற்கான வீட்டிற்கோ, அன்றாட உணவிற்கோ கையேந்தும் நிலமைதான். உழைப்புக்காகப் போனால் இவர்களுக்கு வேலைவாய்ப்புகளும் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் ஒரு வாரத்திலோ, ரண்டு வாரத்திலோ நிறுத்தப்படுகிறார்கள். காரணம் வேலை கொடுத்தவர்களுக்கு இந்த படையினரால் மிரட்டல் களும் தொல்லைகளும் வருகின்றன. ஊனமடைந்தவர்களின் நிலையோ இன்னும் பரிதாப கரமானது. இப்படி சூழ்நிலைகளை உருவாக்கி கேப்பார் மேய்பாரற்று மேய்கிறார்கள்.

அப்பு வழமைக்கு மாறாய் இண்டைக்கு பத்தரைப் மணிக் கெல்லாம் வந்திட்டார். என்னமோ தெரியாது அவருக்கு மனசெல் லாம் ஒரு மாதிரிக் கிடந்தது. உடம்பு தளர்ந்து போய்விட்டாய் உணர்ந்தார். வரேக்க வழியெல்லாம் பேத்தியப் பற்றித்தான் யோசினை அவருக்கு. மணி ஆச்சீற்றயும் சொல்லிப் போட்டு, அவர் இருக்கிற ரண்டு ஏக்கர் காணி உறுதியையும் குடுத்துப் போட்டுத்தான் வந்தவர். ஆரோ புறோக்கர் மார் காணி உறுதிய வாங்கிக்கொண்டு, காசு குடுத்து அவுஸ்திரேலியாவுக்கு படகில அனுப்புறாங்களாம். இப்படி நிறையச் சனம் போயிருக்கினம், போய் ஏதோ அங்க இஸ்ரப்படி வாழட்டும், நிம்மதியா இருப்பாள் தானே. நானும் அமைதியாக் கண்ண மூடுவன். எப்பிடியாவது அனுப்பிப் போடோணும். எத்தின நாளைக்குத் தான் பிள்ளை கலை வந்தது மாதிரியும், பித்துப்பிடிச்சது மாதிரியும் நாடகம் போடுறது.

ஒவ்வொரு நாளும் என்னால இதப்பாக்க ஏலாமக் கிடக்கு, தனக்குத் திடீரெண்டு ஏதாவது நடந்திரும் போல கிடக்கு காலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திற்று, நீதான் எப்பிடியாவது எனக்கேதும் நடந்தாலும், பாத்துக் கீத்து அனுப்ப வேணும். வேற ஆரும் பெட்டைக்கு இல்லை மணி. என்று அப்பு உருக்கமா மணி ஆச்சியோட கதைச்சிற்று வந்தாலும், அவருக்கு ஏதோ மாதிரிக்கிடந்தது. தன்ர காலம் நெருங்கிற்று எண்டு அவருக்கு மனசு சொல்லிக் கொண்டிருந்தது.

வழமைபோல வெளிக்குந்திலயே கொஞ்ச நேரம் அமர்ந் திருந்து அந்தக் காணிய மூண்டு பக்கமாயும் பார்த்துப் பெருமூச்சு விட்டார். காலம் காலமா இருந்து வந்த காணி கைமாறப் போகுதே எண்ட கவலை அவருக்கு.

தாழ்வாரத்து வளையில் கிடந்த சாக்கை எடுத்து உதறிப் போட்டார். கனநாளைக்குப் பிறகு கதவு சாத்திக் கிடந்தது, அப்புக்கு கள்ளுக்குடிக்க மனசு இல்லை. துண்டை எடுக்கக் கதவைத் திறந்தார். எண்டைக்குமில்லாமல் அதிகமாய் புளிச்சுநாறியது கள்ளு. அப்புக்கு பார்வையும் கொஞ்சம் மங்கல், உத்துப் பாத்தார். கள்ளு முட்டி உடைஞ்சு சிதறிக் கிடந்தது. திகைச்சுப் போய், மெல்ல ரண்டு அடியெடுத்து வைச்சு இன்னும் உத்துப் பாத்தார். மங்கலான சிம்மிலி லாம்பு வெளிச்சத்தில் வேப்பிலைக்காரியின் உடல் வேப்பம் இலைகளால் போர்த்தியிருந்தது, உள்ளே கடித்துத் தொங்கி ரத்தம் வடிந்து கொண்டிருந்த உதடும், மார்பும், அப்புவின் கண்களுக்குத் தெரியவில்லை. அம்மணமாய் உடம்பு கிடக்குது எண்டு மட்டும் மங்கலான பார்வைக்குள் புலப்படுகிறது. அப்பு இடிஞ்சுபோய் அப்பிடியே இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983இல் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இன ஒழிப்புப் பயங்கரவாதமே Tamil Diasporaவின் ஜனனத்தையும், ஈழர் ஒரு தனித்துவ இனம் என்கிற ஒரு சர்வதேச சமிக்ஞையையும் தோற்று வித்தது. இறையாண்மை குறித்த போரும் எழலாயிற்று. எனவேதான், நீண்டகாலமாகவே போர் இலக்கியம் உட்படப் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தையும் சேர்த்து அடிக்குப் பிந்திய ஈழர் இலக்கியம் என நான் குறிப்பிடுகின்றேன்.

இந்த இலக்கிய ரசனைச் சஞ்சாரத்தின் ஊக்கி முகப்புக் கதையான 'நிர்வாண முக்தி'யே. போரின் விளைவாகச் சிதைந்து போன உடலுடன் மூத்திர வாடையிலிருந்து தன்னியல்பாக விமுக்தி பெறமுடியாத நிலையில் தவிக்கும் சீலன், தன் அங்கவீனத்தை வைத்துப் பிழைப்பு நடத்தும் அயோக்கியத்தனத்தைத் தட்டிக் கேட்க முடியாத நிலையிலும், தன் உடல் இச்சைகளுக்கு முக்தியளிக்க ஒரு பெண்ணுடன் வைத்திருக்கும் உறவு எவ்விடத்திலும் வாசகரின் காமவக்கிரங்களுக்கு தீனிபோடாத நுட்பத்துடன் 'நிர்வாண முத்தி' சித்திரிக்கின்றது.

ISBN 978-9381322123
9 789381 322123

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org